winmeen.com

# NOTES

# QUESTIONS

## 9ஆம் வகுப்பு
## பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள்
## (வினாக்கள் வடிவில்)



## ஒன்பதாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 1

**1] "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வான்மீகி **2] கம்பர்** 3] இளங்கோவடிகள் 4] திருவள்ளுவர்

**2] யாவையும் - இலக்கணக்குறிப்பு தருக?**

1] எண்ணும்மை **2] முற்றும்மை** 3] உருவகம் 4] உவமேயம்

**3] விளையாட்டு - இலக்கணக்குறிப்பு தருக?**

**1] தொழிற்பெயர்** 2] வினைத்தொகை 3] பண்புத்தொகை 4] இவற்றில் ஏதுமில்லை

**4] உடையார் = உடை+ய்+ஆர்; - இதில் ய் - என்பது எதனைக் குறிக்கும்?**

1] பகுதி 2] விகுதி **3] சந்தி** 4] விகாரம்

**5] கம்பர் பிறந்த ஊரான மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூர் - எந்த மாவட்டத்தில் உள்ளது?**

1] தஞ்சாவூர் 2] திருவாரூர் **3] நாகப்பட்டினம்** 4] கடலூர்

**6] வேறுபட்டது எது?**

1] ஏர் எழுபது 2] சரசுவதி அந்தாதி

**3] திருவரங்கத்து அந்தாதி** 4] சடகோபர் அந்தாதி

**குறிப்பு:- திருவரங்கத்து அந்தாதி - பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அவர்கள் எழுதியது. மீதமுள்ள மூன்றும் கம்பர் எழுதியது.**

**7] திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர் யார்?**

1] ஔவையார் 2] புகழேந்திப் புலவர் 3] இளங்கோவடிகள் **4] கம்பர்**

**8] கவிச்சக்கரவர்த்தி எனவும் கல்வியில் பெரியர் ----------- எனவும் போற்றப்படுபவர் யார்?**

1] திருவள்ளுவர் 2] மாணிக்கவாசகர் 3] திருமூலர் **4] கம்பர்**

**9] "நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா" - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள கம்பராமாயண (இராமாவதாரம்) காண்டம் எது?**

1] ஆரணியகாண்டம் 2] கிட்கிந்தாகாண்டம் 3] யுத்தகாண்டம் **4] பாலகாண்டம்**

**10] கம்பரின் காலம் ------------- நூற்றாண்டு எனக் கூறுவர்?**

1] கி.பி. 2 2] கி.பி. 6 3] கி.பி. 10 **4] கி.பி. 12**

**11] அகழ்வார், இகழ்வார் - இலக்கணக்குறிப்பு தருக?**

1] தொழிற்பெயர்

2] வினைத்தொகை

**3] வினையாலணையும் பெயர்**

4] குறிப்பு வினைமுற்று

**12] அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத், தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை - - இந்த குறளில் பயின்று வரும் அணி ?**

1] வேற்றுமையணி 2] உயர்வுநவிற்சி அணி **3] உவமையணி** 4] பிறிதுமொழிதல் அணி

**13] பொறுத்தல், மறத்தல், ஒரால், பொறை - இலக்கணக்குறிப்பு தருக?**

**1] தொழிற்பெயர்**

2] வினைத்தொகை

3] வினையாலணையும் பெயர்

4] குறிப்பு வினைமுற்று

**14] [அ] இன்மை - வறுமை; [ஆ] ஒரால் - தண்டித்தவரை; [இ] மடவார் - அறிவிலிகள்; [ஈ] நிறை - சால்பு; - இவற்றில் பொருந்தாதது எது?**

1] அ **2] ஆ** 3] இ 4] ஈ

**குறிப்பு :- ஒரால் - தவிர்த்தல் என்று பொருள்.**

**15] இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**

**வன்மை மடவார்ப் பொறை - இந்த குறளில் பயின்று வரும் அணி ?**

1] வேற்றுமையணி **2] எடுத்துக்காட்டு உவமையணி**

3] உவமையணி 4] பிறிதுமொழிதல் அணி

**16] செய்யினும் - இலக்கணக்குறிப்பு தருக?**

1] தொழிற்பெயர் 2] வினைத்தொகை **3] இழிவுச்சிறப்பும்மை** 4] குறிப்பு வினைமுற்று

**17] ஒறுத்தார்க் கொருநாளை இன்பம், பொறுத்தார்க்குப் - விடுபட்டதை நிரப்பவும்?**

1] இன்னாச்சொல் நோற்கிற்பவர்

**2] பொன்றும் துணையும் புகழ்**

3] தகுதியான் வென்று விடல்

4] அறனல்ல செய்யாமை நன்று

**18] ஒறுத்தார் - ஒறு+த்+த்+ஆர். ஒறு - பகுதி; த் - சந்தி; த் - இறந்தகால இடைநிலை; ஆர் - என்பது என்ன?**

**1] பலர்பால் வினைமுற்று விகுதி** 2] தொழிற்பெயர் விகுதி

3] பெயரெச்ச விகுதி 4] ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

**19] விக்டோரியா மகாராணியார், கண்விழித்ததும் முதலில் படித்த நூல் எது?**

1] இராமாயணம் **2] திருக்குறள்** 3] குரான் 4] பைபிள்

**20] இறந்தார், துறந்தார், நோற்கிற்பவர், ஒறுத்தார், செய்தாரை - இலக்கணக்குறிப்பு தருக?**

1] தொழிற்பெயர் 2] வினைத்தொகை **3] வினையாலணையும் பெயர்** 4] குறிப்பு வினைமுற்று



winmeen.com

**21] அனைத்து நாட்டினரும் இனத்தினரும் தமக்கே உரியதெனக் கொண்டாடும் வகையில் பொதுமைக் கருத்துகளைப் படைத்தவர் ?**

1] கம்பர் 2] பாரதியார் 3] வாணிதாசன் **4] திருவள்ளுவர்**

**22] நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாகவி, மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் - இவற்றில் பொருந்தாதது எது?**

1] தேவர் **2] மாகவி** 3] மாதானுபங்கி 4] முதற்பாவலர்

**குறிப்பு :- மாகவி - பாரதியாரின் சிறப்பு பெயர்.**

**23] ஏழு சீர்களைக் கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆன நூல் எது?**

1] சிலப்பதிகாரம் 2] மதுரைக்காஞ்சி **3] திருக்குறள்** 4] நாலடியார்

**24] திருக்குறளை போற்றிப் பாராட்டிய பாடல்களின் தொகுப்பு ----------?**

**விடை :- திருவள்ளுவமாலை.**

**25] திருக்குறளுக்கு அந்நாளிலேயே எத்தனை பேர் உரை எழுதியுள்ளனர்?**

1] பன்னிரண்டு **2] பதின்மர்** 3] இருபத்து மூவர் 4] ஏழு

**குறிப்பு :- திருக்குறளுக்கு அந்நாளிலேயே பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவ்வுரைகளுள், பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர் தமிழ்ச் சான்றோர்.**

**திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மர் : 1.தருமர், 2.மணக்குடவர், 3.தாமத்தர், 4.நச்சர், 5.பரிதி, 6.பரிமேலழகர், 7.திருமலையர், 8.மல்லர், 9.பரிப்பெருமாள், 10.காளிங்கர்.**

**26] தம் எண்ணங்களையும் கருத்துகளையும் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக விளங்குவது எது?**

1] எண்ணம் 2] செயல் **3] மொழி** 4] அறிவு

**27] இந்தியாவில் பேசப்படும் மொழிகள் அனைத்தையும் எத்தனை மொழிக்குடும்பங்களுள் அடக்குவர் மொழியியல் அறிஞர்?**

1] மூன்று **2] நான்கு** 3] ஐந்து 4] ஆறு

**குறிப்பு :- இந்தோ - ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ - ஆசிய மொழிகள், சீன - திபெத்திய மொழிகள்.**

**28] நம் நாட்டில் ஆயிரத்து முந்நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளும், அதன் கிளைமொழிகளும் பேசப்படுகின்றன. ஆதலால், இந்திய நாட்டை, 'மொழிகளின் காட்சிச்சாலை' (Museum of Languages) எனக் குறிப்பிட்டவர் யார்?**

1] கால்டுவெல் **2] மொழியியல் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம்** 3] குமாரிலபட்டர் 4] முஸ்தபா

**29] இருபத்து மூன்றனுக்கும் மேற்பட்ட திராவிட மொழிகள் உள்ளன. இம்மொழிகளை எத்தனை வகைகளாக பிரிப்பர்?**

**1] மூன்று** 2] நான்கு 3] ஐந்து 4] ஆறு

**குறிப்பு :- தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூவகையாகப் பிரிப்பர்.**

**30] தென்திராவிட மொழிகளை கூறுக?**

**தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா.**

**31] நடுத்திராவிட மொழிகளை கூறுக?**

**தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, முண்டா.**

**32] வடதிராவிட மொழிகளை கூறுக?**

**குருக், மால்தோ, பிராகுய்.**

**33] திராவிட மொழிகள், திராவிடஇனம், திராவிட நாகரிகம் என்னும் சொற்றொடர்களுள் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கால்டுவெல், தமது எந்த நூலில் குறிப்பிட்டு உள்ளார் ?**

1] திராவிட மொழியியல் இனவியல் நாட்டுப்புறக் கதைகள்

**2] திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்**

3] திராவிட மொழிகளின் அடிச்சொல் அகராதி

4] திராவிட மொழியியல் இனவியல் நாட்டுப்புறக் கதைகள்

**34] திராவிடம் என்னும் சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர் யார்?**

1] மாக்சுமுல்லர் 2] ஜியுபோப் **3] குமரிலபட்டர்** 4] அகத்தியலிங்கம்

**குறிப்பு :- குமரிலபட்டர் திராவிடம் என்னும் சொல்லை முதன்முதலில் உருவாக்கினார். கால்டுவெல் அதனைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தார்.**

**35] மொழியியல் அறிஞர், தொடக்கக் காலத்தில் தமிழையும் அதன் கிளைமொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளையும் ------------- என்று வழங்கினர் ?**

**விடை :- தமிளியன் (Tamilian) அல்லது தமுலிக் (Tamulic)**

**36] திராவிட என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லிலிருந்து உருவானது. தமிழ் > திரமிள > திரவிட > திராவிட என உருவாயிற்று என்று கூறியவர் யார்?**

1] ஜியுபோப் **2] ஈராஸ் பாதிரியார்** 3] பாரதியார் 4] அகத்தியலிங்கம்

**37] இவற்றை முறைப்படி வரிசைப்படுத்துக?**

1] தமிழ் > திராவிட > திரவிட > திரமிள

2] தமிழ் > திரவிட > திரமிள > திராவிட

3] தமிழ் > திரவிட > திராவிட > திரமிள

**4] தமிழ் > திரமிள > திரவிட > திராவிட**

**குறிப்பு :- இந்த வினா TNPSC தேர்வுகளில் இரண்டு முறை கேட்கப்பட்டுள்ளது. கவனத்துடன் படிக்கவும்.**

**38] எந்த நிறுவனம், அழிந்து வரும் பண்டைய தமிழ் ஓலைச்சுவடிகளைப் புதுப்பித்துப் பாதுகாக்க, பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது?**

1] கன்னிமேரா நூலக நிறுவனம்

2] இந்திய கலாச்சார நிறுவனம்

**3] யுனெஸ்கோ**

4] இவற்றில் ஏதுமில்லை

**39] கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம் எது?**

1] டெரா ஆஸ்திராலிசு 2] கேர்கைலன் 3] மூ கண்டம் **4] இலெமூரியாக் கண்டம்**

**40] தமிழ்மொழியில் இன்று நமக்குக்கிடைத்துள்ள நூல்களுள் மிகப் பழைமையான நூல் எது?**

1] திருக்குறள் 2] கலிங்கத்துப்பரணி **3] தொல்காப்பியம்** 4] சிலப்பதிகாரம்

குறிப்பு :- தொல்காப்பியம். இந்நூல் ஓர் இலக்கண நூல்.

**41] எண்பது விழுக்காடு அளவுக்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிட மொழி எது?**

1] தெலுங்கு 2] மலையாளம் **3] தமிழ்** 4] கன்னடம்

**42] தொன்மை, தனித்தன்மை, மொழிகளின் தாய், சொல்வளம், இலக்கிய இலக்கணவளம், சிந்தனைவளம், கலைவளம், பண்பாட்டுவளம் இவற்றுடன் பன்னாட்டு மொழியாக விளங்கும் தன்மையைப் பெற்ற மொழியே --------------- எனப்படும்?**

**விடை :- செவ்வியல்மொழி**

**43] மாமரம் - என்ற துணைப்பாடம் எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது ? அல்லது அதன் ஆசிரியர் யார் என வினா கேட்கலாம்.**

**விடை - புவியரசு - இரவின் அறுவடை**

**44] மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது எது?**

**விடை :- மொழி**

**45] ஒருவர், தம் கருத்தை வெளியிடவும், அதனைக் கேட்போர் புரிந்துகொள்ளவும் கருவியாக அமைவது எது?**

**விடை :- மொழி**

**46] மொழியை பிழையின்றிப் பேசவும் கேட்கவும் கற்கவும் எழுதவும் துணைசெய்வது -------------- ஆகும்?**

**விடை :- இலக்கணம்**

**47] தமிழிலக்கணம் எத்தனை வகைப்படும்?**

1] 4 **2] 5** 3] 6 4] 7

**குறிப்பு :- 1.எழுத்திலக்கணம், 2.சொல்லிலக்கணம், 3.பொருளிலக்கணம், 4.யாப்பிலக்கணம், 5.அணியிலக்கணம் - எனத் தமிழிலக்கணம் ஐவகைப்படும்.**

**48] எழுத்து எத்தனை வகைப்படும்?**

**விடை :- முதலெழுத்து, சார்பெழுத்து என எழுத்துகள் இருவகைப்படும்.**

**49] முதலெழுத்துகள் என்றால் என்ன? ஏன் முதலெழுத்துகள் - என அழைக்கப்படுகின்றன?**

**விடை :- அ முதல் ஔ வரை உள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், க் முதல் ன் வரை உள்ள மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களும் முதலெழுத்துகளாகும். இவை சார்பு எழுத்துகள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் இருப்பதால் முதலெழுத்துகள் என அழைக்கப்படுகின்றன.**



winmeen.com

**50] சார்பெழுத்துகள் என்றால் என்ன? அவை எத்தனை வகைப்படும்?**

**விடை :- முதல் எழுத்துகளைச் சார்ந்து இயங்கும் எழுத்துக்கள் சார்பெழுத்துகள் எனப்படும். இவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்து வகைப்படும்.**

**51] செய்யுளில் ஓசை குறையும்போது ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் தமக்குரிய ------------------- மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலிப்பதை --------------------- என்கிறோம்.**

1] இரண்டு; ஆகுபெயர் 2] மூன்று; புணர்ச்சி **3] இரண்டு; அளபெடை** 4] மூன்று; அணி

**குறிப்பு :- அளபு = மாத்திரை; எடை = எடுத்தல் என்பது பொருள்; அதாவது எழுத்தினது மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல்.**

**52] அளபெடை எத்தனை வகைப்படும்?**

**1] 2** 2] 3 3] 4 4] 5

**குறிப்பு :- அளபெடை இரண்டு வகைப்படும். உயிரளபெடை, ஒற்றளபெடை. [ (குறில் - அ, இ, உ, எ, ஒ); (நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ) ]**

**53] செய்யுளில் ஓசை குறையும்போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) ஏழும் அளபெடுக்கும். இஃது --------------- எனப்படும்?**

**விடை :- உயிரளபெடை**

**குறிப்பு:- செய்யுளில் ஓசை குறையும்போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) ஏழும் அளபெடுக்கும். இஃது உயிரளபெடை எனப்படும். அவ்வாறு அளபெடுக்கும்போது, அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் அதன் பக்கத்தில் வரும். ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனஎழுத்தாக வரும்.**

**54] உயிரளபெடை எத்தனை வகைப்படும்?**

1] 2 **2] 3** 3] 4 4] 5

**குறிப்பு :- உயிரளபெடை மூன்று வகைப்படும். அவையாவன:- (1)செய்யுளிசை (இசைநிறை) அளபெடை (2)இன்னிசை அளபெடை (3)சொல்லிசை அளபெடை.**

**55] செய்யுளில் ஓசை குறையும் இடத்தில் அந்த ஓசையை நிறைவுசெய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற உயிர்நெடில் எழுத்துகள் ஏழும், தமக்கு இனமாகிய குறில் எழுத்துகளைப் பெற்று உரிய மாத்திரையிலிருந்து மிகுந்தொலிக்கும். இதனை -------------- அளபெடை எனக் கூறுவர்?**

**1] செய்யுளிசை (இசைநிறை) அளபெடை**

2] இன்னிசை அளபெடை

3] சொல்லிசை அளபெடை

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம் :- செய்யுளில் ஓசை குறையும் இடத்தில் அந்த ஓசையை நிறைவுசெய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற உயிர்நெடில் எழுத்துகள் ஏழும், தமக்கு இனமாகிய குறில் எழுத்துகளைப் பெற்று உரிய மாத்திரையிலிருந்து மிகுந்தொலிக்கும். இதனை செய்யுளிசை (இசைநிறை) அளபெடை எனக் கூறுவர்.**

**சான்று: கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**

**விடாஅர் விழையும் உலகு.**

**கெடா என்பது கெடா அ என இறுதியிலும், விடார் என்பது விடா அர் என இடையிலும் அளபெடுத்து வந்துள்ளது.**

**செய்யுளிசை (இசைநிறை) அளபெடை :- செய்யுளின் ஓசையை நிறைவு செய்ய ஈரசை கொண்ட சீர்களாக மட்டும் வரும். (எ-டு) உழா அர், படா அர்.**

**செய்யுளிசை அளபெடைக்கு - இசைநிறை அளபெடை என்ற வேறு பெயரும் உண்டு.**

**56] கெடுப்பதூ உம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**

**எடுப்பதூ உம் எல்லாம் மழை.**

**- இந்த குறள் எந்த அளபெடைக்கான எடுத்துக்காட்டு?**

1] செய்யுளிசை (இசைநிறை) அளபெடை

**2] இன்னிசை அளபெடை**

3] சொல்லிசை அளபெடை

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம் :- கெடுப்பதும் , எடுப்பதும் என்று ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காக து என்னும் குறில் தூ என நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை.**

**57] இனிய ஓசைக்காக மூவசை கொண்ட சீர்களாக மட்டும் வருவது எது?**

1] செய்யுளிசை (இசைநிறை) அளபெடை

**2] இன்னிசை அளபெடை**

3] சொல்லிசை அளபெடை

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம் :- இன்னிசை அளபெடை இனிய ஓசைக்காக மூவசை கொண்ட சீர்களாக மட்டும் வரும். (எ-டு) கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்.**

**58] குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**

**அடிதழீஇ நிற்கும் உலகு**

**- இந்த குறள் எந்த அளபெடைக்கான எடுத்துக்காட்டு?**

1] செய்யுளிசை (இசைநிறை) அளபெடை

2] இன்னிசை அளபெடை

**3] சொல்லிசை அளபெடை**

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம்:- இக்குறட்பாவில் தழீஇ என்னும் சொல் அளபெடுத்து வந்துள்ளது. தழீ - தழுவுதல் என்னும் தொழிற்பெயர்ச்சொல். தழீஇ (தழுவி) என வினையெச்ச சொல்லாக அளபெடுத்ததால் இது சொல்லிசை அளபெடை ஆயிற்று.**

**59] பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வருவது எந்த அளபெடை?**

1] செய்யுளிசை (இசைநிறை) அளபெடை

2] இன்னிசை அளபெடை

**3] சொல்லிசை அளபெடை**

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம்:- பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வருவது சொல்லிசை அளபெடை. இது இ என்னும் எழுத்தில் முடிவு பெற்றிருக்கும். (எ-டு) நசைஇ, நிறீஇ.**

**60] செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும். இஃது --------------- அளபெடை எனப்படும்.**

1] செய்யுளிசை (இசைநிறை) அளபெடை

2] இன்னிசை அளபெடை

3] சொல்லிசை அளபெடை

**4] ஒற்றளபெடை**

**விளக்கம் :- செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும். இஃது ஒற்றளபெடை எனப்படும்.**

**எங்ங்கி றைவனுள் னென்பாய்**

**வெஃஃகுவார்க் கில்லை வீடு**

**இத்தொடர்களில் உள்ள ங் மற்றும் ஃ ஆகிய எழுத்துகள் இருமுறை வந்துள்ளன. இவ்வாறு ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல்,ள் ஆகிய பத்து மெய்யும், ஃ ஒன்றும் ஆகப் பதினோரு எழுத்துகளும் ஒரு குறிலை அடுத்தும் இரு குறில்களை அடுத்தும் செய்யுளில் இனிய ஓசை வேண்டி அளபெடுக்கும். இவ்வாறு அளபெடுப்பதற்கு ஒற்றளபெடை என்பது பெயர்.**

**ஒற்றளபெடை - வல்லினத்து க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும், இடையினத்தில் ர், ழ் என்னும் இரண்டும் ஆக இந்த எட்டு மெய்யெழுத்துகள் தவிரப் பிற மெய்யெழுத்துகள் அளபெடுக்கும்.**

**61] உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் ஆகிய எழுத்து வகைகளின் மாத்திரை அளவு எத்தனை?**

**1] ஒன்று** 2] அரை 3] மூன்று 4] இரண்டு

**62] உயிர்நெடில், உயிர்மெய்நெடில் - ஆகிய எழுத்து வகைகளின் மாத்திரை அளவு எத்தனை?**

1] ஒன்று 2] அரை 3] மூன்று **4] இரண்டு**

**63] மெய், ஆய்தம் - ஆகிய எழுத்து வகைகளின் மாத்திரை அளவு எத்தனை?**

1] ஒன்று **2] அரை** 3] மூன்று 4] இரண்டு

**64] உயிரளபெடை - எழுத்து வகைகளின் மாத்திரை அளவு எத்தனை?**

1] ஒன்று 2] அரை **3] மூன்று** 4] இரண்டு

**65] ஒற்றளபெடை ஆகிய எழுத்து வகைகளின் மாத்திரை அளவு எத்தனை?**

**1] ஒன்று** 2] அரை 3] மூன்று 4] இரண்டு

**66] உறா அர்க் குறுநோய் உரைப்பாய் – இத்தொடரில் __________ அளபெடை வந்துள்ளது**

**1) செய்யுளிசை** 2) இன்னிசை 3) சொல்லிசை 4)ஒற்றளபெடை

**67] உடுப்பதூஉம் துய்யப்பதூஉம் இல்லார்க்கு - இக்குறட்பாத் தொடரில் --------------------- அளபெடை வந்துள்ளது.**

1) செய்யுளிசை **2) இன்னிசை** 3) சொல்லிசை 4)ஒற்றளபெடை

**68] சொல்லிசை அளபெடையைத் தேர்வு செய்க.**

1] எச்சம் பெறாஅ விடின்

**2] வரனசைஇ இன்னும் உள்ளேன்**

3] உண்பதூஉம், உடுப்பதூஉம்

4] இவற்றில் ஏதுமில்லை

**69] எழுத்துகள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ?**

**விடை :- ஒலியணுக்கள்.**

**70] மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலிஎழுத்து என்று கூறும் நூல் எது?**

**விடை :- நன்னூல்.**

**71] எழுத்துகளின் பிறப்பை எத்தனை வகைகளாக பிரிக்கலாம்?**

1] 5 2] 4 3] 3 **4] 2**

**விளக்கம் :- எழுத்துகளின் பிறப்பை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இருவகையாகப் பிரிக்கலாம். எழுத்துகள் தோன்றுகின்ற மார்பு முதலானவற்றை இடப்பிறப்பு எனவும் [ இடப்பிறப்பு ( காற்றறைகள் - மார்பு, கழுத்து, தலை, மூக்கு ) ], உதடு முதலான உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு எனவும் [ முயற்சிப் பிறப்பு ( ஒலிப்பு முனைகள் - இதழ், நா, பல், அண்ணம் ] கூறுவர்.**

**72] மெய்யெழுத்துகளை ஒலிக்கும்போது வேறுபட்ட எத்தனை ஒலிகளை கேட்கலாம்?**

1] 5 2] 4 **3] 3** 4] 2

**விளக்கம் :- மெய்யெழுத்துகளை ஒலிக்கும்போது வேறுபட்ட மூன்று ஒலிகளை நாம் கேட்கலாம். அவை வல்லின ஒலி, மெல்லின ஒலி, இடையின ஒலி. இவ்வொலிகள் வேறுபடுவதற்குக் காரணம், அவை பிறக்கும் இடங்கள் வேறுபடுவனவே.**

**73] ஒலி எழக் காரணமான காற்று நிலைபெறும் இடங்களைக் ---------------- எனவும், ஒலி எழுவதற்குத் துணை செய்யும் உறுப்புகளை -------------------- எனவும் கூறுவர்.**

**விடை:- காற்றறைகள், ஒலிப்புமுனைகள்..**

**74] பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், இடையின ( ய, ர, ழ, வ, ல, ள ) எழுத்துகள் ஆறும் எங்கிருந்து பிறக்கின்றன?**

1] மூக்கு 2] மார்பு **3] கழுத்து** 4] நா

**75] மெல்லின எழுத்துகள் (ங,ஞ,ண,ந,ம,ன) ஆறும் எங்கிருந்து பிறக்கின்றன?**

**1] மூக்கு** 2] மார்பு 3] கழுத்து 4] நா

**76] வல்லின எழுத்துகள் (க,ச,ட,த,ப,ற) ஆறும் எங்கிருந்து பிறக்கின்றன?**

1] மூக்கு **2] மார்பு** 3] கழுத்து 4] நா

**விளக்கம் :- ஆவி இடைமை இடமிடறு ஆகும்**

**மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை -- நன்னூல்.**

**( ஆவி - உயிரெழுத்து; இடைமை - இடையினம்; மிடறு - கழுத்து; மென்மை - மெல்லினம்; உரம் - மார்பு. )**

**77] ----------- ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன.**

1] இ, ஈ **2] அ, ஆ** 3] ஏ, ஐ 4] ஒ, ஓ

**விளக்கம் :- அவற்றுள், முயற்சியுள் அஆ அங்காப்புடைய (நன்னூல்-76). (அங்காப்பு - வாயைத் திறத்தல்)**

**78] ------------ ஆகிய ஐந்து எழுத்துகளும் வாயைத் திறப்பதோடு மேல்வாய்ப் பல்லை, நா விளிம்பு தொடுவதால் பிறக்கின்றன.**

**விடை :- இ, ஈ, எ, ஏ, ஐ**

**79] ----------------ஆகிய ஐந்து எழுத்துகளும் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் பிறக்கின்றன.**

**விடை :- உ, ஊ, ஒ, ஓ, ஔ**

**80] ------------- இவ்விரு மெய்களும் நாவினது முதற்பகுதி அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.**

**1] க், ங்** 2] ச், ஞ் 3] ட், ண் 4] த், ந்

**81] ------------ இவ்விரு மெய்களும் இடை நா (நடு நாக்கு) நடு அண்ணத்தைத் தொடுவதனால் பிறக்கின்றன.**

1] க், ங் **2] ச், ஞ்** 3] ட், ண் 4] த், ந்

**82] -------------- இவை, நாவினது நுனி, அண்ணத்தினது நுனியைத் தொடுவதனால் பிறக்கின்றன.**

1] க், ங் 2] ச், ஞ் **3] ட், ண்** 4] த், ந்

**83] --------------- மேல்வாய்ப் பல்லினது அடியை, நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துகள் தோன்றுகின்றன.**

1] க், ங் 2] ச், ஞ் 3] ட், ண் **4] த், ந்**

**84] ------------- மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த, இவ்வெழுத்துகள் பிறக்கும்.**

**1] ப், ம்** 2] ய் 3] ர், ழ் 4] ட், ண்

**85] ----------- இது, நாக்கினது அடிப்பகுதி, மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதனால் பிறக்கின்றது.**

1] ப், ம் **2] ய்** 3] ர், ழ் 4] ட், ண்

**86] -------------- இவை, மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன.**

1] ப், ம் 2] ய் **3] ர், ழ்** 4] ட், ண்

**87] ------------- இது, மேல்வாய்ப் பல்லின் அடியை, நாவினது ஓரங்கள் தடித்து நெருங்குவதனால் பிறக்கிறது.**

**1] ல்** 2] வ் 3] ள். 4] ற், ன்

**88] ----------- இது, மேல்வாயை, நாவினது ஓரங்கள் தடித்துத் தடவுவதனால் பிறக்கிறது.**

1] ல் 2] வ் **3] ள்** 4] ற், ன்

**89] ------------ இது, மேல்வாய் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கின்றது.**

1] ல் **2] வ்** 3] ள் 4] ற், ன்

**90] ----------------- இவை, மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன.**

1] ல் 2] வ் 3] ள் **4] ற், ன்**

**91] ஆய்தமாகிய சார்பெழுத்து, -------------யை இடமாகக்கொண்டு பிறக்கிறது.**

**1] தலை** 2] மார்பு 3] நா 4] மூக்கு

**விளக்கம் :- ஆய்தமாகிய சார்பெழுத்து, தலையை இடமாகக்கொண்டு பிறக்கிறது. அதன் முயற்சிப் பிறப்பு வாயைத் திறந்து ஒலித்தலே ஆகும்.**

**92] உன்னையே நீ அறிவாய் - இது யாருடைய கூற்று?**

1] காந்தி 2] சேக்சுபியர் **3] சாக்ரடீசு** 4] நேரு

**93] "தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்சா" - என்று கல்கி அவர்களால் பாராட்டப்பெற்றவர் யார்?**

**1] அண்ணா** 2] பெரியார் 3] மு.வரதராசனார் 4] வாணிதாசன்

**குறிப்பு :- பெர்னாட்சா - எழுத்தாளர் , சிறந்த நாடக ஆசிரியர். இவரின் ஊர் அயர்லாந்து.**

**94] இழப்பிலும் கடமை உணர்வுடன் வாழ்ந்தவர் யார்?**

**விடை :- பம்மல் சம்பந்தனார்.**

## மொழித்திறன் பயிற்சி

* சுவிட்ச் - பொத்தான்

* ஐஸ்வாட்டர் - குளிர் நீர்

* கூல்ட்ரிங்ஸ் - குளிர்பானம்

* கிரைண்டர் - மின் அரைவை

* பிரிஜ் - குளிர்சாதனப் பெட்டி

* டீ - தேநீர்

* வாஷிங்மெஷின் - சலவை இயந்திரம்

* டெலிபோன் - தொலைபேசி

## பழமொழி அறிவோம்

* 1. Bend the tree while it is young

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

* 2. As is the mother, so is her daughter

தாயைப்போலப் பிள்ளை, நூலைப் போல சேலை

* 3. A friend in need is a friend indeed

உயிர்காப்பான் தோழன்

* 4. A man of courage never wants weapons

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

* 5. Blood is thicker than water

தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.

## ஒன்பதாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 2

1] கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

1] திருக்குறள், திருவள்ளுவர்

2] நாலடியார், சமணமுனிவர்

**3] சிறுபஞ்சமூலம், காரியாசன்**

4] பாஞ்சாலி சபதம், பாரதியார்

2] வாட்டான்நன் றென்றால் வனப்பு - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் யாது?

1] திருக்குறள்

2] நாலடியார்

**3] சிறுபஞ்சமூலம்**

4] பாஞ்சாலி சபதம்

3] பொருத்தமற்றதை தேர்வு செய்க.

(1) கண்ணுக்கு அழகு - இரக்கம் கொள்ளல்

(2) காலுக்கு அழகு - பிறரிடம் இறந்து செல்லாமை

(3) இசைக்கு அழகு - கேட்போர் நன்றெனப் புகழ்தல்

**(4) அரசனுக்கு அழகு - செல்வம் சேர்ப்பது**

குறிப்பு :- அரசனுக்கு அழகு - குடிமக்களை வருத்தாமல் காப்பவன் என்று, பிறர் அவனைப் புகழ்ந்து உரைத்தல்.

4] பொருத்தமற்றதை தேர்வு செய்க.

(1) கண்ணோட்டம் - இரக்கம் கொள்ளுதல்

(2) எண்வனப்பு - ஆராய்சிக்கு அழகு

(3) வேந்தன் - அரசன்

**(4) வனப்பு - காடு**

5] கண்ணோட்டம், செல்லாமை, உரைத்தல், என்றல் - இலக்கணக்குறிப்பு தருக.

1] வினைத்தொகை

**2] தொழிற்பெயர்**

3] வினையாலணையும் பெயர்

4] பண்புத்தொகை

6] கேட்டார், வாட்டான் - இலக்கணக்குறிப்பு தருக.

1] வினைத்தொகை

2] தொழிற்பெயர்

**3] வினையாலணையும் பெயர்**

4] பண்புத்தொகை

7] கேட்டார் - கேள் (ட்) + ட் + ஆர். இதில் கேள் - பகுதி; ள் - ட் ஆனது விகாரம்; ட் - இறந்தகால இடைநிலை; ஆர் - என்பது என்ன?

[1] ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

**[2] பலர்பால் வினைமுற்று விகுதி**

[3] தொழிற்பெயர் விகுதி

[4] ஆண்பால் வினைமுற்று விகுதி

8] கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை

எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - பண்வனப்புக்

கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னாடு

வாட்டான்நன் றென்றல் வனப்பு

- இந்த பாடலில் பயின்று வரும் அணி யாது?

[1] சொல் பின்வருநிலை அணி

[2] பொருள் பின்வருநிலை அணி

**[3] சொற்பொருள் பின்வருநிலை அணி**

[4] ஏகதேச உருவக அணி

9] ------------ என்பவர், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர் எனச் --------------- கூறுகிறது.

[1] ஔவையார், நன்னூல்

**[2] காரியாசான், சிறப்புப்பாயிரம்**

[3] முன்றுறை அரையனார், பழமொழி நானூறு

[4] இவற்றில் ஏதுமில்லை

10] காரியாசான் எந்த சமயத்தைச் சார்ந்தவர்?

[1] புத்த சமயம்

**[2] சமண சமயம்**

[3] ஜொராஸ்டிரம்

[4] சீக்கியம்

11] காரியாசனும் --------------- என்பவரும் ஒருசாலை மாணாக்கராவர்.

[1] ஔவையார்

[2] புகழேந்திப்புலவர்

[3] கம்பர்

**[4] கணிமேதாவியார்**

12] சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. சிறுபஞ்சமூலம் நூலின் ஆசிரியர் யார்?

[1] ஔவையார்

**[2] காரியாசான்**

[3] முன்றுறை அரையனார்

[4] விளம்பிநாகனார்

13] சிறுபஞ்சமூலம் நூலில் கடவுள் வாழ்த்துடன் ----------------- வெண்பாக்கள் உள்ளன.

[1] 90 [2] 100 **[3] 97** [4] 107

14] சிறுபஞ்சமூலம் நூலில் கூறப்பட்டுள்ள ஐந்து மூலிகையின் பெயர்கள் என்ன?

[1] கண்டங்கத்திரி, மஞ்சள், சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி

[2] கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, ஏலக்காய், பெருமல்லி, நெருஞ்சி

**[3] கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி**

[4] கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, கீழாநெல்லி, பெருமல்லி, நெருஞ்சி

15] சிறுபஞ்சமூலம் நூலில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் எத்தனை கருத்துகள் கூறப்பட்டுள்ளன?

[1] 3 [2] 4 **[3] 5** [4] 6

16] பின்வருநிலையணி எத்தனை வகைப்படும்?

1] 2 2] 3 **3] 4** 4]5

விளக்கம் :- ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ பின்னர்ப் பலவிடத்தும்வரின் அது பின்வருநிலையணி ஆகும். இது, சொல்பின்வருநிலையணி, பொருள்பின்வருநிலையணி, சொற்பொருள் பின்வருநிலையணி, உவமைப் பின்வருநிலையணி என நால்வகைப்படும்.

17] ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் அதன் பொருளும் பின்னர்ப் பலவிடத்தும்வரின், அது ------------------------ ஆகும்?

1] சொல்பின்வருநிலையணி

2] உவமைப் பின்வருநிலையணி

**3] சொற்பொருள் பின்வருநிலையணி**

4] பொருள்பின்வருநிலையணி

18] கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய முப்பெரும் படைப்புகளின் ஆசிரியர் யார்?

1] பாரதிதாசன்

2] வாணிதாசன்

**3] பாரதியார்**

4] இராமலிங்கனார்

**19] இந்திர மாநகரை ஆண்டுவந்தவர்கள் யார்?**

விடை :- பாண்டவர்.

**20] மாநகர் - இலக்கணக்குறிப்பு தருக?**

1] வினையெச்சம்

2] வினையாலணையும் பெயர்

**3] உரிச்சொற்றொடர்.**

4] தொழிற்பெயர்

**21] "நாமும் ஒரு மண்டபம் அமைத்து, அதனைக் காண்பதற்குப் பாண்டவரை அழைப்போம்; தருமனைச் சூதாடச் செய்து, நாம் நினைத்ததனை முடிப்போம்" - என்று கூறியவர் யார்?**

1] துரியோதனன்

2] திருதராட்டிரன்

3] விதுரன்

**4] சகுனி.**

22] துரியோதனனின் தந்தை பெயர் என்ன?

விடை :- திருதராட்டிரன்

**23] "கொம்பினை யொத்த மடப்பிடி யோடும் - இங்கு மடப்பிடி என்பதன் பொருள் யாது?**

விடை :- பாஞ்சாலி

**24] இவற்றில் பொருந்தாதது எது?**

1] அழைத்தனன் - முற்றெச்சம்

2] சார்ந்தவர் - வினையாலணையும் பெயர்

3] நுந்தை - நும் தந்தை என்பதன் மரூஉ

**4] அடவி மலையாறு - எண்ணும்மை**

1] 1 2]2 3]3 **4]4**

விளக்கம் :- அடவி மலையாறு - என்பதன் இலக்கணக்குறிப்பு உம்மைத்தொகை.

**25] இவற்றில் பொருந்தாதது எது?**

1] கடந்து - வினையெச்சம்

2] தடந்தோள் - உரிச்சொற்றொடர்

3] செறிந்து, பாய்ந்து - வினையெச்சம்

**4] பாலாடையும் நறுநெய்யும் தேனும் - உம்மைத்தொகை**

1] 1 2]2 3]3 **4]4**

விளக்கம் :- பாலாடையும் நறுநெய்யும் தேனும் - என்பதன் இலக்கணக்குறிப்பு எண்ணும்மை.

**26] இவற்றில் பொருந்தாதது எது?**

1] நீளமுடி, நன்செய், புன்செய் - பண்புத்தொகை

2] காத்தல் - தொழிற்பெயர்

**3] தொல்லுலகு - வினைத்தொகை**

4] தாளமும் வேளமும் - எண்ணும்மை

5] பதமலர் - உருவகம்

1] 1 2]2 **3]3** 4]4

விளக்கம் :- தொல்லுலகு - என்பதன் இலக்கணக்குறிப்பு பண்புத்தொகை. காரணம் - தொல்லுலகு = தொன்மை + உலகு. "மை" - விகுதி வந்துள்ளதால் பண்புத்தொகை.

**27] இவற்றில் பொருந்தாதது எது?**

1] பாய்ந்து, செறிந்து - வினையெச்சங்கள்

2] ஞாலமெலாம், மக்களெலாம் - எல்லாம் எனபதன் தொகுத்தல் விகாரம்.

**3] காத்தல் - வினைத்தொகை**

4] தாளமும் மேளமும் - எண்ணும்மை

1] 1 2]2 **3]3** 4]4

விளக்கம் :- காத்தல் - என்பதன் இலக்கணக்குறிப்பு தொழிற்பெயர்.

**28] இவற்றில் பொருந்தாதது எது?**

1] அடவி - காடு

2] தடந்தோள் - வலியதோள்

**3] மருங்கு - தூரம்**

4] குலவு - விளங்கும்

5] பண்ணவர் - தேவர்

குறிப்பு :- மருங்கு - பக்கம்

**29] இவற்றில் பொருந்தாதது எது?**

1] அரம்பையர் - தேவமகிளிர்

**2] வீறு - மலை**

3] கா - காடு

4] சதுரங்கச் சேனை - நால்வகைப் படைகள்

5] ஞாலம் - உலகம்

குறிப்பு :- வீறு - வலிமை.

**30] சுப்ரமணிய பாரதியார், தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் ------------- ஆண்டு பிறந்தார்.**

1] 11/11/1892

2] 12/12/1882

3] 21/11/1892

**4] 11/12/1882**

**31] நாடு, மொழி, இறை, பெண்மை முதலிய பாடுபொருள்களில் எண்ணற்ற பாடல் இயற்றியவர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] இராமலிங்கனார்

4] முடியரசன்

**32] ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை இலக்கியங்களை எழுதியவர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] இராமலிங்கனார்

4] முடியரசன்

**33] தம்பி விதுரனை மன்ன னழைத்தான்;**

**தக்க பரிசுகள் கொண்டினி தேகி**

**- இப்பாடல்வரி ------------ என்ற காப்பியத்தின் -------------- சருக்கத்தில் இடம்பெற்றுள்ளது.**

விடை :- பாஞ்சாலி சபதம், சூழ்ச்சிச் சருக்கம்

**34] எளிய சொற்கள், எளிய நடை, எளிய சந்தம் ஆகியவற்றுடன் கூடிய பெண்ணுரிமைக் காப்பியமாகத் தமிழில் பாரதி வடித்துத் தந்தது எது?**

விடை :- பாஞ்சாலி சபதம்

**35] பாஞ்சாலி சபதத்தில் எத்தனை பாகங்கள், சருக்கங்கள், மற்றும் பாடல்கள் உள்ளன?**

விடை :- 2 பாகங்கள், 5 சருக்கங்கள், 412 பாடல்கள்.

**36] "பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியக்கவி, மாகவி" எனப் புகழப் பெற்றவர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] இராமலிங்கனார்

4] முடியரசன்

**37] சுதேசமித்திரன், இந்தியா முதலிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] இராமலிங்கனார்

4] முடியரசன்

**38] தமிழுக்குத் தொண்டுசெய்வோர் சாவதில்லை - இது யாருடைய கூற்று?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] இராமலிங்கனார்

4] முடியரசன்

**39] இருபதாம் நூற்றாண்டின் உரைநடைவளத்தைக் கருத்திற்கொண்டு நோக்கும்போது இக்காலத்தை ------------- காலம் எனலாம்?**

1] செய்யுள்

2] இலக்கணம்

**3] உரைநடை**

4] மறுமலர்ச்சி

**40] --------------- என்பவரின் கவிதைகள் இருபதாம் நூற்றாண்டில் அரும்பிய மறுமலர்ச்சிக்கு வித்தாக அமைந்தன.**

1] பாரதிதாசன்

2] வாணிதாசன்

**3] பாரதியார்**

4] இராமலிங்கனார்

**41] மன்னர்களை மட்டுமே மகிழ்வித்து வந்த கவிதை மரபை மாற்றி, எளிய மக்களை நோக்கிக் கவிதைக் கருவியைத் திருப்பி அமைத்த பெருமை ------------- என்பவரைச் சாரும்.**

1] பாரதிதாசன்

2] வாணிதாசன்

**3] பாரதியார்**

4] இராமலிங்கனார்

**42] முப்பது கோடி முகமுடையாள் உயிர்**

**மொய்ம்புற ஒன்றுடையாள் – இவள்**

**செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்**

**சிந்தனை ஒன்றுடையாள்.**

**- இந்திய ஒருமைப்பாட்டின் உயர்வினை விளக்கும் ------------- என்பவரின் கவிதை இது?**

1] பாரதிதாசன்

2] வாணிதாசன்

**3] பாரதியார்**

4] இராமலிங்கனார்

**43] பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**

**தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்**

**இறவாத புகழுடைய புதுநூல்கள்**

**தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.**

**- தமிழ் வளர்ச்சிக்கு வழிசொல்லும் ----------------- என்பவரின் கவிதை இது?**

1] பாரதிதாசன்

2] வாணிதாசன்

**3] பாரதியார்**

4] இராமலிங்கனார்

**44] தமிழ், தமிழர், தமிழுணர்வு, சமுதாய மறுமலர்ச்சி, பெண்விடுதலை, திராவிட இயக்கச் சிந்தனை, பொதுவுடைமை முதலியனவற்றைப் -------------- என்பவரின் கவிதைகள் வெளிப்படுத்தின?**

**1] பாரதிதாசன்**

2] வாணிதாசன்

3] பாரதியார்

4] இராமலிங்கனார்

**45] எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்**

**இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே**

**- என வீழ்ச்சியுற்ற தமிழர் எழுச்சிபெற விழையும் ------------- என்பவரின் கவிதை இது?**

**1] பாரதிதாசன்**

2] வாணிதாசன்

3] பாரதியார்

4] இராமலிங்கனார்

**46] எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான**

**இடம் நோக்கி நடக்கின்ற திந்தவையம்**

**இல்லானும் அங்கில்லை பிறர்நலத்தை**

**எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே**

**- எனப் பொதுவுடைமையை விரும்பியவர்**

1] கல்யாணசுந்தரம்

**2] பாரதிதாசன்.**

3] முடியரசன்

4] தமிழ்ஒளி

**47] ‘கல்லைப் பிசைந்து கனியாக்கும்**

**செந்தமிழின் சொல்லை மணியாகத் தொடுத்தவனும் நீதானோ’**

**- எனத் தாலாட்டுப் பாடியவர் யார்?**

1] கல்யாணசுந்தரம்

**2] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

3] முடியரசன்

4] தமிழ்ஒளி

**48] மங்கை யராகப் பிறப்பதற்கே – நல்ல**

**மாதவம் செய்திட வேண்டுமம்மா**

**எனப் பாடிப் பெண்ணின் பெருமையை பேசியவர் யார்?**

1] கல்யாணசுந்தரம்

**2] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

3] முடியரசன்

4] தமிழ்ஒளி

**49] சாலைகளில் பலதொழில்கள் பெருக வேண்டும்**

**சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்**

**- எனத் தொழிலும் தமிழும் வளம்பெருதல் வேண்டுமென விரும்பியவர் யார்?**

1] கல்யாணசுந்தரம்

**2] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

3] முடியரசன்

4] தமிழ்ஒளி

**50] விடுதலை இயக்கக் கவிஞர்களுள் ஒருவர் ----------------. இவர்தம் கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள் மிளிர்கின்றன.**

**1] நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்**

2] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

3] முடியரசன்

4] தமிழ்ஒளி

**51] தமிழன் என்றோர் இனமுண்டு**

**தனியே அவற்கொரு குணமுண்டு**

**அமிழ்தம் அவனுடைய மொழியாகும்**

**அன்பே அவனுடை வழியாகும்.**

**- என்று தமிழரின் சிறப்பையும் தமிழ்மொழியின் இனிமையையும் சேர்த்துப் பாடியவர் யார்?**

**1] நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்**

2] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

3] முடியரசன்

4] தமிழ்ஒளி

**52] "பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்**

**பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்"**

**- என்று சமுதாயத்தின்மீது அக்கறையாக பாடியவர் யார்?**

**1] நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்**

2] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

3] முடியரசன்

4] தமிழ்ஒளி

**53] "கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்**

**கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"**

**- என்று வாழ்க்கை சிறக்க ஒவ்வொருவரும் ஒரு தொழிலையாவது கற்றுக்கொள்வது நல்லது என வலியுறுத்தியவர் யார்?**

**1] நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்**

2] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

3] முடியரசன்

4] தமிழ்ஒளி

**54] ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்**

**அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற**

**தீங்குடைய மனப்போக்கர் வாழும்நாட்டில்**

**தென்படுமோ மொழியுணர்ச்சி ?**

**- இவ்வடிகள் ----------- என்பவரின் தணியாத தண்டமிழ்க் காதலை வலியுறுத்தும்.**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] முடியரசன்**

4] தாராபாரதி

**55] ---------------- என்பவரின் கவிதைகளில் புதிய உவமைகளைக் காணலாம். அதனால், அவர் உவமைக் கவிஞர் என்னும் சிறப்பைப் பெற்றார்.**

1] பாரதியார்

**2] சுரதா**

3] முடியரசன்

4] தாராபாரதி

**56] வரலாற்றுச் செய்திகளும் இலக்கண விளக்கங்களும் இவர்தம் பாடல்களில் இடையிடையே கலந்து வருகின்றன. அவை எளிமையும் இனிமையும் ஒன்று கலந்து பொருட்செறிவையும் புத்துணர்ச்சியையும் உண்டாக்குகின்றன.**

1] பாரதியார்

**2] சுரதா**

3] முடியரசன்

4] தாராபாரதி

**57] முல்லைக்கோர் காடு போலும்**

**முத்துக்கோர் கடலே போலும்**

**சொல்லுக்கோர் கீரன் போலும்**

**தூதுக்கோர் தென்றல் போலும்**

**கல்விக்கோர் கம்பன் போலும்**

**கவிதைக்கோர் பரணர் போலும் வில்லுக்கோர் ஓரி போலும்**

**விளங்கினார், வென்றார், நின்றார்.**

**- இவ்வாறு சுரதா, ------------- என்பவரை உவமைகளால் பாராட்டியுள்ளார்.**

1] சுத்தானந்த பாரதியார்

2] கவிஞர் கண்ணதாசன்

**3] மறைமலையடிகளார்.**

4] பாரதிதாசன்

**58] பாரதிதாசனைத் தொடர்ந்து, இயற்கையின் அழகை எழிலுறப் படம்பிடித்துக் காட்டுவதில் யாருடைய கவிதைகள் சிறந்து விளங்குகின்றன?**

1] சுரதா

2] கவிஞர் கண்ணதாசன்

**3] வாணிதாசன்**

4] தமிழ்ஒளி

**59] அமெரிக்கக்கவிஞர் வால்ட்விட்மனின் சாயலில் வசன கவிதை எழுதியவர் யார்?**

1] பாரதிதாசன்

2] வாணிதாசன்

**3] பாரதியார்**

4] சுரதா

**60] ----------- என்பவரின் உரைநடைகள் அனைத்தும் கவிதைநடை கொண்டவை.**

**1] பாரதிதாசன்**

2] வாணிதாசன்

3] பாரதியார்

4] சுரதா

**61] யாப்பு நெறிகளை மீறவேண்டும் என இவ்விரு கவிஞரும் ஒருபோதும் எண்ணியதில்லை. யாப்பினை ஒரு தடையாகவும் இவர்கள் நினைத்ததில்லை. அந்த இரு கவிஞர்களின் பெயர்கள் என்ன?**

1] வாணிதாசன், சுரதா

2] தமிழ்ஒளி, கண்ணதாசன்

**3] பாரதியார், பாரதிதாசன்**

4] முடியரசன், கல்யாணசுந்தரம்

**62] ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப. இராசகோபாலன், க.நா. சுப்பிரமணியன் முதலியோர் தொடக்கத்தில் ----------- என்னும் இதழில் புதுக்கவிதை எழுதினார்கள்?**

விடை :- மணிக்கொடி.

**63] எஸ். வைத்தீஸ்வரன், தருமு சிவராமு, மணி, சி.சு. செல்லப்பா முதலியோர் ----------- என்னும் இதழில் புதுக்கவிதைகளைப் படைத்தனர்.**

வீடை :- எழுத்து.

**64] எந்த குழுவினர், புதுக்கவிதையைப் பரவலாக்கப் பாடுபட்டனர்?**

விடை :- கோவை வானம்பாடி.

**65] புதுக்கவிதை வளர்ச்சியில் -------------- என்பவரின் பங்கு போற்றத்தக்கது.**

1] சக்திக்கனல்

2] புவியரசு

3] சிற்பி

**4] வல்லிக்கண்ணன்**

**66] ஏழையின் குடிசையில்**

**அடுப்பும் விளக்கும் தவிர**

**எல்லாமே எரிகின்றன**

**- இந்த வரியின் ஆசிரியர் யார்?**

1] சக்திக்கனல்

2] புவியரசு

3] சிற்பி

**4] வல்லிக்கண்ணன்**

**67] உச்சிமலையிலே ஊறும் அருவிகள் ஒரே வழியில் கலக்குது, ஒற்றுமை யில்லா மனித குலம் உயர்வு தாழ்வு வளர்க்குது - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] கல்யாணசுந்தரம்**

2] புவியரசு

3] சிற்பி

4] வல்லிக்கண்ணன்

**68] 'தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது - ஆனாலும் மக்கள் வயிறு காயுது' - என்னும் பாடல்வரிகளைக் கேட்ட தோழர் ஜீவானந்தம், " நீ மீண்டும் தோன்றிய பாரதியடா" என ------------- என்பவரை பாராட்டினார்.**

**1] கல்யாணசுந்தரம்**

2] புவியரசு

3] சிற்பி

4] வல்லிக்கண்ணன்

**69] எளிய சொற்களைக் கொண்டு உள்ளத்தை மகிழ்விக்கும் பாடல்களை இயற்றிய பெருமை ----------------- என்பவருக்கு உண்டு.**

**1] கண்ணதாசன்**

2] புவியரசு

3] சிற்பி

4] வல்லிக்கண்ணன்

**70] செந்தமிழ்ச் சொல்லெடுத்து இசை தொடுப்பேன் – வண்ணச்**

**சந்தத்திலே கவிதைச் சரம்தொடுப்பேன்**

**- எனத் தமிழ் கவிதை எழுதத் தொடங்கியவர் யார்?**

**1] கண்ணதாசன்**

2] புவியரசு

3] சிற்பி

4] வல்லிக்கண்ணன்

**71] கதிர்வெடித்துப் பிழம்புவிழக், கடல்கொதித்துச் சூடேற்ற**

**முதுமைமிகு நிலப்பரப்பில், முதற்பரப்பு தோன்றிவிட**

**நதிவருமுன் மணல்வருமுன், நலம்வளர்த்த தமிழணங்கே !**

**- என நெக்குருகித் தமிழ்த்தாயின் பழைமையைப் பறைசாற்றியவர் யார்?**

**1] கண்ணதாசன்**

2] புவியரசு

3] சிற்பி

4] வல்லிக்கண்ணன்

**72] வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும், வாசல் தோறும் வேதனை இருக்கும்**

**வந்த துன்பம் எதுவென் றாலும், வாடி நின்றால் ஒடுவ தில்லை**

**எதையும் தாங்கும் இதயம் இருந்தால், இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்**

**- என்ற கவிதை வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] கண்ணதாசன்**

4] வாணிதாசன்

**73] பசுமை நிறைந்த நினைவுகளே !, பாடித் திரிந்த பறவைகளே !**

**பழகிக் களித்த தோழர்களே !, பறந்து செல்கின்றோம் – நாம்**

**பறந்து செல்கின்றோம்.. எந்த ஊரில் எந்த நாட்டில் என்று காண்போமோ?**

**- என்ற கவிதை வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] கண்ணதாசன்**

4] வாணிதாசன்

**74] முத்தான முத்தல்லவோ மிதந்து வந்த முத்தல்லவோ**

**கட்டான மலரல்லவோ கடவுள்தந்த பொருளல்லவோ**

**சின்னஞ்சிறு சிறகுகொண்ட சிங்காரச் சிட்டல்லவோ**

**செம்மாதுளை பிளந்து சிரித்துவரும் சிரிப்பல்லவோ**

**மாவடு கண்ணல்லவோ மைனாவின் மொழியல்லவோ.**

**- என்ற கவிதை வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] கண்ணதாசன்**

4] வாணிதாசன்

**75] சுரண்டல், வறுமை ஆகியன நீங்கவும், சமத்துவம் ஓங்கவும் பொதுமை உணர்வே ஏற்றது என்று வலியுறுத்தியவர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] கண்ணதாசன்**

4] வாணிதாசன்

**76] எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் – இங்குஇல்லாமை இல்லாத நிலைவேண்டும்., வல்லான் பொருள்குவிக்கும் தனியுடைமை – நீங்கி வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] கண்ணதாசன்**

4] வாணிதாசன்

**77] காளை மணியோசை களத்துமணி நெல்லோசை, வாழை இலையோசை வஞ்சியர்கை வளையோசை, தாழை மடலோசை தாயர்தயிர் மத்தோசை, கோழிக் குரலோசை குழவியர்வாய்த் தேனோசை .**

**-என்று ஓசை என்னும் சொல்லைப் பலமுறை பயன்படுத்திப் பொருள்நயமும்**

**ஓசை இனிமையும் பொருந்துமாறு பாடிய கவிஞர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] கண்ணதாசன்**

4] வாணிதாசன்

**78] உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால், உலகம் உன்னிடம் மயங்கும் – நிலை, உயரும்போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்**

**- என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] கண்ணதாசன்**

4] வாணிதாசன்

**79] கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?**

விடை :- முத்தையா.

**80] கண்ணதாசன் பிறந்த ஊர் மற்றும் ஆண்டு?**

விடை :- சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிறுகூடல்பட்டி;, 24.06.1927.

**81] கண்ணதாசனின் பெற்றோர் பெயர் என்ன?**

விடை :- சாத்தப்பன் – விசாலாட்சி.

**82] கண்ணதாசன் படைத்த நெடுங்கவிதை நூல்கள் எவை?**

விடை :- ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மாகாவியம்,இயேசுகாவியம்.

**83] இராசதண்டனை என்பது, கம்பர் – அம்பிகாபதி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ------------- என்பவர் படைத்த இனிய நாடகம்.**

1] கல்யாணசுந்தரம்

2] புவியரசு

**3] கண்ணதாசன்**

4] வல்லிக்கண்ணன்

**84] ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி, வேலன்குடித் திருவிழா முதலிய பல புதினங்களையும் ---------------- என்பவர் படைத்திருக்கிறார்.**

1] கல்யாணசுந்தரம்

2] புவியரசு

**3] கண்ணதாசன்**

4] வல்லிக்கண்ணன்

**85] ------------ என்பவர் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட புதினங்களில் "சேரமான் காதலி" சிறந்த வரலாற்றுப் புதினமாகும். அதற்குச் சாகித்திய அகாதமியின் பரிசு**

**கிடைத்துள்ளது.**

1] கல்யாணசுந்தரம்

2] புவியரசு

**3] கண்ணதாசன்**

4] வல்லிக்கண்ணன்

**86] ------------- என்பவர் தென்றல், முல்லை, கண்ணதாசன், தமிழ் மலர் முதலிய இதழ்கள் தொடங்கி, அவற்றுக்கு ஆசிரியராக இருந்து சிறந்த இதழ்ப்பணி ஆற்றியுள்ளார்.**

1] கல்யாணசுந்தரம்

2] புவியரசு

**3] கண்ணதாசன்**

4] வல்லிக்கண்ணன்

**87] நான் நிரந்தரமானவன் அழிவதில்லை, எந்தநிலையிலும் எனக்கு மரணமில்லை. - இது யாருடைய கூற்று?**

1] கல்யாணசுந்தரம்

2] புவியரசு

**3] கண்ணதாசன்**

4] வல்லிக்கண்ணன்

**88] கவிஞர் கண்ணதாசனின் சொல்லாட்சிச் சிறப்பை வெளிப்படுத்தும் இயைபுச் சொற்கள் எவை?**

விடை :- தேன், காய்.

**89] ஓர் எழுத்து, தனித்தேனும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தேனும் ஒரு பொருளை உணர்த்துமானால், அது ------------ எனப்படும்.**

விடை :- **சொல்.**

**90] பதம், மொழி, கிழவி என்பன --------- என்பதன் வேறு பெயர்கள்.**

விடை :- **சொல்.**

**91] பதம் எத்தனை வகைப்படும்?**

**1] 2** 2] 3 3] 4 4] 5

குறிப்பு :- பதம் என்பது பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

**92] பகாப்பதம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?**

பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும். பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றின் அடிப்படையில் பகாப்பதம் நான்கு வகைப்படும்.

**93] கீழ்க்கண்டவற்றில் பெயர்ப் பகாப்பதத்தின் சரியான எடுத்துக்காட்டு எது?**

**1] மரம், நாய், நீர்**

2] உண், காண், எடு

3] சால, நனி, கடி, உறு

4] தில், மன், பிற

**94] கீழ்க்கண்டவற்றில் வினைப் பகாப்பதத்தின் சரியான எடுத்துக்காட்டு எது?**

1] மரம், நாய், நீர்

winmeen.com

**2] உண், காண், எடு**

3] சால, நனி, கடி, உறு

4] தில், மன், பிற

**95] கீழ்க்கண்டவற்றில் உரிப் பகாப்பதத்தின் சரியான எடுத்துக்காட்டு எது?**

1] மரம், நாய், நீர்

2] உண், காண், எடு

**3] சால, நனி, கடி, உறு**

4] தில், மன், பிற

**96] கீழ்க்கண்டவற்றில் இடைப் பகாப்பதத்தின் சரியான எடுத்துக்காட்டு எது?**

1] மரம், நாய், நீர்

2] உண், காண், எடு

3] சால, நனி, கடி, உறு

**4] தில், மன், பிற**

**97] பகுபதம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?**

பகுதி, விகுதி, இடைநிலை எனப் பிரிக்கப்படும் பதம் ( பகுபதம் - பிரிக்கவியலும் பதம்) பகுபதம் எனப்படும். பகுபதம் இருவகைப்படும்.

1. பெயர்ப்பகுபதம்.

2. வினைப்பகுபதம்.

**98] பெயர்ப்பகுபதம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக?**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறன் அடியாகத் தோன்றுவது பெயர்ப்பகுபதம்.

(எ.கா.) :

**[1] பொன்னன்** = பொன் + ன் + அன் (ன்-இரட்டித்தது).

பொன் என்னும் பொருட்பெயர் அடியாகப் பிறந்தது.

**[2] ஊரன்** = ஊர் + அன்; ஊர் என்னும் இடப்பெயர் அடியாகப் பிறந்தது.

**[3] ஆதிரையான்** = ஆதிரை + ய் + ஆன் (ய் – உடம்படுமெய் )

ஆதிரை என்னும் காலப்பெயர் அடியாகப் பிறந்தது.

**[4] கண்ணன்** = கண் + ண் + அன் (ண் – இரட்டித்தது) கண் என்னும் சினைப்பெயர் அடியாகப் பிறந்தது.

**[5] கரியன்** = கருமை + அன். கருமை என்னும் பண்புப்பெயர் அடியாகப் பிறந்தது.

**[6] நடிகன்** = நடி + க் + அன் (க் – பெயர் இடைநிலை) நடித்தல் என்னும் தொழிபெயர் அடியாகப் பிறந்தது.

**99] வினைப்பகுபதம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக?**

பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பகுக்கப்படும் வினைமுற்று, வினைப்பகுபதம் எனப்படும்.



www.winmeen.com

**(எ. கா.) :** செய்தான் = செய் + த் + ஆன். செய்தான் என்னும் வினைமுற்றில் செய் என்னும் பகுதி தொழிலையும், த் என்னும் இடைநிலை இறந்தகாலத்தையும், ஆன் என்னும் விகுதி ஆண்பாலையும் குறிக்கின்றன.

**100] பகுபத உறுப்புகள் யாவை?**

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளும் பகுபத உறுப்புகள் ஆகும்.

**101] பகுபதத்தில் முதலில் நின்று பொருள் தரும் முதனிலையைப் --------------- என்பர்.**

1] விகுதி **2] பகுதி** 3] சந்தி 4] சாரியை

விளக்கம் :- பகுபதத்தில் முதலில் நின்று பொருள் தரும் முதனிலையைப் பகுதி என்பர். பகுதி பெரும்பாலும் ஏவல் வினையாக வரும்.

(எ. கா.) :

படித்தான் – படி என்பது பகுதி.

ஓடினான் – ஓடு என்பது பகுதி.

வந்தான் – வா என்பது பகுதி.

**102] பகுபதத்தில் இறுதியில் நிற்பது ---------------- எனப்படும்.**

**1] விகுதி** 2] பகுதி 3] சந்தி 4] சாரியை

**விளக்கம் :-** பகுபதத்தில் இறுதியில் நிற்பது விகுதி எனப்படும். இது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

**(எ. கா.) :-**

நடந்தான் – ஆன் – ஆண்பால் விகுதி.

நடந்தாள் – ஆள் – பெண்பால் விகுதி.

நடந்தனர் – அர் – பலர்பால் விகுதி.

நடந்தது – து – ஒன்றன்பால் விகுதி.

நடந்தன – அ – பலவின்பால் விகுதி.

**103] பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது ---------------- எனப்படும்.**

1] விகுதி **2] இடைநிலை** 3] சந்தி 4] சாரியை

விளக்கம் :- பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது இடைநிலை எனப்படும். இடைநிலை காலம் காட்டுவதனால் காலங்காட்டும் இடைநிலை எனவும் கூறுவர்.

**104] ------------------ என்பன நிகழ்கால இடைநிலைகள்.**

1] இல், அல், ஆ

2] ப், வ்

3] த், ட், ற், இன்

**4] கிறு, கின்று, ஆநின்று**

விளக்கம் :- கிறு, கின்று, ஆநின்று என்பன நிகழ்கால இடைநிலைகள்.

உண்கிறான் – கிறு – உண் + கிறு + ஆன்.

உண்கின்றான் – கின்று – உண் + கின்று + ஆன்.

உண்ணாநின்றான் – ஆநின்று – உண் + ஆநின்று + ஆன்.

**105] --------------- என்பன இறந்தகால இடைநிலைகள்.**

1] இல், அல், ஆ

2] ப், வ்

**3] த், ட், ற், இன்**

4] கிறு, கின்று, ஆநின்று

விளக்கம் :- த், ட், ற், இன் என்பன இறந்தகால இடைநிலைகள்.

பார்த்தான் – த் – பார் + த் + த் + ஆன்.

உண்டான் – ட் – உண் + ட் + ஆன்.

வென்றான் – ற் – வெல் (ன்) + ற் + ஆன்.

பாடினான் – இன் – பாடு + இன் + ஆன்.

**106] ---------- என்பன எதிர்கால இடைநிலைகள்.**

1] இல், அல், ஆ

**2] ப், வ்**

3] த், ட், ற், இன்

4] கிறு, கின்று, ஆநின்று

விளக்கம் :- ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகள்.

உண்பான் – ப் – உண் + ப் + ஆன்.

வருவான் – வ் – வா (வரு) + வ் + ஆன்.

**107] ------------- என்பன எதிர்மறை இடைநிலைகள்.**

**1] இல், அல், ஆ**

2] ப், வ்

3] த், ட், ற், இன்

4] கிறு, கின்று, ஆநின்று

விளக்கம் :- இல், அல், ஆ முதலியன எதிர்மறை இடைநிலைகள்.

உண்டிலன் – இல் – உண் + ட் + இல் + அன்.

காணலன் – அல் – காண் + அல் + அன்.

பாரான் – ஆ – பார் + ஆ + ஆன்.

**108] பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்து சந்திக்க வைப்பது -------------- எனப்படும்.**

1] விகுதி **2] சந்தி** 3] சாரியை 4] இடைநிலை

விளக்கம் :- பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்து சந்திக்க வைப்பது சந்தி. இது சிலவிடங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலும் வரும்.

(எ. கா.) :

பார்க்கிறான் – பார் + க் + கிறு + ஆன்.

படித்தான் – படி + த் + த் + ஆன்.

கடையார் - கடை + ய் + ஆர்.

**109] பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது -------------- எனப்படும்.**

1] விகுதி 2] சந்தி **3] சாரியை** 4] இடைநிலை

விளக்கம் :- பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது சாரியை எனப்படும். இஃது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம் முதலியன சாரியைகள்.

(எ. கா.) : உண்டனன் – உண் + ட் + அன் + அன்.

**110] பகுதி, இடைநிலை, விகுதி போன்றவை சேரும்போது இடையில் ஏற்படும் மாறுபாடு ----------- எனப்படும்.**

**1] விகாரம்** 2] சந்தி 3] சாரியை 4] இடைநிலை

விளக்கம் :- பகுதி, இடைநிலை, விகுதி போன்றவை சேரும்போது இடையில் ஏற்படும் மாறுபாடு விகாரம் எனப்படும்.

வந்தான் என்னும் சொல்லில் உள்ள வா என்னும் பகுதி வ எனக் குறைந்து விகாரம் ஆயிற்று.

**111] பகுபதத்தில் குறைந்தளவு இருக்கவேண்டிய உறுப்புகள் -------------?**

1] பகுதி, சந்தி

**2] இடைநிலை, சாரியை**

3] பகுதி, விகுதி

4] இவற்றில் ஏதுமில்லை

**112] ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ------------ எனப்படும்.**

விடை :- ஆகுபெயர்.

**113] ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?**

1] 8 2] 10 3] 12 **4] 16**

**114] அளவைக் குறிக்கும் பெயர்களை அளவைப் பெயர்கள் என்பர். அவை எத்தனை வகைப்படும். அவை யாவை?**

அளவைப் பெயர்கள் நான்கு வகைப்படும். அவையாவன :- எண்ணல் அளவை, எடுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை என அளவை நான்கு வகைப்படும்.

**115] ஒன்று பெற்றால் ஒளி மயம் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

**1] எண்ணல் அளவை ஆகுபெயர்**

2] முகத்தல் அளவை ஆகுபெயர்

3] எடுத்தல் அளவை ஆகுபெயர்

4] நீட்டல் அளவை ஆகுபெயர்

விளக்கம் :- ஒன்று பெற்றால் ஒளி மயம். இத்தொடரில் ஒன்று என்னும் எண்ணுப்பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்குப் பெயராகி வந்தது. இஃது எண்ணல் அளவை ஆகுபெயர்.

**116] ஐந்து கிலோ என்ன விலை? - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] எண்ணல் அளவை ஆகுபெயர்

2] முகத்தல் அளவை ஆகுபெயர்

**3] எடுத்தல் அளவை ஆகுபெயர்**

4] நீட்டல் அளவை ஆகுபெயர்

விளக்கம் :- ஐந்து கிலோ என்ன விலை? இத்தொடரில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர், அவ்வளவைக் குறிக்காமல், அவ்வளவுடைய பொருளுக்கு (அரிசி, பருப்பு..) ஆகிவந்தது. எனவே, இஃது எடுத்தல் அளவை ஆகுபெயர்.

**117] நான்கு லிட்டர் தேவை - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] எண்ணல் அளவை ஆகுபெயர்

**2] முகத்தல் அளவை ஆகுபெயர்**

3] எடுத்தல் அளவை ஆகுபெயர்

4] நீட்டல் அளவை ஆகுபெயர்

விளக்கம் :- நாலு லிட்டர் தேவை. இத்தொடரில் லிட்டர் என்னும் முகத்தல் அளவைப்பெயர், அவ்வளவைக் குறிக்கவில்லை. அவ்வளவுடைய நெய், எண்ணெய், பால் முதலியவற்றுள் ஒன்றுக்கு ஆகிவந்தது. எனவே, இது முகத்தல் அளவை ஆகுபெயர்.

**118] மூன்று மீட்டர் கொடு - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] எண்ணல் அளவை ஆகுபெயர்

2] முகத்தல் அளவை ஆகுபெயர்

3] எடுத்தல் அளவை ஆகுபெயர்

**4] நீட்டல் அளவை ஆகுபெயர்**

விளக்கம் :- மூன்று மீட்டர் கொடு. இத்தொடரில், மூன்று மீட்டர் என்பது, அவ்வளவுடைய அளவுகோலைக் குறிக்காது, அதனால் நீட்டி அளக்கப்பெறும் துணிக்கு ஆகி வந்தது. எனவே, இது நீட்டல் அளவை ஆகுபெயர்.

**குறிப்பு** : "ஒன்றுகொடு, நான்கு கிலோ தா, இரண்டு லிட்டர் தேவை, ஐந்து முழம் வேண்டும்" என்பனபோல வரும் அளவுத்தொடர்கள் ஆகுபெயராம். 'ஒரு மாம்பழம் கொடு, இரண்டு கிலோ நெய் வேண்டும்'என்பன ஆகுபெயராகா.

**119] வள்ளுவர்சொல் வாழ்க்கைக்கு இனிது - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

**2] சொல்லாகுபெயர்**

3] இடவாகுபெயர்

4] கருவியாகு பெயர்

விளக்கம் :- வள்ளுவர் சொல் வாழ்க்கைக்கு இனிது. இத்தொடரில் வள்ளுவர்சொல் என்பது, சொல்லைக் குறிக்காது பொருளுக்குப் பெயராகி வந்ததால், இது சொல்லாகுபெயர்.

**120] பாலை இறக்கு - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

**1] தானியாகுபெயர்**

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

4] கருவியாகு பெயர்

விளக்கம் :- பாலை இறக்கு. பாலின் பெயர், பாலைக் குறிக்காமல் பாத்திரத்தைக் குறிக்கிறது. ஓர் இடத்தில் உள்ள ஒரு பொருளின் பெயர் (தானி), அது சார்ந்திருக்கும் இடத்திற்குப் (தானத்திற்கு) பெயராகி வருவது தானியாகுபெயர் .

பொருள், இடத்திற்கு ஆகி வருவது **தானியாகுபெயர்.**

**இடவாகுபெயர்** :- இடம், பொருளுக்கு ஆகி வருவது இடவாகுபெயர்.

**121] யாழ் கேட்டு மகிழ்ந்தாள் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

**4] கருவியாகு பெயர்**

விளக்கம் :- யாழ் கேட்டு மகிழ்ந்தாள். இத்தொடரில், யாழ் என்னும் கருவி இசைக்கு ஆகி வந்ததால் கருவியாகு பெயர்.

**கருவியாகு பெயர்** : கருவிப் பொருளைக் குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்திற்கு ஆகிவரும். (எ-டு) : வீணை கேட்டு மெய்ம்மறந்தேன்.

**122] நான் சமையல் கற்றேன் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

**4] காரியவாகு பெயர்**

விளக்கம் :- நான் சமையல் கற்றேன். இங்குச் சமையல் என்னும் காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்குப் (கருவிக்கு) பெயராகி வருவது காரியவாகு பெயர்.

**காரியவாகு பெயர்** : காரியப்பொருள் கருவிப்பொருளுக்கு ஆகிவருவது.

(எ-டு) : நன்னூல் கற்றேன்..

**123] திருவள்ளுவரைப் படித்துப்பார் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

**4] கருத்தாவாகு பெயர்**

விளக்கம் :- திருவள்ளுவரைப் படித்துப்பார். இத்தொடரில் திருவள்ளுவர் என்பது, அவரால் இயற்றப் பெற்ற நூலுக்கு ஆகிவந்ததனால், கருத்தாவாகு பெயராயிற்று.

**124] நாரதர் வருகிறார் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

**4] உவமையாகு பெயர்**

விளக்கம் :- ஒருவரைப் பார்த்து, நாரதர் வருகிறார் எனல். இத்தொடரில் நாரதர் என்னும் பெயர் அவரைக் குறிக்காமல், அவரைபோன்ற (கலகமூட்டுபவர்) வேறொருவர்க்கு ஆகிவந்தது. அதனால், இஃது உவமையாகுபெயராயிற்று.

பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி

கருவி காரியம் கருத்தன் ஆதியுள்

ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்

தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. – **நன்னூல் 290...**

**125] நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர் ---------------- ஆகும்?**

1] முகத்தலளவையாகு பெயர்

2] நீட்டலளவையாகு பெயர்

**3] எண்ணலளவையாகு பெயர்**

4] எடுத்தலளவையாகு பெயர்

**126] தயிரை இறக்கு. இத்தொடர் ---------------- ஆகுபெயர் ஆகும்?**

1] இடவாகு பெயர்

**2] தானியாகு பெயர்**

3] உவமையாகு பெயர்

4] கருவியாகு பெயர்

**127] "கம்பரைப் படிக்கிறேன்" என்பது ---------- ஆகுபெயர் ஆகும்?**

**1] கருத்தாவாகு பெயர்**

2] தானியாகு பெயர்

3] உவமையாகு பெயர்

4] கருவியாகு பெயர்

**128] "வானொலி கேட்டு மகிழ்ந்தேன்" இத்தொடர் ------------ ஆகுபெயர் ஆகும்?**

1] கருத்தாவாகு பெயர்

2] தானியாகு பெயர்

3] உவமையாகு பெயர்

**4] கருவியாகு பெயர்**

**129] கீழ்க்கண்டவற்றில் பொருந்தாதது எது?**

1] முகத்தலளவையாகு பெயர் - இரண்டு லிட்டர் தா

2] உவமையாகு பெயர் - காளை வருகிறான்

3] சொல்லாகு பெயர் - பெரியோர் சொல் கேள்

**4] எடுத்தலளவையாகு பெயர் - நன்னூல் கற்றேன்**

விளக்கம் :- எடுத்தலளவையாகு பெயர் - ஐந்து கிலோ என்ன விலை. (அல்லது) பத்துக் கிராம் கொடு - என்பது சரியான விடை.

**130] இருட்பகை இரவி இருளெனத் தம்மையும்,**

**கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக்.**

**கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி.**

**மெய்யாத் தம்பெயர் வியம்பி வாயசம்**

**பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும்**

**- என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] மனோன்மணியம் பெ.சுந்தரனார்**

2] பாரதியார்

3] பாரதிதாசன்

4] வாணிதாசன்

**131] பொருந்தாதது எது?**

1] வாயசம் - காகம்

2] இரவி - சூரியன்

3] சிறை - இறக்கை

**4] மருங்கு - தொலைவில்**

**132] இருட்பகை இரவி இருளெனத் தம்மையும். கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக். கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி. மெய்யாத் தம்பெயர் வியம்பி வாயசம் பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும் ... - இந்த பாடலில் பயின்று வந்துள்ள அணி எது?**

**1] தற்குறிப்பேற்ற அணி**

2] ஏகதேச உருவக அணி

3] உவமை அணி

4] வேற்றுமை அணி

**133] வாரிக்களத்தடிக்கும் வந்து பின்பு கோட்டை புகும். போரிற்சிறந்து பொலிவாகும் - சீருற்ற. செக்கோல மேனிற் திருமலை ராயன்வரையில். வைக்கோலும் மல்யானையாம். - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] புகழேந்திப் புலவர்

2] குமரகுருபரர்

**3] காளமேகப் புலவர்**

4] அந்தகக் கவி வீரராகவர்

**134] ஒரு தொகுப்பில் உள்ளவற்றைச் சுட்டும்போது முதன்மையானதனை மட்டும் சுட்டி, அதனோடு தொடர்புடைய பிறவற்றைச் சுட்டாதபோது ------------------ (அது தொடங்கி) என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.**

1] முதலிய

**2] முதலான**

3] ஆகிய

4] இவற்றில் ஏதுமில்லை

விளக்கம் :- ஒரு தொகுப்பில் உள்ளவற்றைச் சுட்டும்போது முதன்மையானதனை மட்டும் சுட்டி, அதனோடு தொடர்புடைய பிறவற்றைச் சுட்டாதபோது 'முதலான' (அது தொடங்கி) என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(எ.கா.) நாம் ஒழுக்கத்தில் சிறந்து விளங்க திருக்குறள் முதலான அறநூல்களைக் கற்றல் வேண்டும்.

**135] ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அனைத்தையும் சுட்டாது, அதனோடு தொடர்புடைய சிலவற்றையோ பலவற்றையோ மட்டும் சுட்டும்போது ------------ என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.**

**1] முதலிய**

2] முதலான

3] ஆகிய

4] இவற்றில் ஏதுமில்லை

விளக்கம் :- *ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அனைத்தையும் சுட்டாது, அதனோடு தொடர்புடைய சிலவற்றையோ பலவற்றையோ மட்டும் சுட்டும்போது 'முதலிய' என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(எ.கா.) நாம் பண்பாட்டில் சிறந்து விளங்க நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய எட்டுத்தொகை நூல்களைக் கற்றல் வேண்டும்.

**136] ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அதனோடு தொடர்புடைய அனைத்தையும் முழுமையாகச் சுட்டும்போது --------------- என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்**

1] முதலிய

2] முதலான

**3] ஆகிய**

4] இவற்றில் ஏதுமில்லை

விளக்கம் :- ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அதனோடு தொடர்புடைய அனைத்தையும் முழுமையாகச் சுட்டும்போது ‘ஆகிய’ என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(எ.கா.) இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழைப் போற்றி வளர்த்தல் வேண்டும்.

**137] ஒரு செய்யுளில் உள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறையை ---------------- என வழங்குவர்.**

1] ஆகுபெயர்

**2] பொருள்கோள்**

3] வழு

4] அணி

விளக்கம் :- ஒரு செய்யுளில் உள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறையைப் பொருள்கோள் (பொருள் கொள்ளும் முறை) என வழங்குவர்.

**138] பொருள்கோள் எத்தனை வகைப்படும்?**

1] 6 **2] 8** 3] 10 4] 12

விளக்கம் :- 1.ஆற்றுநீர்ப்பொருள்கோள், 2.மொழிமாற்றுப்பொருள்கோள். 3.நிரல்நிறைப்பொருள்கோள், 4.விற்பூட்டுப்பொருள்கோள், 5.தாப்பிசைப்பொருள்கோள், 6.அளைமறிபாப்புப்பொருள்கோள், 7.கொண்டுகூட்டுப்பொருள்கோள், 8.அடிமறிமாற்றுப்பொருள்கோள்.

**139] இடையறாது செல்லும் ஆற்று நீரைப்போலப் பாடலின் சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள் கொள்வது ----------------- ஆகும்.**

**1] ஆற்றுநீர்ப்பொருள்கோள்**

2] மொழிமாற்றுப்பொருள்கோள்

3] நிரல்நிறைப்பொருள்கோள்

4] விற்பூட்டுப்பொருள்கோள்

விளக்கம் :- இடையறாது செல்லும் ஆற்று நீரைபோலப் பாடலின் சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள் கொள்வது ஆற்றுநீர்ப் பொருள்கோளாகும்.

**(எ.கா.) : பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**

**நெறிநின்றார் நீடுவாழ் வார்**

- **பொறிவாயில் ஐந்தவித்தான்** – மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாகக்கொண்ட ஐவகை ஆசைகளையும் விட்ட இறைவனது;

**பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார்** - மெய்யான ஒழுக்க நெறியில் நின்றவர்;

**நீடு வாழ்வார்** – வீட்டுலகில் என்றும் இன்புற்று வாழ்வார்.

இக்குறட்பாவில் பொறிவாயில் எனத் தொடங்கி, நீடுவாழ்வார் என்பது வரையிலுள்ள சொற்கள் முன்பின்னாக மாற்றம் பெறாமல் தொடர்ச்சியாக அமைந்து பொருள்கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. ஆதலின் இப்பாடல்,ஆற்றுநீர்ப்பொருள்கோள் ஆயிற்று.

**140] ஓரடியில் உள்ள சொற்களை, அவைதரும் பொருளுக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் ---------------- என வழங்கப்படும்.**

1] ஆற்றுநீர்ப்பொருள்கோள்

**2] மொழிமாற்றுப்பொருள்கோள்**

3] நிரல்நிறைப்பொருள்கோள்

4] விற்பூட்டுப்பொருள்கோள்

விளக்கம் :- மொழிமாற்றுப்பொருள்கோள் : ஓரடியில் உள்ள சொற்களை, அவைதரும் பொருளுக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் மொழிமாற்றுப்பொருள்கோள் என வழங்கப்படும்.

**(எ.கா.) : சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய**

**யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப**

**கானக நாடன் சுனை.**

- இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் தெளிவு இருக்காது. இதனைச் சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயற்கு (முயல்) நீத்து என அந்தந்த அடியிலுள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

**141] செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறைமாறாமல், வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது ---------------- ஆகும்.**

1] ஆற்றுநீர்ப்பொருள்கோள்

2] மொழிமாற்றுப்பொருள்கோள்

**3] நிரல்நிறைப்பொருள்கோள்**

4] விற்பூட்டுப்பொருள்கோள்

விளக்கம் :- நிரல்நிறைப்பொருள்கோள் : செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறைமாறாமல், வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது நிரல்நிறைப்பொருள்கோள் ஆகும்.

**(எ.கா.) : அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது.**

- இக்குறட்பாவில் அன்பிற்குப் பண்பும், அறத்துக்குப் பயனும் நிரல்நிறையாக வந்து அமைந்துள்ளதால், இப்பாடல் நிரல்நிறைப்பொருள்கோள் ஆயிற்று.

**142] வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல்போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருத்துவது ------------------- ஆகும்.**

1] ஆற்றுநீர்ப்பொருள்கோள்

2] மொழிமாற்றுப்பொருள்கோள்

3] நிரல்நிறைப்பொருள்கோள்

**4] விற்பூட்டுப்பொருள்கோள்**

விளக்கம் :- விற்பூட்டுப்பொருள்கோள் : வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல்போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருத்துவது விற்பூட்டுப் பொருள்கோள். இதனைப் பூட்டுவிற்பொருள்கோள் எனவும் கூறுவர்.

**(எ.கா.) : நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்**

**பெருமை உடைத்திவ் வுலகு**

இக்குறளில், உலகு என்னும் இறுதிச்சொல் முதல்சொல்லான நெருநல் என்பதோடு சேர்த்துப் பொருள் கொள்வதனால் இது பூட்டுவில் பொருள்கோள்.

**143] ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது ------------------ ஆகும்.**

**1] தாப்பிசைப்பொருள்கோள்**

2] அளைமறிபாப்புப்பொருள்கோள்

3] கொண்டுகூட்டுப்பொருள்கோள்

4] அடிமறிமாற்றுப்பொருள்கோள்

விளக்கம் :- தாப்பிசை பொருள்கோள் : ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது தாப்பிசைப் பொருள்கோள்.

தாம்பு + இசை – தாப்பிசை – ஊஞ்சல் கயிறு அசைதல்போல.(தாம்பு – ஊஞ்சல் கயிறு).

**(எ.கா.) : இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்**

**துறந்தார் துறந்தார் துணை**

இப்பாடலில் 'சினத்தை' என்னும் நடுநின்ற சொல்லைச், சினத்தை உடையவர் (இறந்தார்) இறந்தார் அனையர் எனவும், சினத்தைத் துறந்தார் (துறந்தார்) ஞானியர் துணை எனவும் அமைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**144] பாம்பு, புற்றில் தலைவைத்து நுழையும்போது, தலை மேலாகவும், உடல் அடுத்தும் செல்வதுபோலச் செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது ----------------- ஆகும்.**

1] தாப்பிசைப்பொருள்கோள்

**2] அளைமறிபாப்புப்பொருள்கோள்**

3] கொண்டுகூட்டுப்பொருள்கோள்

4] அடிமறிமாற்றுப்பொருள்கோள்

விளக்கம் :- அளைமறிபாப்புப் பொருள்கோள் :- பாம்பு, புற்றில் தலைவைத்து நுழையும்போது, தலை மேலாகவும், உடல் அடுத்தும் செல்வதுபோலச் செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது, அளைமறிபாப்புப் பொருள்கோள். (அளை – புற்று, பாப்பு – பாம்பு.)

**(எ.கா.) :- தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து**

**தண்டூன்றித் தளர்வார் தாமும்**

**சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து**

**நாற்கதியிற் சுழல்வார் தாமும்**

**மூழ்ந்த பிணிநலிய முன்செய்த**

**வினையென்றே முனிவார் தாமும்**

**வாழ்ந்த பொழுதினே வானெய்து**

**நெறிமுன்னி முயலா தாரே.**

-இப்பாடலில் 'வாழ்ந்த மொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே' என்னும் ஈற்றடியைப் பாடலின் முதலில்கொண்டு பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**145] செய்யுளின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள்கொள்வது ---------- ஆகும்.**

1] தாப்பிசைப்பொருள்கோள்

2] அளைமறிபாப்புப்பொருள்கோள்

**3] கொண்டுகூட்டுப்பொருள்கோள்**

4] அடிமறிமாற்றுப்பொருள்கோள்

விளக்கம் :- கொண்டுகூட்டுப் பொருள்கோள் :- செய்யுள்களின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

**(எ.கா.) :- கட்டிக் கரும்பு கசக்கும் மிகக்கனிந்த**

**எட்டிக் கனியினிக்கும் என்னூரில் – பட்டியுள**

**காளை படிபால் கறக்குமே நல்லபசு**

**வேளை தவிரா துழும் .**

-இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் விளங்காது. இதில் உள்ள சொற்களைக் கட்டிக் கரும்பு இனிக்கும், மிகக்கனிந்த எட்டிக்கனி கசக்கும், பட்டியிலிருக்கும் காளை மாடு நேரந்தவிராது உழும். நல்ல பசு படி பால் கறக்கும் எனப் பொருள் கொள்வதற்கு ஏற்ப அடிதோறும் மாறிக்கிடக்கின்ற சொற்களைப் பொருத்தமாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**குறிப்பு :** மொழிமாற்றுப் பொருள்கோள் என்பது அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக்கொள்வது. கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பது பல அடிகளிலும் உள்ள சொற்களை மாற்றிப் பொருள்கொள்வது.

**146] செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது -------------- ஆகும்.**

1] தாப்பிசைப்பொருள்கோள்

2] அளைமறிபாப்புப்பொருள்கோள்

3] கொண்டுகூட்டுப்பொருள்கோள்

**4] அடிமறிமாற்றுப்பொருள்கோள்**

**விளக்கம் :-** அடிமறிமாற்றுப் பொருள்கோள் :- செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறிமாற்றுப் பொருள்கோள்.

**(எ.கா.) : மாறாக் காதலர் மலைமறந் தனரே**

**ஆறாக் கட்பனி வரலா னாவே**

**வேறா மென்தோள் வளைநெகி மும்மே**

**கூறாய் தோழி யான்வாழு மாறே..**

-இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக எப்படி மாற்றிப் பொருள்கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாது.

**147] ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே - கரை ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே! தூண்டிக்காரன் வரும் நேரமாச்சு - ரொம்பத் துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே! - இந்த பாடல்வரியின் ஆசிரியர் யார்?**

விடை :- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (மக்கள் கவிஞர்)

**148] கல்யாண சுந்தரம் யாரிடம் பாடம் கேட்டார்?** விடை :- பாரதிதாசன்

**149] கல்யாண சுந்தரம் 1954 ஆம் ஆண்டில் ----------- என்னும் திரைப்படத்துக்கு முதன்முறையாக பாடல் எழுதியவர் யார்?**

விடை :- "படித்த பெண்"

**150] "தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது , ஆனாலும் மக்கள் வயிறு காயுது" - என்னும் பாடல் வரிகளைக் கேட்ட தோழர் ஜீவானந்தம், 'நீ மீண்டும் தோன்றிய பாரதியடா' - என யாரைப் பாராட்டினார்?** விடை :- கல்யாண சுந்தரம்

**151] 'நாலுவேதம் ஆம் நவை இல் ஆர்கலி**

**வேலி அன்னவன், மலையின்மேல் உளான்,**

**சூலிதன் அருள் துறையின் முற்றினான்,**

**வாலி என்று உளான், வரம்பு இல் ஆற்றலான்.**

**- என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

விடை :- கம்பர்.

**152] திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதிய கால்டுவெல், நான்கு என்பதன் அடிப்படையே ------------- எனக் குறித்துள்ளார்.**

விடை :- நாலு.

## ஒன்பதாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 3

**1] ஓய்வாக இருக்கையில் தம்பி – நீ,, ஓவியம் வரைந்து பழகு !**

**தூய்மையோ டமைதி சேரும் ! – நன்கு,, தோன்றிடும் உள்ள அழகு !**

**- என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] மீரா

2] மதுரகவி பாஸ்கரதாஸ்

**3] பெருஞ்சித்திரனார்**

4] சுரதா

**2] பாக்களும் இயற்றிப் பழகு – நல்ல,, பாடலைப் பாடி மகிழ்வாய் !**

**தாக்குறும் துன்பம் யாவும் – இசைத் ,, தமிழினில் மாய்ந்து போகும் !**

**- என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] மீரா

2] மதுரகவி பாஸ்கரதாஸ்

**3] பெருஞ்சித்திரனார்**

4] சுரதா

**3] அறிவியல் ஆய்வு செய்வாய் – நீ,, அன்றாடச் செய்தி படிப்பாய் !**

**செறிவுறும் உன்றன் அறிவு – உளச் ,, செழுமையும் வலிவும் பெறுவாய் !**

**- என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] மீரா

2] மதுரகவி பாஸ்கரதாஸ்

**3] பெருஞ்சித்திரனார்**

4] சுரதா

**4] மருத்துவ நூல்கள் கற்பாய் – உடன்,, மனநூலும் தேர்ந்து கற்பாய் !**

**திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் – வருந்,, தீமையும் பொய்யும் களைவாய் !**

**- என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] மீரா

2] மதுரகவி பாஸ்கரதாஸ்

**3] பெருஞ்சித்திரனார்**

4] சுரதா

**5] ஏட்டுக்கல்வியுடன் கலைஅறிவும் தொழிற்கல்வியும் அறிவியற் சிந்தனையும் இருந்தால், நீங்கள் வாழ்வில் வெற்றி பெறலாம். ஆதலால், ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட்டு வாழ்வில் வளம்பெறுங்கள் - என்று கூறியவர் யார்?**

1] மீரா

2] மதுரகவி பாஸ்கரதாஸ்

**3] பெருஞ்சித்திரனார்**

4] சுரதா

**6] பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் என்ன?**

1] மீ.ராசேந்திரன்

**2] துரை. மாணிக்கம்**

3] இராசகோபாலன்

4] துரைசாமி

**7] பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் ஊர் மற்றும் பெற்றோர் பெயர், காலம் என்ன?**

விடை :- ஊர் : சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம்; பெற்றோர் : துரைசாமி – குஞ்சம்மாள்; காலம் : 10.03.1933; மறைவு : 11.06.1995.

**8] கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம் ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] மீரா

2] மதுரகவி பாஸ்கரதாஸ்

**3] பெருஞ்சித்திரனார்**

4] சுரதா

**9] தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வு உருவாக்க பாடுபட்டவர் யார்?**

1] மீரா

2] மதுரகவி பாஸ்கரதாஸ்

**3] பெருஞ்சித்திரனார்**

4] சுரதா

**10] மாணவர்களே! ஓய்வாக இருக்கும் நேரத்தில் ஓவியம் வரையக் கற்றுக்கொண்டால் தூய எண்ணங்களும் அமைதியும் சேர்ந்து, உள்ளத்தின் அழகு வெளிப்பட, அது காரணமாக அமையும் என்று கூறியவர் யார்?**

1] மீரா

2] மதுரகவி பாஸ்கரதாஸ்

**3] பெருஞ்சித்திரனார்**

4] சுரதா

**11] அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுங்கள். அன்றாட நிகழ்வுகளைச் செய்தித்தாள் வாயிலாக அறிந்துகொள்ளுங்கள். உலக நிகழ்வுகளை அறிவதன்மூலம் அறிவுத்திறன் மேம்படும். உள்ளம் வளமும் வலிமையையும் பெற்றுச் சிறக்கும். மருத்துவ நூல்களையும் மனநல நூல்களையும் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள். அவை உடலையும் உள்ளத்தையும் பாதுகாக்கத் துணைபுரியும் - என்று கூறியவர் யார்?**

1] மீரா

2] மதுரகவி பாஸ்கரதாஸ்

**3] பெருஞ்சித்திரனார்**

4] சுரதா

**12] பள்ளிப்பறவைகள் நூல் --------- பிரிவுகளாக அமைந்துள்ளது?**

1] 2 **2] 3** 3] 4 4] 5

விளக்கம் :- பள்ளிப்பறவைகள் பாடல்கள் பலவும் தென்மொழி, தமிழ்சிட்டு ஆகிய இதழ்களில் வெளிவந்தவை. இந்நூல் குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை என முப்பிரிவாக அமைந்துள்ளது.

**13] சங்கப்புலவர் ---------- பேரின் கருத்துப்போரைத் தீர்க்க இறைவனே தலைமைப்புலவராய் எழுந்தருளினார். அவரையும் சேர்த்துச் சங்கப்புலவர் ----------- பேர் ஆயினர்.**

1] 45, 46 2] 46, 47 3] 47, 48 **4] 48, 49**

**14] வங்கிய சேகரபாண்டியனின் மகன் வங்கிய சூடாமணிபாண்டியன் இறைவனுக்குச் சண்பகமாலை சாத்தி வழிபடக் கருதிச் சண்பக நந்தவனத்தை ஏற்படுத்தினான். இதனால், சூடாமணிபாண்டியனுக்குச் ----------- என்னும் பெயர் வழங்கலாயிற்று.**

விடை :- சண்பகப் பாண்டியன்

**15] இவற்றில் பொருந்தாதது எது?**

1] வையை நாடவன் – பாண்டியன்

2] உய்ய – பிழைக்க

3] இரந்து செப்பினான் – பணிந்து வேண்டினான்

**4] மருங்கு - தூரம்**

**16] உரைத்து, இரந்து, சொல்லி, இறைஞ்சி, விளக்கி, சிறந்து - இவற்றின் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] தொழிற்பெயர்

2] பெயரெச்சம்

3] வினைத்தொகை

**4] வினையெச்சம்**

**விளக்கம் :-** வினையெச்சம் :- வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம். இது கால வகையால் மூன்று வகைப்படும்.

[1] இறந்தகால வினையெச்சம் - ஓடி வந்தான்

[2] நிகழ்கால வினையெச்சம் - ஓடி வருகின்றான்.

[3] எதிர்கால வினையெச்சம் - ஓடி வருவான்

**குறிப்பு :** இவை 'உ'கர, 'இ'கர, மற்றும் 'ய'கர இறுதியுடன் ஒரு எச்சச்சொல்லில் நிற்கும்.

**வினையெச்சத்தை எப்படி எளிதாக கண்டுபிடிப்பது?**

(எ.கா) படித்து முடித்தான், வந்து சென்றான், ஓடி மறைந்தான், பாடி முடித்தான், சென்று வந்தான்.

- படித்து முடித்தான், வந்து சென்றான், ஓடி மறைந்தான், பாடி முடித்தான், சென்று வந்தான் போன்ற வாக்கியங்களைக் கொடுத்து இதன் இலக்கண வகை என்ன என்று வினா வரும்போது முதலில் உள்ள படித்து, வந்து, ஓடி, பாடி, சென்று போன்றவற்றை கணக்கிட்டுதான் அவைவினையெச்சம் என எண்ண வேண்டும்.

முதலில் படித்து, வந்து, சென்று போன்ற வார்த்தைகளை நன்றாக உச்சரித்துப் பாருங்கள். அவ்வார்த்தைகள 'உ' என்னும் சத்தத்தோடு முடியும்.

**17] இரந்து = இர + த்(ந்) + த் + உ. இர – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – ?. இங்கு உ என்பது எதனைக் குறிக்கும்?**

1] பெயரெச்ச விகுதி

**2] வினையெச்ச விகுதி**

3] இறந்தகால இடைநிலை

4] தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**18] "கொங்குதேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் பாடலைச் சொல்லினிமை தோன்ற இயற்றித் தருமிக்கு வழங்கியவர் யார்?**

1] பரஞ்சோதி முனிவர்

2] சண்பகப் பாண்டியன்

3] நக்கீரன்

**4] சொக்கநாதர்**

**19] இவற்றில் பொருந்தாதது எது?**

1] தென்னவன் குலதெய்வம் – சொக்கநாதன் (அ) சுந்தரபாண்டியன்

**2] இன்னல் – இன்பம்**

3] நல்கினார் – அளித்தார்

4] இறைஞ்சி – பணிந்து

விளக்கம் :- இன்னல் என்றால் துன்பம் என்று பொருள்.

**20] மகிழ்ச்சி - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] உவமைத்தொகை

2] வினைத்தொகை

3] வினையெச்சம்

**4] தொழிற்பெயர்**

**21] கழகத்தின் வெளியில் தொங்கிய சிறந்த பொன் முடிப்பினை அறுத்தெடுக்கும் தருமியை, 'நில்' எனத் தடுத்தவர் யார்?**

1] பரஞ்சோதி முனிவர்

2] சண்பகப் பாண்டியன்

**3] நக்கீரன்**

4] சொக்கநாதர்

**22] பொருந்தாதது எது?**

1] விபுதர் – புலவர்

2] தூங்கிய – தொங்கிய

**3] நம்பி – நக்கீரன்**

4] புறம்பு – வெளியில்

**விளக்கம் :-** நம்பி என்ற பெயர் தருமியை குறிக்கும்.

**23] இலக்கணக்குறிப்பு - பொருந்தாதது எது?**

1] ஆய்ந்த பொற்கிழி – பெயரெச்சம்

**2] நோக்கி - வியங்கோள் வினைமுற்று**

3] கிளத்தினேன் - தன்மை ஒருமை வினைமுற்று

4] தேராக் கீரன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**விளக்கம் :-** நோக்கி - என்பதன் இலக்கணக்குறிப்பு வினையெச்சம்.

**24] பொருத்தமற்றதை தேர்வு செய்க?**

1] பையுள் – வருத்தம்

2] பனவன் – அந்தணன்

3] கண்டம் – கழுத்து

**4] வழுவு பாடல் – குற்றமற்ற பாடல்**

**விளக்கம் :-** வழுவு பாடல் – குற்றமுள்ள பாடல்.

**25] "மலர்கள் முதலியவற்றால் சாரும் மணம் அன்றி, இருளையொத்த கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை" - என்று கூறியவர் யார்?**

1] பரஞ்சோதி முனிவர்

2] சண்பகப் பாண்டியன்

**3] நக்கீரன்**

4] சொக்கநாதர்

**26] இவற்றில் பொருந்தாதது எது?**

1] வேணி - செஞ்சடை

2] அற்குற்ற (அல்கு+உற்ற) - இருளையொத்த

3] குழல் - கூந்தல்

**4] அல்கு - பகல்**

**விளக்கம் :-** அல்கு - என்பதன் பொருள் இரவு.

**27] இவற்றில் பொருந்தாதது எது?**

1] ஞானப்பூங்கோதை - உமையம்மை

2] கற்றைவார் சடையான் - சிவபெருமான்

3] உம்பரார் பதி - தேவர் தலைவன் (இந்திரன்)

**4] நாவலன் - இறைவன்**

**விளக்கம் :-** நாவலன் - என்பதன் பொருள் புலவர்.

**28] தேய்ந்த, பாய்ந்த, ஆய்ந்த, காய்ந்த - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினையெச்சம்

2] முற்றெச்சம்

3] பண்புத்தொகை

**4] பெயரெச்சம்**

**29] செந்தீ, வெம்மை - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினையெச்சம்

2] முற்றெச்சம்

**3] பண்புத்தொகை**

4] பெயரெச்சம்

**30] பரஞ்சோதி முனிவர் நாகை மாவட்டத்திலுள்ள ------------ என்னும் ஊரில் பிறந்தார்?**

விடை :- திருமறைக்காடு (வேதாரண்யம்)

**31] பரஞ்சோதி முனிவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர். இவரின் தந்தையார் ------------ ஆவார்.**

விடை :- மீனாட்சிசுந்தர தேசிகர்.

**32] இவற்றில் பொருந்தாதது எது?**

1] பரஞ்சோதி முனிவர் துறவியாகிச் சிவாலயங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டு வந்தார், அவ்வாறு மதுரை நகரினை அடைந்து மீனாட்சி அம்மனையும், சோமசுந்தர கடவுளையும் வணங்கினார். அந்நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

2] அந்நகரத்தார், இவரைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, திருவிளையாடற் புராணத்தை இயற்றினார்.

3] அந்நூலைச் சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி, தென்மொழிப் புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினார்.

**4] இவர் திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.**

**விளக்கம் :-** மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் ஆசிரியர் - குமரகுருபரர். மீதமுள்ள இரு நூல்களும் (திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி ) பரஞ்சோதி முனிவர் எழுதியது.

**33] திருவிளையாடற் புராணத்தில் எத்தனை காண்டங்கள் உள்ளன?**

**1] 3** 2] 4 3] 5 4] 6

**விளக்கம் :-** திருவிளையாடற் புராணம், மதுரைக்காண்டம் ( 18 படலம் ), கூடற்காண்டம் ( 30 படலம் ), திருவாலவாய்க்காண்டம் ( 16 படலம் ) என்னும் முப்பெரும் பகுதிகளையும், படலம் என்னும் 64 உட்பிரிவுகளையும் உடையது. இதில் 3363 விருத்தப்பாக்கள் உள்ளன. மதுரையில் இறைவன் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களை இப்படலங்கள் விளக்குகின்றன. தொடை நயமும் பத்திச்சுவையும் மிக்க இந்நூலுக்கு ந.மு.வேங்கடசாமி உரையெழுதியுள்ளார்.

**34] இறைவன் தருமிக்கு அருளிய பாடல் :-**

**கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**

**காமம் செப்பாது கண்டது மொழிமோ**

**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்**

**செறி எயிற்று அரிவை கூந்தலின்**

**நறியவும் உளவோ நீ அறியும் பூவே.**

- குறுந்தொகையின் இரண்டாம் பாடலாகிய இப்பாடல் திருவிளையாடல் திரைப்படத்தால் புகழ்பெற்றது.இறைவனே (இறையனார்) எழுதியதாக நம்பப் படுகிறது.

**35] " திரைகடல் ஓடியும் திரவியம் தேடு " - என்று கூறியவர் யார்?**

**1] ஔவையார்**

2] பாரதியார்

3] பாரதிதாசன்

4] கணியன் பூங்குன்றனார்

**36] "யாதும் ஊரே யாவரும் கேளிர்" - என்று கூறியவர் யார்?**

1] ஔவையார்

2] பாரதியார்

3] பாரதிதாசன்

**4] கணியன் பூங்குன்றனார்**

**37] பழங்காலத்தில், தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி முந்நீர் வழக்கம் என -------------- நூல் குறிப்பிடுகிறது?**

1] பட்டினப்பாலை

2] முதுமொழிக்காஞ்சி

3] நற்றிணை

**4] தொல்காப்பியம்**

**38] பழந்தமிழர் பொருளீட்டுதலைத் தம் கடமையாகக் கருதினர். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பொருள்வயிற் பிரிவு விளக்குகிறது. இப்பிரிவு எத்தனை வகைப்படும்?**

**1] 2** 2] 3 3] 4 4] 5

**விளக்கம் :-** காலில் (தரைவழிப்பிரிதல்) பிரிவு, கலத்தில் (நீர்வழிப் பிரிதல்) பிரிவு என இருவகைப்படும்.

**39] பழந்தமிழர், கிரேக்கரையும் உரோமானியரையும் -------------- என அழைத்தனர்?**

1] கலம்செய் கம்மியர்

**2] யவனர்**

3] நண்பர்

4] இவற்றில் ஏதுமில்லை

**40] பழங்காலத்திலேயே தமிழகத்தில் பலவகையான கப்பல்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு பெரிய கப்பலும், மதில்சூழ்ந்த கோட்டைபோலத் தோன்றுமாம். அஃதாவது, நான்கு பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள், அதன் நடுவில் தனியாக மதிலோடு கூடிய மருதநில அரசனது கோட்டை. அக்கோட்டையின் தோற்றமானது, நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாக எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?**

1] அகநானூறு

2] குறுந்தொகை

**3] புறநானூறு**

4] கலித்தொகை

**41] ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி என்பவை --------------- என்பதை குறிக்கும் தமிழ்சொற்கள்.**

1] மரக்கலம்

2] ஆறு

**3] கடல்**

4] கேணி

**42] கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் என்பவை --------------- என்பதை குறிக்கும் தமிழ்சொற்கள்.**

**1] மரக்கலம்**

2] ஆறு

3] கடல்

4] கேணி

**43] கடலில் செல்லும் பெரிய கலம் (கப்பல்) நாவாய் எனப்படும். புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவதுபோல் அசைந்தன. அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின என கூறும் நூல் எது?**

1] அகநானூறு

2] குறுந்தொகை

3] புறநானூறு

**4] பட்டினப்பாலை**

**44] கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என்பதனைப் ------------------ பாடல் கூறுகிறது?**

1] அகநானூறு

2] குறுந்தொகை

**3] புறநானூறு**

4] பட்டினப்பாலை

**45] முசிறி, சேர மன்னனுக்குரிய துறைமுகம், அங்குச் சுள்ளி என்னும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள், ஆற்றுத்துறைகள் கலங்கிப் போகும்படி வந்து நின்றன. அக்கலங்களுக்கு உரிய யவனர்கள், பொன்னைச் சுமந்து வந்து, அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்றார்கள். இச்செய்தியை, கூறும் நூல் எது?**

**1] அகநானூறு**

2] குறுந்தொகை

3] புறநானூறு

4] பட்டினப்பாலை

**46] பாண்டிய நாட்டு வளத்தைப் பெருக்கியது கொற்கைத் துறைமுகம், இத்துறைமுகத்தில் முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக நடந்ததனை வெனிசு நாட்டறிஞரான ----------------- என்பவர் குறிப்பிட்டுள்ளார்.**

1] யுவான் சுவாங்

2] பாணர்

**3] மார்க்கோபோலோ**

4] மெகஸ்தனீசு

**47] கொற்கை துறைமுகத்தில் சங்க காலத்தும் முத்துக்குளித்தல் நடந்தது. ஏற்றுமதிப் பொருள்களில் முத்தே முதலிடம் பெற்றது. மதுரைக்காஞ்சியும் சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முத்தினைச் சிறப்பிக்கின்றன. விளைந்து முதிர்ந்த விழுமுத்து என ----------------------- நூல் குறிப்பிடுகிறது.**

**1] மதுரைக்காஞ்சி**

2] குறுந்தொகை

3] புறநானூறு

4] பட்டினப்பாலை

**48] சோழநாட்டின் துறைமுகமாகிய -------------------------- என்ற இடத்தில், சுங்கச்சாலையும் கலங்கரை விளக்கமும் இருந்தன.**

**1] காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்)**

2] கொற்கை

3] முசிறி

4] இவற்றில் ஏதுமில்லை

**49] இவற்றில் பொருந்தாதது எது?**

1] இமயத்திலுண்டான - மணிகளும் பொன்னும்

2] குடகு மலையிற் பிறந்த - சந்தனமும் அகிலும்

3] கொற்கை - ஏலக்காய்

**4] ஈழ நாட்டிலிருந்து வந்த - உணவுப் பொருள்கள்**

**விளக்கம் :-** கொற்கைத்துறையிற் பிறந்த முத்தும்.

**50] பழந்தமிழகத்தின் வாணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் எந்த நூலில் காணப்படுகின்றன?**

1] அகநானூறு, புறநானூறு

2] பதிற்றுப்பத்து, கலித்தொகை

**3] பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி**

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம் :-** பழந்தமிழகத்தின் வாணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் காணப்படுகின்றன. இங்கிருந்து ஏற்றுமதியான பொருள்களுள் இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி முதலியன குறிப்பிடத்தக்கவை. தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன. சீனத்துப் பட்டும் சருக்கரையும் தமிழகத்துக்கு இறக்குமதி ஆயின. கரும்பு, அதியமானின்முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது.

**51] ------------- என்பவர் அமெரிக்காவின், புகழ்பெற்ற எழுத்தாளராகவும் அரசியல் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார்.**

1] சாக்ரடீசு

**2] கெலன் கெல்லர்**

3] சேக்சுபியர்

4] முசோலினி

**52] "உங்களுக்கு மிகவும் விருப்பமான ஒன்றனைப் பெற விரும்பினால், அஃது என்னவாக இருக்க வேண்டுமெனக் கேட்பீர்கள்" என்று கேட்க - "இந்த உலகத்தில் அமைதி மலரவேண்டும் எனக் கேட்பேன்" - என்று கூறியவர் யார்?**

1] சாக்ரடீசு

**2] கெலன் கெல்லர்**

3] சேக்சுபியர்

4] முசோலினி

**53] கெலன் கெல்லர், ஆறு வயதானபோது அலெக்சாண்டர் கிரகாம்பெல் உதவியால் ----------- பள்ளியில் சேர்ந்தார்.**

1] ஹோரஸ்மான்

2] ரைட்ஹுமாசன்

3] கேம்ப்ரிட்ஜ்

**4] பெர்கின்ஸ்**

**விளக்கம் :-** ஆறு வயதான போது அலெக்சாண்டர் கிரகாம்பெல் உதவியால் பெர்கின்ஸ் பள்ளியில் (பெர்கின்ஸ் பள்ளி என்பது பார்வையற்றோருக்கான பள்ளி. அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் அமைந்துள்ளது.) சேர்ந்தார். அங்குப் பணிபுரிந்த அன்னிசல்லிவான் என்பவர் ஹெலனுக்கு ஆசிரியராக வாய்த்தார்.

கெலன் கெல்லர் பாஸ்டனில் உள்ள ஹோரஸ்மான் காதுகேளாதோருக்கான பள்ளியிலும், நியூயார்க்கில் உள்ள ரைட் ஹுமாசன் பள்ளியிலும் முறைப்படி பயின்றார்.

winmeen.com

**54] கெலன் ------------- முறையில் எழுதவும் படிக்கவும் செய்வார்.**

**விடை :- பிரெய்லி.**

**விளக்கம் :-** கெலன் பிரெய்லி முறையில் எழுதவும் படிக்கவும் செய்வார். அவர், தனக்கெனத் தனியாகத் தயாரிக்கப்பட்ட தட்டச்சு இயந்திரத்தினைப் பயன்படுத்தினார். ஆசிரியை அன்னி அளித்த பயிற்சியின் பயனாக, கேம்ப்ரிட்ஜ் ரெட் கிளிப் கல்லூரி நுழைவுத் தேர்வில் வெற்றிபெற்று, இளங்கலைப்பட்ட வகுப்பில் சேர்ந்தார். பட்டமும் பெற்றார். இவர் பல நூல்களை எழுதினார். போர்களை எதிர்த்து உலக நாடுகள் பலவற்றிற்கும் சுற்றுப்பயணம் செய்தார்.

**55] பார்வையற்றோருக்கெனத் தேசிய நூலகம் ஒன்றனை உருவாக்கி, உலகம் முழுவதிலும் இருந்து நூல்கள் வந்து குவிய ஏற்பாடு செய்தவர் யார்?**

1] சாக்ரடீசு

**2] கெலன் கெல்லர்**

3] சேக்சுபியர்

4] முசோலினி

**56] "வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை; ஒன்றுபோனால் இன்னொன்று வரும். அந்த நம்பிக்கை இருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது" - என்று கூறியவர் யார்?**

1] விவேகானந்தர்

**2] கெலன் கெல்லர்**

3] ஜான் பிரிட்டோ

4] முசோலினி

**57] நீங்கள் கண்பார்வை அற்றவராகவும், காது கேளாதவராகவும் இருந்தும் கூட எப்படி உங்களால் சாதிக்க முடிந்தது? என கெலன் கெல்லரிடம் கேட்டவர் யார்?**

1] ஜான் பிரிட்டோ

2] முசோலினி

3] காந்தி

**4] விக்டோரியா மகாராணி**

**58] கெலன் கெல்லரின் மொழிபெயர்ப்பாளர் யார்?**

1] ஜான் ரொனால்டோ

2] சான் மைக்கேல்

**3] பாலி தாம்சன்**

4] விக்டர்

**விளக்கம் :-** ஆசிரியர் அன்னி 1930 ஆம் ஆண்டு இறந்துவிடத் தனது மொழி பெயர்ப்பாளர் பாலி தாம்சன் என்பவர் அவருக்கு உதவினார். ஜப்பான் முதலான நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். ஹெலன், வாஷிங்டன் நகரின் புகழ்பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தார்.

**59] "மனிதர்கள் எல்லாவற்றையும் எளிதாக எடுத்துக்கொள்கிறார்கள்; அவர்கள் எதையுமே முதன்மையாகக் கருதுவதில்லை. எதனையாவது இழந்த பிறகுதான் அதன் அருமையை உணர்கிறார்கள்" - என்று கூறியவர் யார்?**

1] விவேகானந்தர்

**2] கெலன் கெல்லர்**

3] ஜான் பிரிட்டோ

4] அம்பேத்கர்

**60] ஒருநாள் இரவு ஹெலன் கெல்லர், கடவுளின் அருளால் ------------ நாள் மட்டுமே தமக்குப் பார்வை கிட்டியதாகக் கனவு கண்டார்.**

1] 2 **2] 3** 3] 4 4] 5

**விளக்கம் :- முதல் நாள்**, கண்ணொளி கிடைத்ததும் முதன்முதலில் பார்த்தது, அவரின் கல்விக்கண் திறந்து வைத்த ஆசிரியரின் முகத்தையே. அவரைச் சந்தித்ததற்குப் பின், பொறுமை, அன்பு, இரக்கம், துணிவு, தன்னம்பிக்கை ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாகத் தமது ஆசிரியர் திகழ்வதனை உணர்ந்தார். ஆசிரியரைப் பார்த்ததற்குப் பின் அவர், தமது உயிர்தோழிகளைச் சந்தித்தார்.

**இரண்டாவது நாள்,** ஹெலன் கெல்லர் கதிரவன் தோன்றுவதனைக் கண்டார். அன்று நியூயார்க்கிலுள்ள அருங்காட்சியகத்தைக் கண்டு, இயற்கை வரலாற்றைத் தெரிந்து கொண்டார். அருங்காட்சியகம் அவருக்கு உலக மரபியல் வளர்ச்சியை அறிந்துகொள்ளப் பேருதவியாக இருந்ததை எண்ணி மகிழ்ந்தார். பெருநகரப் பொருட்காட்சிச் சாலையில் இடம்பெற்றிருந்த புகழ்பெற்ற கலைஞர்கள், லியனார் டோ டாவின்சி முதலானோர் ஓவியங்களையும் கலைபொருள்களையும் கண்டுமகிழ்ந்தார். பிறகு, ஹெலன், ஷேக்ஸ்ப்பியருடைய நாடகமொன்றனைப் பார்த்தார்.

**மூன்றாவது நாள்,** நகரின் கிழக்குப் பக்கத்திலுள்ள ஆற்றுப்பாலத்தை உற்று நோக்கினார். பின்பு, நியூயார்க்கில் உள்ள வானளாவிய இரட்டைக் கோபுரக் கட்டடத்தைக் கண்டுகளித்தார். ஹெலன் மூன்றாம் நாள் சொன்னது எனது கண்கள் துக்கத்தையும் மகிழ்ச்சியையும் முதன்முதலாகக் கண்டன.

**61] உலகின் எட்டாவது அதிசயம் எனப் பாராட்டப் பெற்றவர் யார்?**

1] திருவள்ளுவர்

2] சேக்சுபியர்

**3] கெலன் கெல்லர்**

4] காந்தி

**62] --------------- ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள அலபாமா மாகாணத்தில் துஸ்கும்பியாவில் பிறந்து, சாதனையாளராகத் திகழ்ந்தவர் கெலன் கெல்லர்.**

**விடை :-** 1880 ஜூன் 27.

**குறிப்பு :-** 1968 ஆம் ஆண்டு ஜூன் முதல் நாள் கெலன் கெல்லர் இறந்தார்.

**63] பார்வையற்றோருக்கான எழுத்துமுறையை உருவாக்கியவர் யார்?**

**விடை :- பிரெய்லி.**

**64] செய்யுளின் உறுப்புகள் எத்தனை?**

1] 5 **2] 6** 3] 7 4] 8

**விளக்கம் :-** யாப்பு – யாக்கப்படுவது – கட்டப்படுவது. யாப்பு என்பது செய்யுள். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறும் செய்யுளின் உறுப்புகளாகும்.

**65] எழுத்தானது தனியாகவோ பல சேர்ந்தோ ஓசையுடன் அசைந்து (பிரிந்து) நிற்பது -------------- எனப்படும்?**



winmeen.com

**1] அசை**

2] சீர்

3] தளை

4] அடி

**விளக்கம் :-** எழுத்தானது தனியாகவோ பல சேர்ந்தோ ஓசையுடன் அசைந்து (பிரிந்து) நிற்பது அசை எனப்படும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

(1) நேரசை , (2) நிரையசை.

**(1) நேரசை:-** குறில் தனித்தும் குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும் நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசை எனப்படும்.

**(எ.கா.) :**

குறில் தனித்து வரல் – க.

குறில் ஒற்றுடன் வரல் – கல்.

நெடில் தனித்து வரல் – கா.

நெடில் ஒற்றுடன் வரல் – கால்.

**(2) நிரையசை :**

குறில் இணைந்தும் குறில் இணைந்து ஒற்றும், குறில் நெடில் இணைந்தும், குறில் நெடில் இணைந்து ஒற்றும் வருவது நிரையசை.

**(எ.கா.) :**

குறில் இணைந்து வரல் – பட.

குறில் இணைந்து ஒற்றுடன் வரல் – படம்.

குறில் நெடில் இணைந்து வரல் – படா.

குறில் நெடில் இணைந்து ஒற்றுடன் வரல் – படாம்.

**66] அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி, அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும். அஃது எத்தனை வகைப்படும்?**

1] 3 **2] 4** 3] 5 4] 6

**விளக்கம் :-** அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி, அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும். அஃது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நால்வகைப்படும்.

**67] வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசையுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். அவற்றை -------------- என்பர்.**

**1] ஓரசைச்சீர்**

2] ஈரசைச்சீர்

3] மூவசைச்சீர்

4] நாலசைச்சீர்

**விளக்கம் :-** வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசையுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். அவற்றை ஓரசைச்சீர் என்பர். அவை நாள் (நேர்), மலர் (நிறை), காசு (நேர்பு), பிறப்பு (நிரைபு) என நால்வகை வாய்பாடுகளுள் ஒன்றனைப் பெறும்.

**(எ.கா.) :**

1. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்

அவியினும் வாழினும் **என்.** [ என் – நேர் (நாள்) ]

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது

வயிற்றுக்கும் ஈயப் **படும்**. [ படும் – நிரை (மலர்) ]

3. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல

நாட வளந்தரு **நாடு.** [ நாடு – நேர்பு (காசு) ]

4. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே **உலகு [** உலகு – நிரைபு (பிறப்பு) ]

**68] ஈரசை சேர்ந்து ஒரு சீர் ஆவது ------------ எனப்படும்?**

1] ஓரசைச்சீர்

**2] ஈரசைச்சீர்**

3] மூவசைச்சீர்

4] நாலசைச்சீர்

**விளக்கம் :-** ஈரசைச்சீர் :- ஈரசை சேர்ந்து ஒரு சீர் ஆவது ஈரசைச்சீர். நேரில் முடிவது இரண்டும், நிறையில் முடிவது இரண்டுமாக ஈரசைச்சீர் நான்கு ஆகும்.

**நேர் நேர்** – தேமா – மாச்சீர் – 2 (தேமா, புளிமா என மாவில் முடிவடைவதனால் மாச்சீர்.)

**நிரை நேர்** – புளிமா – மாச்சீர் – 2 (தேமா, புளிமா என மாவில் முடிவடைவதனால் மாச்சீர்.)

**நிரை நிரை** – கருவிளம் – விளச்சீர் – 2 ( கருவிளம், கூவிளம் என விளத்தில் முடிவதனால் விளச்சீர்.)

**நேர் நிரை** – கூவிளம் – விளச்சீர் – 2 ( கருவிளம், கூவிளம் என விளத்தில் முடிவதனால் விளச்சீர்.)

(ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியப்பாவுக்கு உரியவை.) இவை இயற்சீர் எனவும், ஆசிரிய உரிச்சீர் எனவும் வழங்கப்படும்.

**69] மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது ----------- எனப்படும்?**

1] ஓரசைச்சீர்

2] ஈரசைச்சீர்

**3] மூவசைச்சீர்**

4] நாலசைச்சீர்

**விளக்கம் :-** மூவசைச்சீர் : எட்டு.

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது மூவசைச்சீர். நேரசையில் முடிவது நான்கும் நிறை ஆசையில் முடிவது நான்குமாக மூவசைச்சீர் எட்டுஆகும்.

**காய்ச்சீர்கள் – நான்கு :**

1] நேர் நேர் நேர் – தேமாங்காய்.

2] நிரை நேர் நேர் – புளிமாங்காய்.

3] நிரை நிரை நேர் – கருவிளங்காய்.

4] நேர் நிரை நேர் – கூவிளங்காய்.

இவை வெண்பாவுக்கு உரியதனால், வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.

**கனிச்சீர்கள் – நான்கு :**

1] நேர் நேர் நிரை – தேமாங்கனி.

2] நிரை நேர் நிரை – புளிமாங்கனி.

3] நிரை நிரை நிரை – கருவிளங்கனி.

4] நேர் நிரை நிரை- கூவிளங்கனி.

இவை வஞ்சிப்பாவுக்கு உரியதனால், வஞ்சியுரிச்சீர் எனவும் கூறுவர்.

**70] மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால், ---------------- பதினாறு கிடைக்கும். இதனைப் பொதுச்சீர் எனக் கூறுவர்.**

1] ஓரசைச்சீர்

2] ஈரசைச்சீர்

3] மூவசைச்சீர்

**4] நாலசைச்சீர்**

**விளக்கம் :-** மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால், நாலசைச்சீர் பதினாறு கிடைக்கும். இதனைப் பொதுச்சீர் எனக் கூறுவர். பொதுச்சீர்கள் தண்பூ, தண்நிழல், நறும்பூ, நறுநிழல் ஆகிய வாய்ப்பாடுகளைக் கொண்டு முடியும்.

**71] உலகில் இல்லாத பொருளை ஒன்றனுக்கு உவமையாக்கிக் கூறுவது ------------ எனப்படும்.**

1] வேற்றுப்பொருள் வைப்பணி

2] வேற்றுமை அணி

**3] இல்பொருள் உவமையணி**

4] ஏகதேச உருவக அணி

**விளக்கம் :-** இல்பொருள் உவமையணி :- உலகில் இல்லாத பொருளை ஒன்றனுக்கு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமையணி எனப்படும்.

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**

**வற்றல் மரந்தளிர்த் தற்று.**

- இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள், உள்ளத்தில் அன்பில்லாத ஒருவர் குடும்ப வாழ்க்கை நடத்துவது என்பது, பாலை நிலத்தில், பட்டமரம் தளிர்விட்டு வளர்வது போன்றது. திருவள்ளுவர், இக்குறட்பாவில் அன்பில்லாதவன் வாழ்க்கை, பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்விட்டு வளர்வதற்கு ஒப்பானது என இல்லாத பொருளை உவமித்துக் கூறுகிறார். புலவன், உலகில் இயல்பாக இல்லாத பொருளை இவ்வாறு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமையணி ஆகும்.

**72] புலவர் தாம் கருதிய பொருளை நிலைநாட்ட, உலகம் அறிந்த வேறொரு பொருளைச் சான்றுகாட்டிக் கூறும்போது, பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் விளக்குவதனை -------------------- என்பர்.**

**1] வேற்றுப்பொருள் வைப்பணி**

2] வேற்றுமை அணி

3] இல்பொருள் உவமையணி

4] ஏகதேச உருவக அணி

விளக்கம் :- வேற்றுப்பொருள் வைப்பணி :- புலவர் தாம் கருதிய பொருளை நிலைநாட்ட, உலகம் அறிந்த வேறொரு பொருளைச் சான்றுகாட்டிக் கூறும்போது, பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் விளக்குவதனை வேற்றுப்பொருள் வைப்பணி என்பர்.

உரைமுடிவு காணான் இளையோன் என்ற

நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்

சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை

கல்லாமல் பாகம் படும் .

- இப்பாடலில் கரிகாலன் இளமையில் நரைமுடித்து வந்து, வழக்கில் நீதி வழங்கினான் என்பது சிறப்புச் செய்தி. வழிவழியாக நீதி தவிராமல் ஆட்சி புரிந்துவரும் சோழர் குலத்தில் தோன்றியமையால், இயல்பாகவே கரிகாலனும் சிறந்த நீதி வழங்கினான் என்பது பொதுப் பொருள். எனவே, சிறப்புப் பொருளால் பொதுப் பொருள் விளக்கப்பட்டுள்ளதனால் இப்பாடலில் வேற்றுப்பொருள் வைப்பணி அமைந்துள்ளது.

**73] சூட்டடுப்பு - என்பது கீழ்க்கண்டவற்றில் எதனைக் குறிக்கிறது?**

1] குளிர்சாதனப்பெட்டி

2] குளிரூட்டும் பெட்டி

3] வாயுஅடுப்பு

**4] கணப்புப்புரை**

**74] மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்**

**வருத்தத்தை ஒருசிறி தெனினும்**

**கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்**

**கணமும்நான் சகித்திட மாட்டேன்  - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] வள்ளலார்**

4] நாமக்கல் கவிஞர்

**75] இன்றைய தோல்வி நாளைய வெற்றிக்கு அடிக்கல் என்ற நம்பிக்கையுடன், இளமை நலமிக்க ஊக்கத்துடன் வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக்கொள்க - இது யாருடைய கூற்று?**

1] இராமலிங்க அடிகளார்

2] நாமக்கல் கவிஞர்

**3] குன்றக்குடி அடிகளார்**

4] பாரதியார்

**76] பிறவியிலேயே இரு கையும் இல்லாமல், தன்னிரு காலால் வானூர்தியை ஊட்டிய முதல் பெண்மணி என்னும் பெருமைக்குரியவர் யார்?**

1] அஞ்சும் ஜார்ஜ்

2] லால் மெரி

**3] ஜெசிக்கா காக்ஸ்**

4] விக்டோரியா

## ஒன்பதாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 4

**1] செவிக்குணவு இல்லாத போழ்து, சிறிது**

**------------------------------- விடுபட்டதை தேர்வு செய்க?**

1] ஆன்றாரோ டொப்பர் நிலத்து

**2] வயிற்றுக்கும் ஈயப் படும்**

3] ஒற்கத்தின் ஊற்றாந் துணை

4] தீண்டிய கேள்வி யவர்

**2] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

1] வயிற்றுக்கும் - இழிவுச்சிறப்பும்மை

2] அவியுணவு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

3] ஊற்று - ஊன்று என்பதன் வலித்தல் விகாரம்

**4] இழுக்கல், ஒழுக்கம் - வினைத்தொகை**

**விளக்கம் :-** இழுக்கல், ஒழுக்கம் - என்பதன் இலக்கணக்குறிப்பு தொழிற்பெயர்கள்.

**3] கற்றிலன் ஆயினும் கேட்க, அஃதொருவற்(கு)**

**-------------------------------------- விடுபட்டதை தேர்வு செய்க?**

1] ஆன்றாரோ டொப்பர் நிலத்து

2] வயிற்றுக்கும் ஈயப் படும்

**3] ஒற்கத்தின் ஊற்றாந் துணை**

4] தீண்டிய கேள்வி யவர்

**4] பொருத்தமற்றதை தேர்வு செய்க.**

1] ஒற்கம் - தளர்ச்சி

2] தலை - முதன்மை

3] ஊற்று - ஊன்றுகோல்

**4] அற்றே - நிறைந்த**

**விளக்கம் :-** அற்றே - என்பதன் பொருள் போன்றதே.

**5] இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்**

**- இந்த குறளில் பயின்று வந்துள்ள அணி எது?**

1] ஏகதேச உருவக அணி

2] இல்பொருள் உவமையணி

3] வேற்றுமையணி

**4] உவமையணி**

**6] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

1] ஆன்ற பெருமை - பெயரெச்சம்

2] கேளாத் தகையவே - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

3] அவியினும் வாழினும் - எண்ணும்மை

**4] விடல் - வியங்கோள் வினைமுற்று**

**விளக்கம் :-** விடல் என்பதன் இலக்கணக்குறிப்பு - தொழிற்பெயர்.

**7] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

1] சுவையுணரா - சுவை + உணரா

2] வாயுணர்வு - வாய் + உணர்வு

3] செவிக்குணவு - செவிக்கு + உணவு

**4] காடிதனை - காடி + இதனை**

**விளக்கம் :-** காடிதனை - என்பதன் சரியான பிரித்தறிதல் = காடு + இதனை.

**8] பொருந்தாதது எது?**

1] பிழைத்துணர்ந்தும் - தவறாக உணர்ந்திருந்தாலும்

2] பேதைமை - அறியாமையின்பாற்பட்ட தீயசொற்கள்

3] இழைத்துணர்ந்து - நுட்பமாக ஆராய்ந்து

**4] ஈண்டிய - போன்றதே**

**விளக்கம் :-** ஈண்டிய என்பதன் சரியான பொருள் ஆய்ந்தறிந்த.

**9] பகுபத உறுப்பிலக்கணம் :-**

உணர்ந்து = உணர் + த் (ந்) + த் + உ . இங்கு உணர் - பகுதி; த் - சந்தி; த் - ந் ஆனது விகாரம்; த் - இறந்தகால இடைநிலை ; உ - என்பது என்ன?

1] பெயரெச்ச விகுதி

**2] வினையெச்ச விகுதி**

3] வியங்கோள் வினைமுற்று விகுதி

4] ஆண்பால் வினைமுற்று விகுதி

**10] நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய ---------------------------------- விடுபட்டதை தேர்வு செய்க.**

**1] வாயின ராதல் அரிது**

2] வயிற்றுக்கும் ஈயப் படும்

3] ஒற்கத்தின் ஊற்றாந் துணை

4] தீண்டிய கேள்வி யவர்

**11] செவிக்குணவாவது**

1] புகழ் **2] கேள்வி** 3] மகிழ்ச்சி 4] வருத்தம்

**12] ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்**

**1] ஊற்றுக்கோல்**

2] அளவுகோல்

3] துலாக்கோல்

4] விலைமதிப்பற்றது

**13] திருக்குறளில் ------------ அதிகாரங்கள் உடைமை என்னும் பெயரில் அமைந்துள்ளன.**

1] எட்டு

2] ஒன்பது

**3] பத்து**

4] பதினொன்று

**விளக்கம் :-** உடைமைகள் பத்து. திருக்குறளில் பத்து அதிகாரங்கள் உடைமை என்னும் பெயரில் அமைந்துள்ளன. 1.அன்புடைமை 2.அடக்கமுடைமை 3.ஒழுக்கமுடைமை, 4.பொறையுடைமை 5.அருளுடைமை. 6.அறிவுடைமை, 7.ஊக்கமுடைமை 8.ஆள்வினையுடைமை, 9.பண்புடைமை, 10.நாணுடைமை.

**14] திருக்குறளுக்கும் ---------- என்னும் எண்ணுக்கும் பெரிதும் தொடர்புள்ளது.**

1] நான்கு

2] ஐந்து

3] ஆறு

**4] ஏழு**

**விளக்கம் :-** திருக்குறளுக்கும் ஏழு என்னும் எண்ணுக்கும் பெரிதும் தொடர்புள்ளது. திருக்குறள் ஏழுசீரால் அமைந்த குறள் வெண்பாக்களைக் கொண்டது. ஏழு என்னும் எண்ணுப்பெயர் எட்டுக் குறட்பாவில் இடம்பெற்றுள்ளது. அதிகாரங்கள், 133. இதன் கூட்டுத்தொகை ஏழு. மொத்தக்குறட்பாக்கள் 1330. இதன் கூட்டுத்தொகையும் ஏழு.

**15] பழந்தமிழ் கற்றல் இன்பம், பலநாடு சுற்றல் இன்பம், எழுந்திடு புதுமை தன்னை ஏற்றிடல் வாழ்வுக் கின்பம், குழந்தையின் தளிர்க்கை பட்ட கூழினை உண்ப தின்பம், இழந்ததைப் பெறுதல் இன்பம், இசைபட வாழ்தல் இன்பம். - என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?**

1] தாராபாரதி

2] முடியரசன்

**3] சுரதா**

4] வாணிதாசன்

**16] கற்றவர் முன் தாம் கற்ற கல்வியைக் கூறல் இன்பம், வெற்றியை வாழ்வில் சேர்க்கும் வினை பல புரிதல் இன்பம், சிற்றினக் கயவ ரோடு சேராது வாழ்தல் இன்பம், பெற்றதை வழங்கி வாழும் பெருங்குணம் பெறுதல் இன்பம் - என்ற பாடல்வரியின் ஆசிரியர் யார்?**

1] தாராபாரதி

2] முடியரசன்

**3] சுரதா**

4] வாணிதாசன்

**17] கற்றோர் அவையில், தான் கற்ற கல்வியை எடுத்துரைப்பதும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான செயல்களில் ஈடுபடுவதும் மகிழ்ச்சி தரும். கீழ்க்குணம் உடைய தீயோரின் நட்பை விலக்கி வாழ்தலும், தாம் பெற்ற செல்வத்தைப் பிறருக்கு வழங்கும் சிறந்த குணம் பெறுதலும் வாழ்விற்கு மகிழ்ச்சி தரும். - என்று கூறியவர் யார்?**

1] தாராபாரதி

2] முடியரசன்

**3] சுரதா**

4] வாணிதாசன்

**18] குழந்தை, தன் பிஞ்சுக்கையால் கூழ்போலப் பிசைந்த உணவை ஒருவன் உண்ணும் போதும், தான் இழந்த பொருளை மீண்டும் அடையும்போதும், பிறர் புகழுமாறு வாழும்போதும் மகிழ்ச்சி ஏற்படும். - என்று கூறியவர் யார்?**

1] தாராபாரதி

2] முடியரசன்

**3] சுரதா**

4] வாணிதாசன்

**19] பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்பது மகிழ்ச்சி தரும். பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வது மனத்துக்கு மகிழ்ச்சி தரும். காலந்தோறும் மாறிவரும் தேவையான புதுமைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் பெறுதல் வாழ்வுக்கு மகிழ்ச்சி தரும். - என்று கூறியவர் யார்?**

1] தாராபாரதி

2] முடியரசன்

**3] சுரதா**

4] வாணிதாசன்

**20] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :**

1] தளிர்க்கை - உவமைத் தொகை

2] பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் - பண்புத்தொகைகள்

**3] வழங்கி - பெயரெச்சம்**

4] கற்றல், பெறுதல், வாழ்தல் - தொழிற்பெயர்கள்

**விளக்கம் :-** வழங்கி என்பதற்கு சரியான இலக்கணக்குறிப்பு வினையெச்சம்.

**21] உவமைக் கவிஞர் சுரதாவின் இயற்பெயர் என்ன?**

1] துரை மாணிக்கம்

**2] இராசகோபாலன்**

3] இராசேந்திரன்

4] இராமச்சந்திரன்

**22] உவமைக் கவிஞர் சுரதா ---------------- மாவட்டத்திலுள்ள பழையனூரில் 23.11.1921 அன்று பிறந்தார்.**

1] மதுரை

2] நாமக்கல்

**3] திருவாரூர்**

4] தஞ்சாவூர்

**23] ------------ என்பவரின் பெற்றோர் திருவேங்கடம் -செண்பகம் ஆவர்.**

**1] உவமைக் கவிஞர் சுரதா**

2] துரை மாணிக்கம்

3] இராசேந்திரன்

4] இராமச்சந்திரன்

**24] பாவேந்தர் பாரதிதாசன் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைச் சுப்புரத்தினதாசன் என மாற்றிக்கொண்டவர் யார்?**

**1] உவமைக் கவிஞர் சுரதா**

2] துரை மாணிக்கம்

3] இராசேந்திரன்

4] இராமச்சந்திரன்

**25] தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும் முதலிய கவிதை நூல்களை இயற்றியவர் யார்?**

**1] உவமைக் கவிஞர் சுரதா**

2] தாராபாரதி

3] பாரதிதாசன்

4] வாணிதாசன்

**26] உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் எந்த கவிதை நூல், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது.**

**1] தேன்மழை**

2] துறைமுகம்

3] சுவரும் சுண்ணாம்பும்

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம் :-** உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் தேன்மழை என்ற கவிதை நூல், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது. தமிழக இயலிசை நாடக மன்றத்தின் கலைமாமணிப்பட்டத்தையும், தமிழக அரசின் பாவேந்தர் விருதையும் இவர் பெற்றுள்ளார். தேன்மழை நூலில் இயற்கையெழில் முதலாக ஆராய்ச்சி ஈறாகப் பதினாறு பகுதிகளாகக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

**27] தன்னலமற்ற தலைவர்; கர்மவீரர்; கல்விக்கண் திறந்த முதல்வர்; ஏழைப்பங்காளர் என்னும் புகழுரைகளுக்கெல்லாம் உரியவர் யார்?**

1] எம்.ஜி.ஆர்

2] அண்ணாதுரை

**3] காமராசர்**

4] பெரியார்

**28] ----------------- என்பவர் விருதுநகரில் குமாரசாமி, சிவகாமி இணையர்க்கு மகனாய் 1903 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் பதினைந்தாம் நாளன்று தோன்றினார்.**

1] எம்.ஜி.ஆர்

2] அண்ணாதுரை

**3] காமராசர்**

4] பெரியார்

**29] --------------- என்பவர் திண்ணைப் பள்ளியில் தமிழ் எழுத்துகளைக் கற்று, அதன் பிறகு ஓர் ஆண்டு தமிழ்ப்பாடம் கற்றார்.**

1] எம்.ஜி.ஆர்

2] அண்ணாதுரை

**3] காமராசர்**

4] பெரியார்

**30] --------------- என்பவர் தமது ஏழுவயதில் வந்தேமாதரம் என்று சுவரொட்டியில் எழுதப்பட்டிருப்பதனைக் கண்டார். அந்தச் சொல், அவரது மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அவரது உள்ளத்தில் மெல்ல மெல்ல விடுதலைப் போராட்ட உணர்வும் சுடர்விட்டுக் கொண்டிருந்தது. அவருக்குப் பன்னிரண்டு வயதிலேயே பள்ளிக்குச் செல்லவியலா நிலை ஏற்பட்டது.**

1] எம்.ஜி.ஆர்

2] அண்ணாதுரை

**3] காமராசர்**

4] பெரியார்

**31] ------------ என்பவர் மெய்கண்டான் புத்தகச்சாலை என்னும் நூல் நிலையத்திற்குச் சென்று இலெனின், கரிபால்டி, நெப்போலியன் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துத் திறமையாகப் பேசவும் வாதம் புரியவும் தொடங்கினார். அவர், இளமையில் தேசிய இயக்கமான காங்கிரசில் சேர்ந்து, அதன் தொண்டராகத் தம் அரசியல் வாழ்வினைத் தொடங்கினார்;**

1] எம்.ஜி.ஆர்

2] அண்ணாதுரை

**3] காமராசர்**

4] பெரியார்

**32] கீழ்க்கண்டவர்களில் சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு முதலிய போராட்டங்களில் கலந்துகொண்டவர் யார்?**

1] ராஜாஜி

2] பெரியார்

3] மபொ சிவஞானம்

**4] காமராசர்**

**விளக்கம் :-** காமராசர் சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு முதலிய போராட்டங்களில் கலந்துகொண்டார்; சிறை சென்றார். பதினோராண்டுகள் சிறையில் கழித்தார். அவரது தன்னலமற்ற உழைப்பைக்கண்ட தலைவர் சத்தியமூர்த்தி, காமராசரைக் கட்சியின் செயலாளராக நியமித்தார். சத்தியமூர்த்தியைக் காமராசர், தம் அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டார். இவர், 1937இல் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**33] 1939ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகக் ----------------- என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவியில் பன்னிரண்டு ஆண்டுகள் இருந்தார்.**

1] ராஜாஜி

2] பெரியார்

3] மபொ சிவஞானம்

**4] காமராசர்**

**34] 1945இல் பிரகாசம், 1947இல் ஓமந்தூர் இராமசாமி மற்றும் 1949இல் குமாரசாமி ஆகியோர் முதலமைச்சராகப் பதவியேற்பதற்குக் -------------- என்பவர் காரணமாக இருந்தார்.**

1] ராஜாஜி

2] பெரியார்

3] மபொ சிவஞானம்

**4] காமராசர்**

**35] நேருவின் மறைவுக்குப்பின் லால் பகதூர் சாஸ்திரியையும், லால் பகதூர் சாஸ்திரியின் மறைவுக்குப்பின் இந்திரா காந்தியையும் நாட்டின் முதன்மையமைச்சராக ஆக்கியதில் ---------------- என்பவர் பெரும்பங்காற்றினார். அதனால், தலைவர்களை உருவாக்குபவர் என இவர் அழைக்கப்பட்டார்.**

1] ராஜாஜி

2] பெரியார்

3] மபொ சிவஞானம்

**4] காமராசர்**

**36] 1954இல் இராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதும், ---------------- என்பவர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1963இல் தாமாகப் பதவி விலகும் வரை அப்பதவியில் திறம்படச் செயல்பட்டார்.**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**37] ------------ என்பவர் ஆட்சிக் காலத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் தொழிலமைச்சராகவும், சி.சுப்பிரமணியம் கல்வியமைச்சராகவும் இருந்து அவருக்கு உறுதுணையாகப் பணியாற்றினர்.**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**38] ------------ என்பவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**விளக்கம் :-** காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்போது, தமிழகத்தில் பொருளியல் தொழில்துறைத் திட்டங்கள் பல தொடங்கப்பட்டன; மின் திட்டங்கள் மிகுந்தன; சாலைகள் போடப்பட்டன; கிண்டி, அம்பத்தூர், இராணிப்பேட்டை முதலிய இடங்களில் பெரிய தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பெற்றன.

**39] இவர் ஆட்சி காலத்தில் தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத சிற்றூர்களே இல்லை என்னும் நிலை உருவனது. நெசவுத்தொழில் வளர்ச்சிக்காக இவர் பல திட்டங்களை தீட்டியுள்ளார். இவர் யார்?**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**40] நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, உதகை இந்துஸ்தான் போட்டோ பிலிம்தொழிற்சாலை, கிண்டி அறுவை சிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, சருக்கரை ஆலை, சோடா உப்புத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, பெரம்பூர்த் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை, மேட்டூர்க் காகிதத் தொழிற்சாலை முதலியன ------------- என்பவரது ஆட்சியில் தொடங்கப் பெற்றன.**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**41] ------------ என்பவர் காலத்தில் கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. தெருதோறும் தொடக்கப்பள்ளி, ஊர்தோறும் உயர்நிலைப் பள்ளி என்பதே அவரது நோக்கமாக அமைந்தது.**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**42] பள்ளி வேலை நாள்களை நூற்றெண்பதிலிருந்து (180) இருநூறாக (200) உயர்த்தியவர் யார்?**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**43] -------------- என்பவர் ஆட்சி காலத்தில் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுப் பள்ளிகளுக்கான அடிப்படை பொருள்களும் கருவிகளும் பெறப்பட்டன?**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**44] ------------- என்பவர் ஈராண்டுகளில் நூற்று முப்பத்து மூன்று (133) மாநாடுகள் கூட்டினார். இவ்வாறு கூட்டப்பட்ட மாநாடுகள் மூலம் பல கோடி ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் கிடைத்தன; உயர்நிலைப் பள்ளிவரை இலவசக் கல்வி கொண்டு வரப்பட்டது.**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**45] -------------- என்பவரால், ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், உடற்பயிற்சிக் கல்லூரிகளும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் திறக்கப்பட்டன. மருத்துவக் கல்லூரி முதலான தொழிற் கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடனளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**46] ------------ என்பவர் தஞ்சாவூர்ப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்திச் சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு அறுபது (60) விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை செய்தார். நிலச்சீர்திருத்தம் இவரால் கொண்டுவரப்பட்டது; நில உச்சவரம்பு முப்பது ஏக்கர் எனக் குறைக்கப்பட்டது.**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**47] மீனவர், கருப்புக்கட்டி காய்ச்சுபவர், கைத்தறியாளர், குயவர் முதலிய சிறுதொழிலாளர் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் நலத்திட்டங்களில் ஒய்வூதியம் குறிப்பிடத்தக்கது. நகர்ப்புற வீடுகட்டும் திட்டம், இலவச மருத்துவ வசதி முதலியனவும் ------------- என்பவரால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.**

1] எம்.ஜி.ஆர்

2] கருணாநிதி

3] அண்ணா

**4] காமராசர்**

**48] 1962 ஆம் ஆண்டு சீனப் படையெடுப்புக்குப் பின், காங்கிரசுக் கட்சியின் செல்வாக்குச் சரியத் தொடங்கியது. இடைத்தேர்தல்கள் சிலவற்றில் காங்கிரசுக் கட்சி தோல்வியடைந்தது. எனவே, கட்சியை வலுப்படுத்த மூத்த தலைவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப்பணியில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தியவர் யார்?**

1] ராஜாஜி

2] குமாரசாமி

**3] காமராசர்**

4] பெரியார்

**49] 1963ஆம் ஆண்டில் எங்கு காங்கிரசு மாநாடு கூடியது?**

1] புனே

2] சென்னை

3] கல்கத்தா

**4] புவனேசுவர்**

**விளக்கம் :-** புவனேசுவர் நகரில் 1963ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசு மாநாட்டில், காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராகப் பதவியேற்றார். அப்பொழுது நாடெங்கும் சுற்றுப்பயணம்மேற்கொண்டு கட்சிப்பூசல்களைப் போக்கி, மக்களிடம் நேரடித் தொடர்புகொண்டார். இரஷ்யாவிற்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அந்நாட்டுத் தொழில்முன்னேற்றங்களை நேரில் கண்டார்.

**50] இந்தியப் பிரதமர் நேரு காலமான ஆண்டு?**

1] 1962

2] 1963

**3] 1964**

4] 1965

**51] லால் பகதூர் சாஸ்திரி எதிர்பாராத முறையில் 1966 ஆம் ஆண்டு --------------- என்ற இடத்தில் உயிரிழந்தார்?**

1] மும்பை

2] டெல்லி

3] சிம்லா

**4] தாஸ்கண்ட்**

**52] லால் பகதூர் சாஸ்திரி அவர்களுக்கு அடுத்து பிரதமர் ஆனவர் யார்?**

**1] இந்திரா காந்தி**

2] தேவகவுடா

3] ராஜிவ் காந்தி

4] ஐ.கே.குஜ்ரால்

**53] காமராசருக்கு நடுவணரசு --------------- விருது அளித்துச் சிறப்பித்தது?**

1] பத்ம ஸ்ரீ

2] பத்ம பூஷன்

3] பத்ம விபூஷண்

**4] பாரத ரத்னா (இந்திய மாமணி)**

**54] தமிழக அரசு, காமராசரின் கல்விப்பணியை சிறப்பிக்கும் வகையில் ------------- பல்கலைக் கழகத்திற்கு அவரின் பெயரை சூட்டியுள்ளது.**

1] தஞ்சாவூர் பல்கலைக் கழகம்

**2] மதுரை பல்கலைக் கழகம்**

3] சென்னை பல்கலைக் கழகம்

4] திருச்சி பல்கலைக் கழகம்

**55] ---------------- என்னும் இடத்தில் காமராசருக்கு மணிமண்டபம் உள்ளது.**

1] சென்னை

**2] கன்னியாகுமரி**

3] மதுரை

4] திருச்சி

**விளக்கம் :-** தமிழக அரசு, கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் கட்டியது; சென்னை மெரீனா கடற்கரைச் சாலையில் சிலையமைத்துச் சிறப்பித்தது. காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது. விருதுநகரிலிருந்த காமராசரின் இல்லமும் அரசுடைமையாக்கி நினைவு இல்லமாக்கப்பட்டது. தேனாம்பேட்டையில் காமராசர் அரங்கம் நிறுவப்பட்டது.

**56] தமிழக அரசு, காமராசர் பிறந்த நாளான சூலைப் பதினைந்தாம் நாளை (ஜூலை 15) ஆண்டு தோறும் ----------- நாளாக அறிவித்துள்ளது. இவரைக் கல்விக் கண் திறந்தவர் எனத் தமிழுலகம் போற்றுகிறது.**

1] கல்வி தொண்டு நாள்

2] கல்வி கற்கும் நாள்

**3] கல்வி வளர்ச்சி நாள்**

4] கல்வி கற்பிக்கும் நாள்

**57] காந்தியடிகள் மீது அளவற்ற அன்பு கொண்ட காமராசர், ------------ ஆம் ஆண்டு காந்தியடிகளின் பிறந்தநாளான அக்டோபர் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும், இன்றைய தலைவர்களுக்கு முன்னோடியாக நின்று பெருந்தலைவர் என்னும் பொருத்தமான புகழுரையால் நிலைத்து வாழ்கிறார்.**

1] 1970

2] 1973

**3] 1975**

4] 1978

**58] தமிழரிலே தனித்தனியே இவர் இவர் இப்படி உயர்ந்தார் என்று சொல்வது பழைமை. தமிழர்கள் கூடிக்கூடி இன்னது செய்து உயர்ந்தார்கள் என்று சொல்லும் நற்சொல்லே இனி வேண்டும். - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

**3] மு.வரதராசனார்**

4] திரு.வி.க

**59] தமிழ்ச்சமுதாயம் உயர வேண்டுமா? தனி ஒருவன் அதோ ஒரு தொழிற்சாலையைத் திறமையாக நடத்துகிறான் என்று சொல்லும் நிலை போதாது. தமிழர் பலர் கூடி நடத்தும் தொழிற்சாலை அதோ! திறமையாக நடத்தப்படுகிறது என்ற புகழ்நிலை வரவேண்டும்; வளர வேண்டும். அன்று தான் தமிழர் சமுதாயம் உயர வழிபிறக்கும். - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

**3] மு.வரதராசனார்**

4] திரு.வி.க

**60] தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்த வல்லது. தமிழ் ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு. ஆட்சிமொழி என்றால் சட்டசபை முதல் நீதிமன்றம் வரையில் தமிழ் வழங்க வேண்டும். - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

**3] மு.வரதராசனார்**

4] திரு.வி.க

**61] கடிதம், பணவிடை, விளம்பரப்பலகை, விற்பனைச்சீட்டு முதலிய எல்லாம் தமிழிலேயே எழுதுக. இவற்றைத் தமிழில் எழுதினால் அஞ்சல் ஊழியர், வணிகர்கள், வாங்கும் மக்கள் முதலியவர்களைத் தமிழில் படிக்கச் செய்வது போல் ஆகும். இல்லையானால் அவர்கள் தமிழை மறக்கும்படி செய்வது போல் ஆகும். - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

**3] மு.வரதராசனார்**

4] திரு.வி.க

**62] நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் உடையவர் நடத்தும் உணவு விடுதி, மருந்துக்கடை, துணிக்கடை முதலியன சிறிது தொலைவில் இருந்தாலும், விலை சிறிது கூடுதலாக இருந்தாலும், வேறு குறையிருந்தாலும், அங்கேயே சென்று வாங்கு. அவசரத்தின்**

**காரணமாகவோ, வேறு காரணத்தாலோ, தவற நேர்ந்தால், தவறு என்று உணர்ந்து வருந்து. - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

3] தேவநேயபாவாணர்

**4] வரதராசனார்**

**63] உன் மொழியையும் நாட்டையும் போற்றுவதற்காக மற்றவர்களின் மொழியையும் நாட்டையும் தூற்றாதே; பழிக்காதே; வெறுக்காதே; அயலானின் தாயைப் பழித்து வெறுக்காதே. அயலானின் தாயைப் பழித்து வெறுக்காமலே நம் தாயிடம் அன்பு செலுத்த முடியும். அத்தகைய அன்புதான் நிலையானது ; நீடிப்பது. - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

3] தேவநேயபாவாணர்

**4] வரதராசனார்**

**64] தமிழர்களிடையே உள்ள பகை, பிரிவுகளை மேலும் வளர்க்கும் செயல்களைச் செய்யாதே; அத்தகைய சொற்களைச் சொல்லாதே; அவ்வாறான எண்ணங்களை எண்ணாதே. தமிழரிடையே ஒற்றுமை வளர்க்கும் சிந்தை, சொல், செயல்களையே போற்று. சுவையாக இருந்தாலும் முன்னவையை நாடாதே. சுவையற்றிருந்தாலும் பின்னவையைப் போற்று. - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

3] தேவநேயபாவாணர்

**4] வரதராசனார்**

**65] கொள்கைகளும் கட்சிகளும் இயக்கங்களும் நாட்டுமக்களின் நன்மைக்காகத் தோன்றியவை. ஆகவே கொள்கைகள், கட்சிகள், இயக்கங்களைவிட நாட்டு மக்களின் நன்மையே பெரிது என்று உணர். - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

3] தேவநேயபாவாணர்

**4] வரதராசனார்**

**66] தமிழ்நாடு உயரவேண்டும் என்றால் இங்குள்ள மலையும், காடும், நிலமும், நீரும் உயர்தல் அல்ல. இங்கு வாழும் யாவரும் ஒன்று என்று கருது. ஆகவே இந்நாட்டில் உள்ள வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பிச்சை எடுத்தல் முதலிய கொடுமைகள் ஒழியவேண்டும் என்று கருது. ஏழை என்றும் அடிமை என்றும் இல்லை என்றுபாரதியார் கண்ட கனவைப் போற்று. - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

3] தேவநேயபாவாணர்

**4] வரதராசனார்**

**67] ஊர்க்கெல்லாம் பொதுக் காவல் சிறந்த முறையில் ஏற்படும் வரையில் ஒவ்வொருவரும் தம் வீட்டைத் தாழிட்டுக் காத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? அதுபோல, உலகத்திற்குப் பொதுவான ஒரு சிறந்த ஆட்சி முறை ஏற்படும் வரையில், நம் நாட்டைநாம் தவறாமல் காத்துக் கொள்ளவேண்டும். - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

3] தேவநேயபாவாணர்

**4] வரதராசனார்**

**68] உன் மானத்தை விட நாட்டின் மானம் பெரியது என்று உணர். உன் உயர்வை விட, நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர், உன் நலத்தைவிட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும்போது உன் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு. - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

3] தேவநேயபாவாணர்

**4] வரதராசனார்**

**69] தலைமை உன்னைத் தேடிக்கொண்டு வந்தால் வரட்டும். நீ அதைத் தேடிக் கொண்டு போய் அலையாதே. நீ தேடவேண்டுவது தொண்டு. தலைமை தாங்குவதும் ஒருவகைத்**

**தொண்டுதான்......----- தொண்டுக்கு முந்து, தலைமைக்குப் பிந்து என்பது உன் நெறியாக இருக்கட்டும். - என்ற தம்பிக்கு என்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள வரிகள் யாருடையது?**

1] அண்ணா

2] பெரியார்

3] தேவநேயபாவாணர்

**4] வரதராசனார்**

**70] இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனால், கண்டபடி சொல்ல ஆள் ஏராளம். ஒவ்வொருவரும் ஆணை இடுவதற்கு விரும்புகிறார். 'அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை. அதனால் தான் வீழ்ச்சி நேர்ந்தது' - என்று கூறுபவர் யார்?**

1] அண்ணா

2] பெரியார்

**3] விவேகானந்தர்**

4] வரதராசனார்

**71] மாதவி ஆடல் கண்டு கோவலன் மகிழ்ந்தான். மாதவி, கோவலன் - இவை பெயர்ச்சொற்கள். கண்டு, மகிழ்ந்தான் - இவை வினைச்சொற்கள்; ஆடல் - என்பது -------------.**

1] காலப்பெயர்

2] இடப்பெயர்

**3] தொழிற்பெயர்**

4] சினைப்பெயர்

**விளக்கம் :-** அறுவகைப் பெயர்ச்சொற்களுள் தொழிற்பெயரும் ஒன்று. ஆடல் - என்பது ஆடுதல் என்னும் தொழிலைக் குறிப்பதனால், அது தொழிற்பெயர் எனப்பட்டது. ஆடு + அல் = ஆடல். அல் - என்பது தொழிற் பெயர் விகுதி.

இவ்வாறு தொழிற்பெயரைக் குறிக்க வரும் விகுதிகள்: **தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல்** என்பன. வினைப்பகுதியோடு மேற்குறித்த விகுதிகளைச் சேர்த்தால் தொழிற்பெயராகும்.

(எ.கா.) பெறுதல் = பெறு + தல் | கோடல் = கோடு + அல் | ஆட்டம் = ஆடு + அம் |

**72] தொழிற்பெயர்கள் எத்தனை வகைப்படும்?**

**1] 2** 2] 3 3] 4 4] 5

**விளக்கம் :-** தொழிற்பெயர் வகைகள்:- தொழிற்பெயர் இருவகைப்படும். **1. முதனிலைத் தொழிற்பெயர் 2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

**1. முதனிலைத் தொழிற்பெயர்:** தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல், பகுதி மட்டும் வந்து, தொழிலைஉணர்த்துவதற்கு முதனிலைத் தொழிற்பெயர் எனப் பெயர். (எ.கா.) கபிலனுக்கு அடி விழுந்தது. இத்தொடரில் அடி , என்பது விகுதி பெறாமல், பகுதியாய் நின்று தொழிலை உணர்த்துகிறது.

**2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்:** தொழிற்பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயராகும். (எ.கா.) அறிவறிந்த மக்கட் பேறு. அவனுக்கு என்ன கேடு. இங்குப் 'பெறு', கெடு என்னும் முதனிலைகள் 'பேறு', 'கேடு' எனத் திரிந்து 'பெறுதல்', 'கெடுதல்' என்னும் பொருளை உணர்த்துகின்றன.

**73] வினைமுற்று, வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறிப்பது ------------- எனப்படும்.**

1] வினைத்தொகை

2] வினையெச்சம்

**3] வினையாலணையும் பெயர்**

4] வியங்கோள் வினைமுற்று

**74] மாட்சி என்பது ---------------- ஆகும்.**

1] தொழிற்பெயர்

**2] பண்புப் பெயர்**

3] காலப்பெயர்

4] வினையாலணையும் பெயர்

**75] 'வந்தான்' என்னும் வினைமுற்று ----------------- என வினையாலணையும் பெயராய் வரும்.**

1] வருவான்

**2] வந்தவன்**

3] வருகிறவன்

4] வாரான்

**76] இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் ------------ எனப்படும்.**

1] இலக்கணப் போலி

**2] வழாநிலை**

3] வழு

4] வழுவமைதி

**விளக்கம் :-** வழாநிலை : பிழையின்மை, தவறின்மை. இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதவதும் வழாநிலை எனப்படும்.

**செல்வன் படித்தான்** - இத்தொடரில் செல்வன் என்னும் ஆண்பால் ஒருமைப்பெயர் படித்தான் என்னும் ஆண்பால் ஒருமை வினைமுற்றைக் கொண்டே முடிகிறது. எனவே, இது வழாநிலை எனப்படும்.

**வழாநிலை அறுவகைப்படும். அவை,**

1. **திணை வழாநிலை :** செல்வி பாடினாள், மாடு வந்தது.
2. **பால் வழாநிலை :** கண்ணன் வந்தான், நாய் ஓடியது.
3. **இட வழாநிலை :** நான் வந்தேன், நீ வருவாய்.
4. **கால வழாநிலை :** நாளை வருவேன், நேற்றுப் படித்தேன்.
5. **வினா வழாநிலை :** தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?
6. **விடை வழாநிலை :** தமிழ்நாட்டின் தலைநகரம் எது? என்னும் வினாவுக்குச் சென்னை என விடையளித்தல்.

**77] செல்வி பாடினாள், மாடு வந்தது - என்பது எந்த வழாநிலையைக் குறிக்கும்?**

**1] திணை வழாநிலை**

2] பால் வழாநிலை

3] இட வழாநிலை

4] கால வழாநிலை

**78] கண்ணன் வந்தான், நாய் ஓடியது - என்பது எந்த வழாநிலையைக் குறிக்கும்?**

1] திணை வழாநிலை

**2] பால் வழாநிலை**

3] இட வழாநிலை

4] கால வழாநிலை

**79] நான் வந்தேன், நீ வருவாய் - என்பது எந்த வழாநிலையைக் குறிக்கும்?**

1] திணை வழாநிலை

2] பால் வழாநிலை

**3] இட வழாநிலை**

4] கால வழாநிலை

**80] நாளை வருவேன், நேற்றுப் படித்தேன் - என்பது எந்த வழாநிலையைக் குறிக்கும்?**

1] திணை வழாநிலை

2] பால் வழாநிலை

3] இட வழாநிலை

**4] கால வழாநிலை**

**81] தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? - என்பது எந்த வழாநிலையைக் குறிக்கும்?**

**1] வினா வழாநிலை**



winmeen.com

2] விடை வழாநிலை

3] இட வழாநிலை

4] கால வழாநிலை

**82] தமிழ்நாட்டின் தலைநகரம் எது? என்னும் வினாவுக்குச் சென்னை என விடையளித்தல் - என்பது எந்த வழாநிலையைக் குறிக்கும்?**

1] வினா வழாநிலை

**2] விடை வழாநிலை**

3] இட வழாநிலை

4] கால வழாநிலை

**83] இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் --------------- எனப்படும்.**

1] இலக்கணப் போலி

2] வழாநிலை

**3] வழு**

4] வழுவமைதி

**விளக்கம் :-** வழு : பிழை, தவறு, குற்றம். இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும். வழு ஏழுவகைப்படும். அவை, திணை வழு, பால் வழு, இடவழு, காலவழு, வினா வழு, விடைவழு, மரபுவழு.

**84] என் மாமா வந்தது. மாமா என்னும் உயர்திணைப் பெயர், வந்தது என்னும் அஃறிணை வினைகொண்டு முடிந்தது. அதனால், இது --------------------**

**1] திணைவழு**

2] பால் வழு

3] இடவழு

4] காலவழு

**85] கண்ணகி வந்தான். கண்ணகி என்னும் பெண்பாற் பெயர், வந்தான் என்னும் ஆண்பால் வினைகொண்டு முடிந்துள்ளது. அதனால், இது -------------------.**

1] திணைவழு

**2] பால் வழு**

3] இடவழு

4] காலவழு

**86] நாங்கள் வந்தார்கள். நாங்கள் என்பது தன்மையிடத்துப் பன்மைப் பெயர். அப்பெயர், வந்தார்கள் என்னும் படர்க்கையிடத்துப் பலர்பாலொடு முடிந்துள்ளது. எனவே, இத்தொடர் ---------------.**

1] திணைவழு

2] பால் வழு

**3] இடவழு**

4] காலவழு

**87] கரிகாலன் நாளை வந்தான். இத்தொடரில் நாளை என்னும் எதிர்காலப் பெயரொடு வந்தான் என இறந்தகால வினை மயங்கி வந்துள்ளது. அதனால், இது --------------.**

1] திணைவழு

2] பால் வழு

3] இடவழு

**4] காலவழு**

**88] முட்டையிட்டது சேவலா பெட்டையா ? சேவல் எனப் பொருத்தமில்லாத வினாவைக் கேட்டதனால் வினாவழு.**

**1] வினாவழு**

2]விடை வழு

3] மரபுவழு

4] காலவழு

**89] நாளை பள்ளி திறக்கப்படுமா? என்னும் வினாவுக்கு, என் அத்தைக்கு உடல்நலமில்லை எனக் கூறுவது ---------------- வழு ஆகும்.**

1] வினாவழு

**2]விடை வழு**

3] மரபுவழு

4] காலவழு



winmeen.com

**90] நாய் கத்தும். இத்தொடர் ---------------- வழு. ஏனெனில், நாய் குரைக்கும் என்பதே முறையான ஒலிமரபு.**

1] வினாவழு

2]விடை வழு

**3] மரபுவழு**

4] காலவழு

**91] இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது ------------- ஆகும்.**

1] இலக்கணப் போலி

2] வழாநிலை

3] வழு

**4] வழுவமைதி**

**விளக்கம் :-** வழுவமைதி : பிழை – ஆனால், பிழையாகக் கொள்ளாமை. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளபடுவது வழுவமைதி ஆகும்.

உவகை(மகிழ்ச்சி), சிறப்பு, உயர்வு, உறுதி, சினம் காரணமாகத் திணைவழுவும் பால்வழுவும் காலவழுவும் வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**சான்று :-**

1 . சிற்றூர்களில் சிலர், தாங்கள் வளர்க்கும் விலங்குகளுக்குப் பெயரிட்டு அழைக்கும் பழக்கம் உண்டு. வருகின்ற பசுவைப் பார்த்து, 'என் இலட்சுமி வந்துவிட்டாள்' எனக் கூறுவதனைக்

கேட்டிருப்பீர்கள். இவ்வாறு கூறுவது, திணைவழுவாயினும் மகிழ்ச்சியின் காரணமாகத் திணைவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.

2. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார். – இத்தொடர், குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல் வேண்டும். அவ்வாறு அமையவில்லையென்றாலும் நாம் பிழையாகக் கருதுவதில்லை. ஏனெனில், அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கிக் காலவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.

**92] இருசொற்களைச் சேர்த்து எழுதும் போது இடையில் சில இடங்களில் எந்த வல்லின மெய் எழுத்துக்கள் ---------------- மிக்கு வரும்.**

1] ( க், ச், ட், ப் )

2] ( க், ச், ட், த் )

**3] ( க், ச், த், ப் )**

4] ( க், ச், த், ற் )

**93] பொருந்தாதது எது?**

1] அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும், எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க், ச், த், ப் மிகும்

2] அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி, என்னும் சுட்டு வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்

3] இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்

**4] ஐந்தாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**

**விளக்கம் :-** நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

**94] பொருந்தாதது எது?**

1] இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்

2] பண்புத்தொகையில் வல்லினம் மிகும். மற்றும் இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்

3] உவமைத்தொகை மற்றும் ஒரேழுத்து ஒரு மொழி, ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்

**4] மென்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்**

**குறிப்பு :-** வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

**95] பொருந்தாதது எது?**

1] ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில் தொடர்க் குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்

**2] குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்**

3] சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்

4] ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

**விளக்கம் :-** முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

**96] பொருந்தாதது எது?**

1] அது, இது, அவை, இவை என்னும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை என்னும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது

2] ஆ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துகள் மற்றும் எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது

3] அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் மற்றும் வினைத்தொகை, உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

**4] இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகும்**

**விளக்கம் :-** இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

**97] பொருந்தாதது எது?**

1] மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது

2] எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது

3] வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் மற்றும் இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர்களில் வல்லினம் மிகாது

**4] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகும்.**

**விளக்கம் :-** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

**98] எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைச் சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்கிறதோ அதுதான் உண்மையான கல்வி. சமுதாயத்திலுள்ள ஆண் பெண் அனைவருக்கும் உண்மைக் கல்வியை அளிப்பதே நமது கடமை. அந்தக் கல்வி மூலமாக அவர்கள் தங்களுக்கு நல்லது எது, கெட்டது எது என்பதனை தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். கெட்டதனை விட்டுவிடுவார்கள். - இது யாருடைய கூற்று?**

1] அண்ணா

2] வரதராசனார்

**3] விவேகானந்தர்**

4] மறைமலையடிகள்

**99] ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது, அந்த நாட்டு மக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல் ஆகியவற்றை பொருத்தே அமைகிறது. நாம் மீண்டும் உயர்வடைய வேண்டுமானால், பொதுமக்கள் எல்லாருக்கும் கல்வியைப் பரப்பியாக வேண்டும். பொதுமக்களுக்குக் கல்வியைத் தந்து அவர்களை உயர்த்திவிடுங்கள். இஃது ஒன்றே ஒன்று தான் நமது சிறப்பைப் பெறுவதற்குரிய ஒரு வழியாகும். - இது யாருடைய கூற்று?**

1] அண்ணா

2] வரதராசனார்

**3] விவேகானந்தர்**

4] மறைமலையடிகள்

**100] பொருந்தாதது எது?**

1] காமராசர் பிறந்த ஆண்டு - 1903

2] காமராசர் முதலமைச்சராக பதவியேற்ற ஆண்டு - 1954

3] காமராசர் சட்டமன்ற உறுப்பினரான ஆண்டு - 1937

**4] காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவரான ஆண்டு - 1967**

**விளக்கம் :-** காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவரான ஆண்டு - 1963

## ஒன்பதாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 5

**1] பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்ம்மின்,**



winmeen.com

**மல்லல் நெடுமதில் வாங்குவில் பூட்டுமின்**

**வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்**

**வில்லெழுதி வாழ்வார் விசும்பு - இப்பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] கலிங்கத்துப்பரணி

2] பழமொழி நானூறு

3] இனியவை நாற்பது

**4] முத்தொள்ளாயிரம்**

**விளக்கம் :-** மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் முத்தொள்ளாயிரம். ஆயினும், இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. மூவேந்தர்களின் ஆட்சிச்சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன. சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

**2] மூவேந்தர்களின் ஆட்சிச்சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை எந்நூல் விளக்குகின்றன?**

1] கலிங்கத்துப்பரணி

2] பழமொழி நானூறு

3] இனியவை நாற்பது

**4] முத்தொள்ளாயிரம்**

**3] முத்தொள்ளாயிரம் நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் நூல் வாயிலாக ----------- வெண்பாவும், பழைய உரை நூல்களில் மேற்கோள்களாக ----------- வெண்பாவும் கிடைத்துள்ளன.**

1] 100, 20

**2] 108, 22**

3] 116, 32

4] 120, 40

**4] சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் -------------?**

1] கணியன் பூங்குன்றனார்

2] விளம்பி நாகனார்

3] பூதஞ்சேந்தனார்

**4] பெயர் தெரியவில்லை**

**5] அரசர்களே, உங்களின் வளமிக்க நெடிய மதில்கள்மீது வில் சின்னத்தைப் பொறித்து வையுங்கள். ஏனெனில், வாடாத மாலையணிந்த வானவர்களும் ------------- என்பவரின் வில் வடிவத்தை எழுதி வைத்தே வானுலகில் வாழ்கின்றார்கள்.**

**1] சேரன்**

2] சோழன்

3] பாண்டியன்

4] பல்லவர்கள்

**6] ---------------- என்பவன் தன்னிடம் அடைக்கலமான புறாவினைக் காக்க, தன் தசையை அறுத்துக்கொடுத்தான். அத்தசை ஈடாகாத காரணத்தால், தானே துலாக்கோலில் ஏறினான். இப்படிச் செய்யத் துணிந்தமைக்கு அவனது கொடை வீரமோ மெய்யொழுக்கம் குறையாத படைவீரமோ காரணம் அன்று. அது ---------------- என்பவனின் நற்பண்பு.**

1] சேரன்

**2] சோழன்**

3] பாண்டியன்

4] பல்லவர்கள்

**7] நெருங்கி அமைந்த இலைபோன்ற வடிவிலான வேலை உடையவன் ------------------- மன்னன். அம்மன்னனின் யானை, தன் தந்தங்களை எழுத்தாணியாகவும் வீரம் செறிந்த வேற்படையையுடைய பகை மன்னரின் அகன்ற மார்புகளை ஓலைகளாகவும் கொண்டு செல்வம் நிலைத்த உலகமெல்லாம் எம் ------------- என்பவருக்கு உரியது என எழுதும்.**

1] சேரன்

2] சோழன்

**3] பாண்டியன்**

4] பல்லவர்கள்

**8] சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி**

**ஈர்த்திட் டுயர்துலைதான் ஏறினான் – நேர்ந்த**

**- என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] கலிங்கத்துப்பரணி

2] பழமொழி நானூறு

3] இனியவை நாற்பது

**4] முத்தொள்ளாயிரம்**

**9] கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்**

**படைவீர மோசென்னி பண்பு . - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] கலிங்கத்துப்பரணி

2] பழமொழி நானூறு

3] இனியவை நாற்பது

**4] முத்தொள்ளாயிரம்**

**10] மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்**

**உருத்தகு மார்போலை யாகத் திருத்தக்க**

**வையக மெல்லா மெமதென் றெழுதுமே**

**மொய்யிலைவேல் மாறன் களிறு . - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] கலிங்கத்துப்பரணி

2] பழமொழி நானூறு

3] இனியவை நாற்பது

**4] முத்தொள்ளாயிரம்**

**11] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] உய்ம்மின் – பிழைத்துக்கொள்ளுங்கள்

**2] மல்லல் – பெருமை**

3] வள் – நெருக்கம்

4] விசும்பு – வானம்

**விளக்கம் :-** மல்லல் என்பதன் பொருள் வளமை.

**12] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] மல்லல் நெடுமதில் – உரிச்சொற்றொடர்

**2] நெடுமதில் – வினையெச்சம்**

3] வாங்குவில், உயர்துலை – வினைத்தொகை

4] குறையா வன்கண் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**விளக்கம் :-** நெடுமதில் என்பதன் இலக்கணக்குறிப்பு பண்புத்தொகை.

**13] பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்ம்மின்,**

**மல்லல் நெடுமதில் வாங்குவில் பூட்டுமின்**

**வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்**

**வில்லெழுதி வாழ்வார் விசும்பு - இந்த பாடலில் பயின்று வந்துள்ள அணி எது?**

1] உருவக அணி

2] வேற்றுமை அணி

3] உவமை அணி

**4] தற்குறிப்பேற்ற அணி**

**14] மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்**

**உருத்தகு மார்போலை யாகத் திருத்தக்க**

**வையக மெல்லா மெமதென் றெழுதுமே**

**மொய்யிலைவேல் மாறன் களிறு - இந்த பாடலில் பயின்று வந்துள்ள அணி எது?**

**1] உருவக அணி**

2] வேற்றுமை அணி

3] உவமை அணி

4] தற்குறிப்பேற்ற அணி

**15] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மாறன் - பாண்டிய மன்னன்

**2] களிறு - பெண் யானை**

3] மருப்பு - தந்தம்

4] மறம் - வீரம்

**விளக்கம் :-** களிறு என்பதன் சொற்பொருள் ஆண் யானை.

**16] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] கனல் - காற்று**

2] துலை - துலாக்கோல் (தராசு)

3] நிறை - ஒழுக்கம்

4] மேனி - உடல்

**விளக்கம் :-** கனல் என்பதன் சொற்பொருள் நெருப்பு.

**17] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] இலைவேல் – உவமைத்தொகை

2] மருப்பூசி – உருவகங்கள்

3] மாறன்களிறு – ஆறாம் வேற்றுமைத்தொகை

**4] மார்போலை - வினைத்தொகை**

**விளக்கம் :-** மார்போலை என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு உருவகம்.

**18] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

1] மருப்பூசி = மருப்பு + ஊசி.

2] மார்போலை = மார்பு + ஓலை

3] எமதன்று = எமது + என்று

**4] தந்துய்ம்மின் = தந்து + உய் + மின்**

**விளக்கம் :-** தந்துய்ம்மின் என்பதன் சரியான பிரித்தறிதல் தந்து+உய்ம்மின்.

19] மார்போலையில் எழுதும் எழுத்தாணி எது?

1] ஈட்டி 2] புறா 3] தூரிகை **4] தந்தம்**

**20] தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்**

**சிந்தை கூரவாய்வெந்து லர்ந்துசெந்**

**நாயின் வாயினீர் தன்னை நீரெனா**

**நவ்வி நாவினால் நக்கி விக்குமே**

**- என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**3] கலிங்கத்துப்பரணி, சயங்கொண்டார்**

4] இவற்றில் ஏதுமில்லை

**21] காடிதனைக் கடத்தும்எனக் கருமுகிலும்**

**வெண்மதியும் கடக்க அப்பால்**

**ஓடிஇளைத்து உடல்வியர்த்த வியர்வன்றோ**

**உகுபுனலும் பனியும் அம்மா**

**- என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**3] கலிங்கத்துப்பரணி, சயங்கொண்டார்**

4] இவற்றில் ஏதுமில்லை

**22] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] முகில் – மேகம்

2] மதி – நிலவு

3] உகு – சொரிந்த (பொழிந்த)

**4] புனல் – காற்று**

**விளக்கம் :-** புனல் என்பதன் சரியான பொருள் நீர்.

**23] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக?**

1] கருமுகிலும் வெண்மதியும் – எண்ணும்மை

2] செந்நாய், கருமுகில், வெண்மதி – பண்புத்தொகைகள்

3] வெந்து, உலர்ந்து, எனா, கூர, கடக்க, ஓடி, இளைத்து – வினையெச்சங்கள்

**4] வியர்த்த வியர்வன்றோ – வினைத்தொகை**

**விளக்கம் :-** வியர்த்த வியர்வன்றோ என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு பெயரெச்சம்.

**24] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக?**

1] தீயின்வாய் – நெருப்பில்

**2] சிந்தை – காடு**

3] கூர – மிக

4] நவ்வி – மான்

**விளக்கம் :-** சிந்தை என்பதன் பொருள் எண்ணம்.

**25] இவர் யார் என கண்டறிக?**

**கலிங்கத்துப்பரணியை இயற்றியவர், இவர், திருவாரூர் மாவட்டத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரினர். முதல் குலோத்துங்கச் சோழனின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தவர். இசையாயிரம், உலாமடல் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.**

1] கம்பர்

2] புகழேந்திப் புலவர்

3] சேக்கிழார்

**4] சயங்கொண்டார்**

**26] சயங்கொண்டாரை, பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் பாராட்டியவர் யார்?**

1] சடையப்ப வள்ளல்

2] நாகுத்தனார்

**3] பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்**

4] இளங்கோவடிகள்

**27] கீழ்க்கண்ட கூற்று எந்த நூலைப் பற்றி கூறுகிறது?**

**ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்குப் ------------ என்பது பெயர். இது, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.**

1] அம்மானை

**2] பரணி**

3] கலம்பகம்

4] தூது

**28] பரணி இலக்கியங்களுள் தமிழில் தோன்றிய முதல் நூல் எது?**

1] சீனத்துப் பரணி

2] பாசவதைப் பரணி

3] தக்கயாகப் பரணி

**4] கலிங்கத்துப்பரணி**

**29] கலிங்க மன்னன் அனந்தபன்மன் மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர்தொடுத்து வெற்றிபெற்றான். அவ்வெற்றியைப் பாராட்டி எழுந்த இந்நூல், தோல்வியுற்ற கலிங்கநாட்டின் பெயரால், அமைந்து உள்ளது. இந்நூலில், -------------- தாழிசைகள் உள்ளன.**

1] 430

2] 109

**3] 509**

4] 530

**30] சயங்கொண்டாரின் சமகாலப் புலவரான ------------- என்பவர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்.**

1] புகழேந்திப் புலவர்

2] ஔவையார்

**3] ஒட்டக்கூத்தர்**

4] கம்பர்

**31] ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**

**மானவ னுக்கு வகுப்பது பரணி - என்று கூறும் நூல் எது?**

1] கலித்தொகை

**2] பன்னிருபாட்டியல்**

3] முதுமொழிக்காஞ்சி

4] பழமொழி நானூறு

**32] "எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப்பரணியே." - என்று கூறியவர் யார்?**

**1] அண்ணா**

2] திரு.வி.க

3] வரதராசனார்

4] பெரியார்

**33] கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தக்குடி எனத் தமிழினத்தின் தொன்மையை --------------- கூறும்**

1] திருக்குறள்

2] புறநானூறு

**3] புறப்பொருள் வெண்பாமாலை**

4] பன்னிரு பாட்டியல்

**34] ----------------- என்ற இடத்தில் தோன்றிய தமிழினம் உலகமெல்லாம் பரவித் தன்புகழை நிலைநாட்டி வருகிறது.**

1] டெரா ஆஸ்திராலிசு

2] கேர்கைலன்

3] மூ கண்டம்

**4] குமரிக் கண்டம்**

**35] தமிழர் புலம் பெயரக் காரணங்கள்**

**1] வாணிகம், வேலைவாய்ப்பு**

2] அயல்நாட்டு படையெடுப்பு

3] பஞ்சம்

4] அயல்நாட்டு மோகம்

**36] திரை கடலோடியும் திரவியம் தேடு - இந்த பாடல் வரி யாருடையது?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] ஔவையார்**

4] நாமக்கல் கவிஞர்

**37] சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு -------------- நூலில் உள்ளது.**

1] சிலப்பதிகாரம்

**2] மணிமேகலை**

3] வளையாபதி

4] குண்டலகேசி

**38] பரப்பளவில் சிறியதான ------------- தீவில் வாழ்பவர்களுள் பெரும்பான்மை மக்கள் தமிழரே.**

1] சிங்கப்பூர்

2] மலேசியா

**3] ரியூனியன்**

4] பிரான்ஸ்

**விளக்கம் :-** சிங்கப்பூர், மலேசியா, பினாங்குத் தீவு ஆகிய நாடுகளில் கோவில்கள் கட்டி ஆண்டுதோறும் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். பரப்பளவில் சிறியதான ரியூனியன் தீவில் வாழ்பவர்களுள் பெரும்பான்மை மக்கள் தமிழரே. அவர்கள் பிரெஞ்சுக்காரர்களால் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலிருந்து ஒப்பந்தக் கூலிகளாக அங்குக் குடியமர்த்தப்பட்டார்கள். பிரான்சு நாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படும் அத்தீவில் வாழும் தமிழர்கள் பிரெஞ்சு மொழியே பேசுகிறார்கள். அவர்கள், தமிழைப் பேசாத போதும் தமிழர் தம் பண்பாட்டுக் கூறுகளை மறவாது இன்றளவும் பின்பற்றி வருகிறார்கள்.

**39] ------------- நாட்டில் வாழும் தமிழருள் தொண்ணுற்றைந்து விழுக்காட்டினர் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழிலேயே கல்வி பயில்கின்றனர்.**

**1] இலங்கை**

2] சிங்கப்பூர்

3] மொரிசியசு

4] மலேசியா

**குறிப்பு :-** சிங்கப்பூர், மொரிசியசு, மலேசியா, பிஜித்தீவுகள், தென் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகியநாடுகளில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.

**40] இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் ஆட்சி மொழியாக ------------ என்ற இந்திய மொழி திகழ்கிறது.**

1] இந்தி

2] உருது

3] மலையாளம்

**4] தமிழ்**



winmeen.com

**குறிப்பு :-** இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் தமிழைப் பாடமொழியாகப் பயிலவும், தமிழியல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**41] தமிழர் ---------------, -------------, ----------- முதலிய நாடுகள் பலவற்றில் உள்ளாட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்புகளையும் வகித்து வருகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் எனப் பல பதவிகளிலும் சிறப்புறத் தொண்டாற்றி வருகின்றனர்.**

1] ஆஸ்திரேலியா, ஜப்பான், ஓமன்

2] பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம்

**3] இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்**

4] சீனா, வியட்னாம், அமெரிக்கா

**42] இந்தியாவில் மட்டுமல்லாமல், ------------, ---------------- ஆகிய நாடுகளில் குடியரசுத் தலைவர்களாகவும் தமிழர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கிறது.**

1] ஓமன், துபாய்

2] அமெரிக்கா, பிரிட்டன்

**3] சிங்கப்பூர், மொரிசியசு**

4] தாய்லாந்து, சீனா

**43] யாதும் ஊரே யாவரும் கேளீர் - என்பது யாருடைய பாடல் வரி?**

**1] கணியன் பூங்குன்றனார்**

2] கம்பர்

3] ஔவையார்

4] பாரதியார்

**44] தங்குதடையற்ற மேடைப் பேச்சாலும் இயல்பான மொழி நடையாலும் தமிழைப் பட்டி தொட்டிகள் எல்லாம் பரப்பித் தமிழ்த்தென்றல் எனப் போற்றப்பட்ட பெருந்தகையர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**3] திரு.வி.கலியாணசுந்தரனார்**

**45] கீழ்க்கண்ட கூற்று யாரைப் பற்றியது எனக் கூறவும்?**

**அ] சென்னைக்கு அருகேயுள்ள துள்ளம் என்னும் ஊரில் விருத்தாசலனார் - சின்னம்மையாரின் மகனாக 26.08.1883 ஆம் நாள் பிறந்தார். சென்னை இராயப்பேட்டையிலுள்ள வெஸ்லி பள்ளியில் படித்தார்.**

**ஆ] கதிரைவேலர் என்பாரிடம் தமிழ் பயின்று தமிழ்ப் பேராசிரியராக உயர்ந்தார். இலக்கியங்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் கற்பதில் பேரார்வங் கொண்டார்.**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**3] திரு.வி.கலியாணசுந்தரனார்**

**46] தமிழ்ப்பற்று எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதனை முழு மூச்சாகக் கொண்டு, வடமொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டும் என வலியுறுத்தியவர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**3] திரு.வி.கலியாணசுந்தரனார்**

**47] நமது உடல் நலத்தைப் பேண வேண்டும் என்று குறிப்பிட்டால், பிறர் உடல் நலத்தைக் கேடு சூழவேண்டும் என்று பொருள் கொள்ளக்கூடாது. அதுபோலவே, தமிழை வளர்க்க வேண்டும் என்றால், பிறமொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளன்று - என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**3] திரு.வி.கலியாணசுந்தரனார்**

**48] காந்தியடிகள் தமிழகம் வந்த போதெல்லாம் அவரது மேடைப் பேச்சினை மொழி பெயர்த்தவர் இவரே.**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**3] திரு.வி.கலியாணசுந்தரனார்**

**49] இளைஞர்களுக்குத் தமிழுணர்வூட்டும் நோக்கில், "இளைஞர்களே! உங்கள் தமிழ்த்தாய் நேற்றுப் பிறந்தவள் அல்லள்; இன்று பிறந்தவள் அல்லள்; அவள் மிகத் தொன்மையுடையவள்; கலைகளையுடையவள். அவளையா கொல்வது? தாய்க்கொலை புரிவதா தமிழர் வீரம்? - என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**3] திரு.வி.கலியாணசுந்தரனார்**

**50] நேற்றும் இன்றும் பிறந்த நாடுகளையும் கலைகளையும் ஒம்பவும் பெருக்கவும் அவ்வந்நாட்டார் முயன்று வருகின்றனர். நாமோ, பழம் பெருநாட்டை மறைக்கப் பார்க்கின்றோம். தமிழ் இறந்தபின் தமிழ் மண் மட்டுமிருந்தென்ன? மொழி இறந்துபடின் நாடும் இறந்து படுமன்றோ? உலகிற்கே ஒருபோது நாகரிகத்தை வழங்கிய மாண்பு வாய்ந்த ஒரு பெரும் நாட்டையா மறப்பது? அதனையா மறைப்பது? - என்று கூறுபவர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**3] திரு.வி.கலியாணசுந்தரனார்**

**51] "இளைஞர்களே! தமிழுலகின் இழிந்த நிலையை ஒருங்கள்; ஓர்ந்து (எண்ணி) உங்கள் பொறுப்பை உணருங்கள்; தமிழ்த்தாயைப் புதுப்போர்வையில் ஒப்பனை செய்து அரியாசனத்தமர்த்த சூள் கொண்டெழுங்கள், எழுங்கள், பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள்"என்று அறைகூவல் விடுப்பவர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**3] திரு.வி.கலியாணசுந்தரனார்**

**52] எழுத்து மட்டுமல்லாமல், தமது பேச்சாலும் தமிழ் வளர்த்த பெருமகனார் இவர். ------------- நடை என்றே ஒரு தனிநடையை நடைமுறைப்படுத்தும் அளவிற்கு பேசுவது போலவே எழுதுவது; எழுதுவது போலவே பேசுவது என்னும் முயற்சியில் இவர் வெற்றி கண்டவர்.**

**1] திரு.வி.க**

2] அண்ணா

3] நாமக்கல் கவிஞர்

4] மபொ சிவஞானம்

**53] கீழ்க்கண்ட கூற்று யாரைப் பற்றியது?**

**வெல்லுஞ்சொல் இன்மையறிந்து உணர்ச்சிச் சொற்களைக் கோத்துக் "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் விரும்பும் வண்ணம்" பேசுவதில் வல்லவர். அறிஞர் அண்ணா உள்ளிட்ட அக்கால இளைஞர்களை உணர்ச்சிமிகு பேச்சினால் தம்பால் ஈர்த்து மேடைத் தமிழின் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.**

**1] திரு.வி.க.**

2] பெரியார்

3] மபொ சிவஞானம்

4] பாரதியார்

**54] உரைநடை எழுதுவது எனது தொழில் என்னும் அளவிற்கு உரைநடைக்கு அவர் மதிப்புக் கொடுத்தார். அவருக்கு வாய்த்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்பார் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். - இது யாரைப்பற்றிய கூற்று?**

**1] திரு.வி.க.**

2] பெரியார்

3] மபொ சிவஞானம்

4] பாரதியார்

**55] இக்காலத் தமிழ் மொழி நடையாளராக மதிப்பிட்டுக் காணுமளவிற்குச் சீரிய மொழி நடையில் அவரின் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம், இமயமலை அல்லது தியானம் முதலிய நூல்கள் அவரது கற்பனைத்திறனையும், சீர்திருத்த ஈடுபாட்டையும் உயர்ந்த நடையையும் வெளிக்காட்டுகின்றன. - இது யாரைப்பற்றிய கூற்று?**

**1] திரு.வி.க.**

2] பெரியார்

3] மபொ சிவஞானம்

4] பாரதியார்

**56] முருகன் அல்லது அழகு, சைவத்திறவு, சைவத்தின் சமரசம், கடவுட் காட்சியும் தாயுமானவரும், இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், நாயன்மார் வரலாறு, தமிழ்நூல்களில் பௌத்தம், காதலா? முடியா? சீர்திருத்தமா?, என் கடன்பணி செய்து கிடப்பதே, இந்தியாவும் விடுதலையும், தமிழ்ச்சோலை, உள்ளொளி என்பன இவர் இயற்றிய இன்னபிற உரைநடை நூல்கள். - இவை யாருடைய உரைநடை நூல்கள்?**

**1] திரு.வி.க.**

2] வரதராசனார்

3] மீனாட்சி சுந்தரனார்

4] பாரதியார்

**57] முருகன் அருள்வேட்டல், திருமால் அருள்வேட்டல், கிறித்துவின் அருள்வேட்டல், அருகன் அருகே, உரிமை வேட்டல், பொதுமை வேட்டல், பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும் இவை யாருடைய செய்யுள் நூல்கள்?**

**1] திரு.வி.க.**

2] வரதராசனார்

3] மீனாட்சி சுந்தரனார்

4] உ.வே.சா

**58] தேசபக்தன், நவசக்தி எனும் இதழ்களின் வாயிலாகத் தொழிலாளர் முன்னேற்றம் பெறப்பாடுபட்டவர். அதற்காகத் தமது ஆசிரியர் பணியையும் துறந்தார். தமது வீறுகொண்ட தமிழ் முழக்கத்தால், சிதறிக்கிடந்த தொழிலாளர்களை ஒன்றிணைத்துத் தொழிலாளர் இயக்கம் கண்டார். - இந்த கூற்று கீழ்க்கண்ட யாருடன் தொடர்புடையது?**

**1] திரு.வி.க.**

2] வரதராசனார்

3] மீனாட்சி சுந்தரனார்

4] உ.வே.சா

**59] --------------- என்பவர் தம் சிந்தனை, சொல், செயல் நிலையால் சுத்த சன்மார்க்கியாக, சமயப் பொதுமையாளராக விளங்கி அருந்தொண்டாற்றினார். எழுபது வயதாகி உடல் தளர்ந்து படுக்கையில் இருந்த போதும் வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் என்னும் நூலை மு.வரதராசனாரின் உதவியுடன் வெளியிட்டார். அவர், வாழ்நாளின் இறுதி வரை தமிழைத் தன் மூச்சாகக் கொண்டு தமிழ்ப்பணி ஆற்றினார்.**

**1] திரு.வி.க.**

2] வி.எஸ்.செங்கல்வராய பிள்ளை

3] மீனாட்சி சுந்தரனார்

4] உ.வே.சா

**60] மணமுடித்த ஆறே ஆண்டுகளில் அவர்தம் மனைவி கமலாம்பிகை அம்மையாரை இழந்தார். தனிமையில் வாழ்ந்துவந்த அவரிடம் நண்பர் ஒருவர், மனைவியை இழந்து தனிமையில் வாழ்வது கடினமாக இல்லையா? எனக் கேட்டார். அதற்கு, நான் தனியாகவாழவில்லை; தமிழோடு வாழ்கிறேன் எனக் கூறினார். - இது யாரைப் பற்றிய கூற்று?**

**1] திரு.வி.க**

2] வி.எஸ்.செங்கல்வராய பிள்ளை

3] மீனாட்சி சுந்தரனார்

4] உ.வே.சா

**61] திரு.வி.க., ------------ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினேழாம் நாள் தமது எழுபத்தோராம் வயதில் தமிழ் மூச்சுக்கு விடைதந்தார்.**

1] 1947

2] 1950

**3] 1953**

4] 1956

**62] தயிரை இறக்கு. இத்தொடர் ---------------- ஆகும்.**

**1] தானியாகு பெயர்**

2] சொல்லாகு பெயர்

3] இடவாகு பெயர்

4] பொருளாகுபெயர்

**63] பெரியோர் சொல் கேள். இத்தொடர் -------------- ஆகும்.**

1] தானியாகு பெயர்

**2] சொல்லாகு பெயர்**

3] இடவாகு பெயர்

4] பொருளாகுபெயர்

**64] கழல் பணிந்தான் என்பது ----------------- ஆகுபெயர்.**

1] தானியாகு பெயர்

**2] சொல்லாகு பெயர்**

3] இடவாகு பெயர்

4] பொருளாகுபெயர்

**65] நூற்கு உரை செய்தான் என்பது ------------ ஆகுபெயர்.**

**1] தானியாகு பெயர்**

2] சொல்லாகு பெயர்

3] இடவாகு பெயர்

4] பொருளாகுபெயர்

**66] ------------------ என்பது, ஒரு பொருளை அல்லது நிகழ்வை மற்றொரு பொருளோடு அல்லது நிகழ்வோடு ஒப்புமைப்படுத்துவது.**

1] உவமேயம்

2] எண்ணும்மை

**3] உவமை**

4] உருவகம்

**விளக்கம் :-** உவமை, உவமிக்கும் பொருளைவிட உயர்ந்தது. உவமைத் தொடரில் உவமை முன்னும், பொருள் பின்னுமாக வரும். (எ-டு) மதி போன்ற முகம் - மதி - உவமை; முகம் - (உவமேயம்) பொருள்.

**67] கவிஞர், தாம் கருதிய பொருளையும் ஒப்புமைப் பொருளையும் (உவமையையும்) வெவ்வேறு எனக் கூறாமல், இரண்டும் ஒன்றெனக் கூறுவது --------- ஆகும்.**

1] உவமேயம்

2] எண்ணும்மை

3] உவமை

**4] உருவகம்**

**விளக்கம் :-** உருவகத்தொடரில் பொருள் முன்னும், உவமை பின்னுமாக வரும். (எ-டு) முகமதி: முகம் - பொருள்; மதி - உவமை. இங்கு இரண்டும் ஒன்றெனக் கூறப்பெற்றது.

**68] வந்தான் - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

**1] வினைமுற்று**

2] பெயரெச்சம்

3] வினையெச்சம்

4] தொழிற்பெயர்

**69] வந்த - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினைமுற்று



winmeen.com

**2] பெயரெச்சம்**

3] வினையெச்சம்

4] தொழிற்பெயர்

**70] வந்து - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினைமுற்று

2] பெயரெச்சம்

**3] வினையெச்சம்**

4] தொழிற்பெயர்

**71] வருதல் - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினைமுற்று

2] பெயரெச்சம்

3] வினையெச்சம்

**4] தொழிற்பெயர்**

**72] படித்தான் - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

**1] வினைமுற்று**

2] பெயரெச்சம்

3] வினையெச்சம்

4] தொழிற்பெயர்

**73] படித்த - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினைமுற்று

**2] பெயரெச்சம்**

3] வினையெச்சம்

4] தொழிற்பெயர்

**74] படித்து - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினைமுற்று

2] பெயரெச்சம்

**3] வினையெச்சம்**

4] தொழிற்பெயர்

**75] படித்தல் - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினைமுற்று

2] பெயரெச்சம்

3] வினையெச்சம்

**4] தொழிற்பெயர்**

winmeen.com

**76] பன்னிரண்டு என்பதன் தமிழெண்**

**1] கஉ** 2] எ 3] கக 4] உஅ

**77] ஏழு என்பதன் தமிழெண்**

1] உ **2] எ** 3] க 4] அ

**78] பதினொன்று என்பதன் தமிழெண்**

1] கஉ 2] எ **3] கக** 4] உஅ

**79] இருபத்தெட்டு என்பதன் தமிழெண்**

1] கஉ 2] உ௦ 3] கக **4] உஅ**

**80] இருபது என்பதன் தமிழெண்**

1] கஉ **2] உ௦** 3] கக 4] உஅ

**81] 'பாடு' எனக் கூறியவுடன் பாடுபவர் ?**

**1] ஆசுகவி**

2] மதுரகவி

3] சித்திரகவி

4] வித்தாரக்கவி

**82] செவிக்கினிய ஓசைநலம் சிறக்கப் பாடுபவர் யார்?**

1] ஆசுகவி

**2] மதுரகவி**

3] சித்திரகவி

4] வித்தாரக்கவி

**83] சொல்லணி அமைத்துச் சுவைவளம் செழிக்கப் பாடுபவர்?**

1] ஆசுகவி

2] மதுரகவி

**3] சித்திரகவி**

4] வித்தாரக்கவி

**84] தொடர்நிலைச் செய்யுளும், தூய காப்பியங்களும் இயற்றுபவர் ?**

1] ஆசுகவி

2] மதுரகவி

3] சித்திரகவி

**4] வித்தாரக்கவி**

**85] ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரக்கவி - ஆகிய பொருளுடைய நால் வகைக் கவிகளையும் பாடவல்ல பாவலனைப் ------------ எனத் தமிழறிஞர் போற்றுவர்.**

1] கவிக்குயில்

2] கவியரசு

**3] பாவலரேறு**

4] கவித்தென்றல்

**86] பொருந்தாதது எது? தமிழ்ச்சொற்கள் தருக.**

**1] அங்கத்தினர் - உறவினர்**

2] அர்த்தம் - பொருள்

3] அலங்காரம் - ஒப்பனை

4] ஆரம்பம் - துவக்கம்

**குறிப்பு :-** அங்கத்தினர் என்பதன் தமிழ்ச்சொல் உறுப்பினர்.

**87] பொருந்தாதது எது? தமிழ்ச்சொற்கள் தருக.**

**1] விஞ்ஞானம் - மெய்ஞானம்**

2] தீபம் - விளக்கு

3] கும்பாபிஷேகம் - குடமுழுக்கு

4] சாவி - திறவுகோல்

**குறிப்பு :-** விஞ்ஞானம் என்பதன் தமிழ்ச்சொல் அறிவியல்.

**88] பொருந்தாதது எது? தமிழ்ச்சொற்கள் தருக.**

1] சரித்திரம் - வரலாறு

2] சபதம் - சூளுரை

3] சாதம் - சோறு

**4] பௌத்திரி - மகள்**

**குறிப்பு :-** பௌத்திரி என்பதன் தமிழ்ச்சொல் பெயர்த்தி.

**89] நடந்தான் - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

**1] வினைமுற்று**

2] பெயரெச்சம்

3] வினையெச்சம்

4] தொழிற்பெயர்

**90] நடந்து - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினைமுற்று

2] பெயரெச்சம்

**3] வினையெச்சம்**

4] தொழிற்பெயர்

winmeen.com

**91] நடந்த - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினைமுற்று

**2] பெயரெச்சம்**

3] வினையெச்சம்

4] தொழிற்பெயர்

**92] நடத்தல் - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?**

1] வினைமுற்று

2] பெயரெச்சம்

3] வினையெச்சம்

**4] தொழிற்பெயர்**

**93] பொருந்தாதது எது? உவமை - உருவகம்**

1] தாமரைமுகம் - முகத்தாமரை

2] தேன்மொழி - மொழித்தேன்

3] பவளவாய் - வாய்ப்பவளம்

**4] முத்துப்பல் - பல்லில்முத்து**

**குறிப்பு :-** முத்துப்பல் என்ற உவமையின் சரியான உருவகம் பல்முத்து.

**94] சிற்றிலக்கியங்கள் --------- வகைப்படும்.**



winmeen.com

1] 18 2] 108 3] 86 **4] 96**

**95] உலர்ந்து - உலர் + த் (ந்) + த் + உ.**

**உலர் - பகுதி; த் - சந்தி; த் - ந் ஆனது விகாரம்; த் - இறந்தகால இடைநிலை; உ - என்பது என்ன?**

1] பெயரெச்ச விகுதி

2] ஆண்பால் வினைமுற்று விகுதி

**3] வினையெச்ச விகுதி**

4] இவற்றில் ஏதுமில்லை

**96] நவ்வி - இச்சொல்லின் பொருள் யாது?**

**1] மான்** 2] நாய் 3] குரங்கு 4] நரி

**97] ஆகுபெயர் --------------- வகைப்படும்.**

1] 12 2] 14 **3] 16** 4] 18

**98] செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருந்துவது ------------ பொருள்கோளாகும்.**

1] தாப்பிசைப் பொருள்கோள்

2] கொண்டுகூட்டுப் பொருள்கோள்

**3] விற்பூட்டுப் பொருள்கோள்**

4] மொழிமாற்றுப் பொருள்கோள்

**99] ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது ------------- பொருள்கோள்.**

**1] தாப்பிசைப் பொருள்கோள்**

2] கொண்டுகூட்டுப் பொருள்கோள்

3] விற்பூட்டுப் பொருள்கோள்

4] மொழிமாற்றுப் பொருள்கோள்

**100] தாம்பு + இசை = தாப்பிசை ; - இங்கு தாம்பு என்பதன் பொருள் யாது?**

1] தாமணிக் கயிறு

**2] ஊஞ்சல் கயிறு**

3] அன்பு

4] இவற்றில் ஏதுமில்லை

## ஒன்பதாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 6

**1] யாரும் சிறியர் யான்பெரியன், எதிலும் சிறந்தது என்னலமாம்; பாரில் எனக்கீ டில்லை எனப் பயனில் மொழிகள் பகர்வதும் ஏன்? - இப்பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] பாரதியார் பாடல்கள்,  பாரதியார்

2] குறிஞ்சித்திட்டு, பாரதிதாசன்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

**4] உமர்கய்யாம் பாடல்கள், கவிமணி தேசிக விநாயகனார்**

**2] சேரும் உலகப் பொருளையெல்லாம் தெரிய நோக்கித் தனைநோக்காச் சீரில் அமைந்த கண்மணியின் செயலை நோக்கித் தெளிவீரே! - இப்பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] பாரதியார் பாடல்கள், பாரதியார்

2] குறிஞ்சித்திட்டு, பாரதிதாசன்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

**4] உமர்கய்யாம் பாடல்கள், கவிமணி தேசிக விநாயகனார்**

**3] பொருந்தாதது எது ? சொற்பொருள் தருக?**

1] பகர்வது - சொல்வது

2] தெளிவிரே - தெளியுங்கள்

**3] துவ்வா - நோக்கிய**

4] அகன்று - விலகி

**குறிப்பு :-** துவ்வா என்பதன் சொற்பொருள் நுகராத.

**4] பொருந்தாதது எது ? இலக்கணக்குறிப்பு தருக?**

1] நோக்கி - வினையெச்சம்

2] துவ்வா விடம் - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

3] வாழ்க - வியங்கோள் வினைமுற்று

**4] செய்தல் - பண்புப்பெயர்**

**குறிப்பு :-** செய்தல் என்பதன் இலக்கணக்குறிப்பு தொழிற்பெயர்.

**5] அன்பு செய்யின் அயலாரும் அண்டி நெருங்கும் உறவினராம்; அன்பு நீங்கின் உறவினரும் அகன்று நிற்கும் அயலவராம்; - இப்பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] பாரதியார் பாடல்கள், பாரதியார்

2] குறிஞ்சித்திட்டு, பாரதிதாசன்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

**4] உமர்கய்யாம் பாடல்கள், கவிமணி தேசிக விநாயகனார்**

**6] துன்ப நோயை நீக்கிடுமேல் துவ்வா விடமும் அமுதாகும், துன்ப நோயை ஆக்கிடுமேல் தூய அமுதம் விடமாமே - இப்பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] பாரதியார் பாடல்கள், பாரதியார்

2] குறிஞ்சித்திட்டு, பாரதிதாசன்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

**4] உமர்கய்யாம் பாடல்கள், கவிமணி தேசிக விநாயகனார்**

**7] ஆழி சூழும் உலகாளும் அரச னாக வேண்டுமெனில் வாழும் வாழ்வில் உன்னையும் நீ மறந்து வாழ வேண்டுமடா! - இப்பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] பாரதியார் பாடல்கள், பாரதியார்

2] குறிஞ்சித்திட்டு, பாரதிதாசன்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

**4] உமர்கய்யாம் பாடல்கள், கவிமணி தேசிக விநாயகனார்**

**8] ஏழை யாகி எளியவரின் எளிய னாக வேண்டுமடா! தோழ னாகி யாவர்க்கும் தொண்ட னாக வேண்டுமடா! - இப்பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] பாரதியார் பாடல்கள், பாரதியார்

2] குறிஞ்சித்திட்டு, பாரதிதாசன்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

**4] உமர்கய்யாம் பாடல்கள், கவிமணி தேசிக விநாயகனார்**

**9] கீழ்க்கண்ட கூற்றைப் படித்து இவர் யார் என கூறுக?**

**இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் பிறந்தவர். இவரின் பெற்றோர் சிவதாணு - ஆதிலட்சுமி அம்மையார். இவர் உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார்.**

1] பாரதியார்

**2] கவிமணி தேசிக விநாயகனார்**

3] நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்

4] பாரதிதாசன்

**10] உமர்கய்யாம் ------------ ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர். இவரது முழுப் பெயர் -------------------- என்பது. இவரின் கவிதைகள் மக்கள் அடையும் இன்ப துன்பங்களையும், இறைவனது படைப்பையும் பாடுபொருளாகக் கொண்டவை.**

1] 9, முகமது பைரோஸ்

2] 10, குணங்குடி மஸ்தான்

**3] 11, கியாதுதீன் அபுல்பாத் உமர்கய்யாம்**

4] 12, காபித்தூள் காதிறு

**11] உமர்கய்யாம் --------------, -------------- துறைகளில் புலமைமிக்கவராய் திகழ்ந்தார்.**

1] அறிவியல், வானவியல்

**2] கணிதம், வானவியல்**

3] வானவியல், சோதிடவியல்

4] கணிதம், புவியியல்

**12] கீழ்க்கண்ட கூற்றைப் படித்து இவர் யார் என கூறுக?**

**மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், குழந்தைச்செல்வம், ஆசிய ஜோதி முதலிய நூல்களின் ஆசிரியர் இவர். இவரது காலம் 1876 முதல் 1954 ஆம் ஆண்டுவரை.**

1] பாரதியார்

**2] கவிமணி தேசிக விநாயகனார்**

3] நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்

4] பாரதிதாசன்

**13] உமர்கய்யாம் பாடல்கள் இம்மை மறுமை பற்றி --------------------- என்னும் பெயரில் உமர்கய்யாம் எழுதிய செய்யுள்களின் மொழிபெயர்ப்பு. இதனையே கவிமணி மொழிபெயர்த்துள்ளார். இதில், நூற்றுப் பதினைந்து பாடல்கள் உள்ளன.**

1] தவவாழ்வு

2] சொற்புதினம்

**3] ரூபாயத்**

4] கலியுகம்

**14] ரூபாயத் - என்பதன் பொருள் என்ன?**

1] இரண்டடிச் செய்யுள்

2] மூன்றடிச் செய்யுள்

**3] நான்கடிச் செய்யுள்**

4] ஐந்தடிச் செய்யுள்

**15] மணிமேகலையை இயற்றியவர் யார்?**

**1] சீத்தலைச் சாத்தனார்**

2] நாகுத்தனார்

3] இளங்கோவடிகள்

4] சயங்கொண்டர்

**16] கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகள் பெயர் என்ன?**

1] பல்லவி

2] அரசமாதேவி

**3] மணிமேகலை**

4] இவற்றில் ஏதுமில்லை

**17] முற்பிறப்பின் வினைப்பயன் காரணமாக அரசகுமாரனாகிய -------------- என்பவன், மணிமேகலையை மணம்புரிய விரும்பினான்.**

1] தனஞ்செயன்

**2] உதயகுமரன்**

3] விஜயேந்திரன்

4] இவற்றில் ஏதுமில்லை

**18] மணிமேகலையை, மணிபல்லவத் தீவிற்கு வான்வழியே தூக்கிச் சென்றது யார்?**

1] மலைக்கோவில் தெய்வம்

**2] மணிமேகலா தெய்வம்**

3] பளிக்கரை தெய்வம்

4] இவற்றில் ஏதுமில்லை

**19] மணிமேகலை பசியற்றிருக்கவும் விரும்பும் உருவம் எடுக்கவும் வான்வழிச் செல்லவும் தேவையான மூன்று மந்திரங்களைத் தெரிவித்து மறைந்தது யார்?**

1] மலைக்கோவில் தெய்வம்

**2] மணிமேகலா தெய்வம்**

3] பளிக்கரை தெய்வம்

4] இவற்றில் ஏதுமில்லை

**20] ---------------- என்பவரின் உதவியால், மணிமேகலை அமுதசுரபியைப் பெற்றுப் புகார் நகரை அடைகிறாள்.**

1] மாதவி

2] கண்ணகி

**3] தீவதிலகை**

4] இவர்களில் யாருமில்லை

**21] மணிமேகலை, -------------- என்பவரின் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன் முதலில் பிச்சையேற்றாள். அதன்மூலம் அமுதசுரபியில் அள்ள அள்ளக் குறையாத அன்னம் பெருகியது. அதனைக்கொண்டு பசிப்பிணிநீக்கும் அறப்பணியை மேற்கொள்கிறாள்.**

1] தீவதிலகை

2] மணிமேகலை தெய்வம்

**3] அறவணவடிகள்**

4] இவர்களில் யாருமில்லை

**22] அமுதசுரபி, முற்பிறப்பில் ------------ என்பவரிடம் இருந்தது என்பதை அறிந்த மணிமேகலை அவனைக் காணும் பொருட்டு ஆபுத்திரன் நாட்டிற்குச் செல்கிறாள்.**

1] தீவதிலகை

2] அறவண அடிகள்

**3] ஆபுத்திரன்**

4] இவர்களில் யாருமில்லை

**23] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] ஆயம் – தோழியர் கூட்டம்

2] ஆசனம் – இருக்கை

3] நாத்தொலைவில்லை – சொல் சோர்வின்மை

**4] யாக்கை – இருப்பிடம்**

**குறிப்பு :-** யாக்கை என்பதன் சரியான பொருள் உடம்பு.

**24] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] பேதைமை – அறியாமை

2] செய்கை – இருவினை

3] அரு – உருவமற்றது

**4] உரு – உருகுதல்**

**குறிப்பு :-** உரு என்பதன் சரியான பொருள் வடிவம்.

**25] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வாயில் – ஐம்பொறிகள்

2] ஊறு – புலன்களின் இயல்பு

3] நுகர்வு – இன்பதுன்ப நுகர்ச்சி

**4] வேட்கை – வெறுத்தல்**

**குறிப்பு :-** வேட்கை என்பதன் சரியான பொருள் விருப்பம்.

**26] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] பெரும்பேறு – வீடுபேறு

**2] கோடு – மலை**

3] அலகில – அளவற்ற

4] குறளை – புறம்பேசுதல்

**குறிப்பு :-** கோடு என்பதன் சரியான பொருள் கொம்பு.

**27] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] வெஃகல் – கோபம்**

2] வெகுளல் – கடுஞ்சினம் கொள்ளுதல்

3] பொல்லாக் காட்சி – மாயத் தோற்றம்

4] சீலம் – ஒழுக்கம்

**குறிப்பு :-** வெஃகல் என்பதன் சரியான பொருள் பெருவிருப்பம்.

**28] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] புரைதீர் – குற்றம் நீங்கிய

**2] கேண்மின் – கூறுங்கள்**

3] முத்தேர் நகை – முத்துச் சிரிப்பு

4] உய்ம்மின் – போற்றுங்கள், நற்கதியடையுங்கள்

**குறிப்பு :-** கேண்மின் என்பதன் சரியான பொருள் கேளுங்கள்.

**29] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] உறைதல் – தங்குதல்

2] கூற்று – எமன்

**3] மாசில் – குற்றமுள்ள**

4] தொழுது – வணங்கி

**குறிப்பு :-** மாசில் என்பதன் சரியான பொருள் குற்றமற்ற.

**30] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] புக்கு – புகுந்து

2] இடர் – இன்னல்

3] மேனி - உடல்

**4] மருங்கு - தூரம்**

**குறிப்பு :-** மருங்கு என்பதன் சரியான பொருள் பக்கம்.

**31] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக?**

1] தேவியும் ஆயமும் - எண்ணும்மை

2] அருந்தவர், நல்வினை - பண்புத்தொகைகள்

3] வாழ்க - வியங்கோள் வினைமுற்று

**4] செய்தவம், வீழ்கதிர் - வினைமுற்று**

**குறிப்பு :-** செய்தவம், வீழ்கதிர் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு வினைத்தொகை.

**32] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக?**

1] ஆய்தொடி நல்லாய் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

2] ஆழ்நரகு, பயன்தெரி புலவர் - வினைத்தொகை

**3] தெளிதல் - பண்புப்பெயர்**

4] பல்லுயிர், பெரும்பேறு, நல்வினை, தீவினை, பேரின்பம் - பண்புத்தொகைகள்

**குறிப்பு :-** தெளிதல் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு தொழிற்பெயர்.

**33] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக?**

1] காமத்தீ - உருவகம்

2] கடுஞ்சொல், நல்லறம் - பண்புத்தொகை

3] பொல்லாக்காட்சி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**4] அரைசன் - வியங்கோள் வினைமுற்று**

**குறிப்பு :-** அரைசன் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு இடைப்போலி.

**34] தேவியும் ஆயமும் சித்திரா பதியும், மாதவி மகளும் மாதவர்க் காண்டலும், எழுந்தெதிர் சென்றாங்கு இணைவளைக் கையால், தொழுந்தகை மாதவன் துணையடி வணங்க, அறிவுண் டாகவென் றாங்கவன் கூறலும்,.. - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்**

3] சீவகசிந்தாமணி, திருத்தக்கதேவர்

4] கலிங்கத்துப்பரணி, சயங்கொண்டார்

**35] இணைவளை நல்லாள் இராசமா தேவி, அருந்தவர்க் கமைந்த ஆசனம் காட்டித், திருந்தடி விளக்கிச் சிறப்புச் செய்தபின், யாண்டுபல புக்கநும் மிணையடி வருந்தஎன், காண்டகு நல்வினை நும்மையீங்கு அழைத்தது, - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்**

3] சீவகசிந்தாமணி, திருத்தக்கதேவர்

4] கலிங்கத்துப்பரணி, சயங்கொண்டார்

**5] இயேசு ------------ சீடர்களைக் கொண்டிருந்தார்.**

1] 9 2] 10 3] 11 **4] 12**

**6] பொறமை கொண்டவர்களின் சூழ்ச்சியில் சிக்கிய ----------- என்னும் சீடர் இயேசுவைக் காட்டிக் கொடுத்தார்.**

1] ததயு

2] சீமோன்

**3] யூதாசு**

4] இவர்களில் யாருமில்லை

**7] இயேசு, யூதேய மரபுகளை மீறினார் எனப் பொய்க் குற்றஞ் சாட்டி, ------------------ மரணதண்டனை விதித்தான்.**

1] ஏரோது மன்னன்

2] எகிப்து மன்னன்

**3] பிலாத்து மன்னன்**

4] இவர்களில் யாருமில்லை

**8] கொலையாளிகள் இயேசுவின் தோள்களில் சிலுவையினைச் சுமத்தித் துன்புறுத்திக் ----------- க்குக் கொண்டு சேர்த்தனர்.**

1] ஆல்ப்ஸ் மலை

2] இமய மலை

**3] கல்வாரி மலை**

4] இவற்றில் ஏதுமில்லை

**9] ஈண்டினியான் புகல்வதென்ன? எம்பெருமான் திருமேனி ; தீண்டினார். சிலுவையொடு சேர்த்தினர். செங்கையிலும் ; காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினர்,**

**நீண்டசிலு வையையெடுத்து நிறுத்தினார் நிலங்கீண்டு - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] தேம்பாவணி, வீரமாமுனிவர்

**2] இரட்சணிய யாத்திரிகம், எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

3] பெத்தலகேம் குறவஞ்சி, தஞ்சை வேதநாயக சாத்திரியார்

4] இவற்றில் ஏதுமில்லை

**10] மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்தும்; செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழியச்; சொற்றமறைத் திருவசனம் துலக்கமுறச் சுருதிமுதல்; குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை; - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] தேம்பாவணி, வீரமாமுனிவர்

**2] இரட்சணிய யாத்திரிகம், எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

3] பெத்தலகேம் குறவஞ்சி, தஞ்சை வேதநாயக சாத்திரியார்

4] இவற்றில் ஏதுமில்லை

**11] தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்; பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய் !; இன்னதென அறிகில்லார் தாம்செய்வ திவர்பிழையை; மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல் - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] தேம்பாவணி, வீரமாமுனிவர்

**2] இரட்சணிய யாத்திரிகம், எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

3] பெத்தலகேம் குறவஞ்சி, தஞ்சை வேதநாயக சாத்திரியார்

4] இவற்றில் ஏதுமில்லை

**12] இத்தகைய இரும்பொறையும் மனநலமும் இயைந்தவரே; வித்தகனுக் கடித்தொழும்பர் எனத்தகுமெய்க் கிறிஸ்தவர்மற்; றித்தகைய குணமிலரும் கிறிஸ்தவரென் றிசைபெறுதல்; செத்தவரைத் துஞ்சினவர் எனவுரைக்கும் சீர்மைத்தால் - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] தேம்பாவணி, வீரமாமுனிவர்

**2] இரட்சணிய யாத்திரிகம், எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

3] பெத்தலகேம் குறவஞ்சி, தஞ்சை வேதநாயக சாத்திரியார்

4] இவற்றில் ஏதுமில்லை

**13] கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு; மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி; ஈன்டிவரே உலகினுக்கோர் இரட்சகரென் றெடுத்துரைக்கும். வேண்டுமோ இனிச்சான்றும் இதைவிடுத்து வேறொன்றே - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] தேம்பாவணி, வீரமாமுனிவர்

**2] இரட்சணிய யாத்திரிகம், எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

3] பெத்தலகேம் குறவஞ்சி, தஞ்சை வேதநாயக சாத்திரியார்

4] இவற்றில் ஏதுமில்லை

**14] மன்றாடும் அருட்சீவ வசனத்தை வன்மறவோர்; ஒன்றாகப் பொருள்செய்யார் உடைகளைந்து பங்கிட்டார்; குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்; என்றாக டியமான எழுத்திட்டார் சிலுவைமிசை - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] தேம்பாவணி, வீரமாமுனிவர்

**2] இரட்சணிய யாத்திரிகம், எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

3] பெத்தலகேம் குறவஞ்சி, தஞ்சை வேதநாயக சாத்திரியார்

4] இவற்றில் ஏதுமில்லை

**15] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] ஈண்டு – உண்பது**

2] புகல்வது – சொல்வது

3] கடாவினார் – அடித்தார்

4] கீண்டு – தோண்டி

**குறிப்பு :-** ஈண்டு என்பதன் சரியான சொற்பொருள் இவ்விடம்.

**16] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] செற்றம் – இரத்தம்**

2] குருசு – சிலுவை

3] சொற்ற – சொன்ன

4] துளக்கம் – விளக்கம்

**குறிப்பு :-** செற்றம் என்பதன் சரியான சொற்பொருள் சினம்.

**17] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] சுருதிமுதல் – மறை முதல்வராகிய இயேசுநாதர்

**2] சதைப்புண்டு – நகைச்சுவை**

3] பன்னரிய – சொல்லுதற்கரிய

4] இரும்பொறை – பெரும்பொறுமை

**குறிப்பு :-** சதைப்புண்டு என்பதன் சரியான சொற்பொருள் சிதைக்கப்பட்டு.

**18] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வித்தகன் – ஆண்டவன்

2] தொழும்பர் – அடியார்

**3] இசைபெறுதல் – கோபப்படுதல்**

4] துஞ்சினவர் – உறங்கியவர்

**குறிப்பு :-** இசைபெறுதல் என்பதன் சரியான சொற்பொருள் புகழ்பெறுதல்.

**19] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] கீண்டு – பிளந்து

2] இருப்புமுளை – ஆணையின் நுனி

3] வதைப்புண்டு – துன்பமடைந்து

**4] இரட்சகர் – எதிரி**

**குறிப்பு :-** இரட்சகர் என்பதன் சரியான சொற்பொருள் காப்பவர்.

**20] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மன்றாடும் – மிக வேண்டுதல்

2] ஆகடியம் – ஏளனம்

3] மாண்டுப்படும்போது – இறக்கும்நிலையில்

**4] மருங்கு - தூரம்**

**குறிப்பு :-** மருங்கு என்பதன் சரியான சொற்பொருள் பக்கம்.

**21] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] செங்கை, வன்மறவோர், சேவடி, வெவ்விருப்பு – பண்புத்தொகைகள்

2] இருப்பாணி – வலித்தல் விகாரம்

**3] கனிவாய் – உருவகம்**

4] நாழி - ஆகுபெயர்

**குறிப்பு :-** கனிவாய் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு உவமைத்தொகை.

**22] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

1] ஈண்டினியான் = ஈண்டு + இனி + யான்

2] காண்டகு = காண் + தகு

**3] சேவடி = சே + அடி**

4] வெவ்விருப்பாணி = வெம்மை + இரும்பு + ஆணி

**குறிப்பு :-** சேவடி என்பதன் சரியான பிரித்தறிதல் செம்மை + அடி.

**23] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

1] மற்றிரண்டு = மற்று + இரண்டு

2] குருசேற்றி = குருசு + ஏற்றி

**3] தன்னரிய = தன்னை + அறிய**

4] தவிப்பெய்தி = தவிப்பு + எய்தி

**குறிப்பு :-** தன்னரிய என்பதன் சரியான பிரித்தறிதல் தன் + அரிய.

**24] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

**1] இத்தகைய = இத் + தகைய**

2] என்றாகடியமான = என்று + ஆகடியம் + ஆன

3] இருப்புமுளை = இரும்பு + முளை

4] ஈண்டிவரே = ஈண்டு + இவரே

**குறிப்பு :-** இத்தகைய என்பதன் சரியான பிரித்தறிதல் இ + தகைய.

**25] இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலின் ஆசிரியர் பெயர்?**

1] தஞ்சை வேதநாயகம்

2] வீரமாமுனிவர்

3] உமறுப்புலவர்

**4] எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

**26] இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலின் ஆசிரியர் எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை ---------------- மாவட்டத்திலுள்ள கரையிருப்பு என்னும் ஊரில் பிறந்தார்.**

1] நாமக்கல்

2] திருச்சி

3] தூத்துக்குடி

**4] திருநெல்வேலி**

**27] எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை அவர்களின் காலம்?**

1] 23.4.1837 முதல் 03.02.1910 வரை

2] 23.4.1817 முதல் 03.02.1890 வரை

3] 23.4.1847 முதல் 03.02.1920 வரை

**4] 23.4.1827 முதல் 03.02.1900 வரை**

**28] எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை அவர்களின் பெற்றோர் பெயர்?**

1] சாத்தப்பன் - சொர்ணமுகி

2] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

3] முத்தையா - விசாலட்சுமி

**4] சங்கரநாராயணர் – தெய்வநாயகி அம்மாள்**

**29] எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை அவர்களின் பெற்றோர் சங்கரநாராயணர் – தெய்வநாயகி அம்மாள் அவர்கள் வாழ்ந்த ஊர் எது?**

1] சடையம்பட்டி

2] ராசிபுரம்

**3] ரெட்டியாபட்டி**

4] வெங்கடாசலபுரம்

**30] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர், தந்தையிடம் தமிழிலக்கியங்களையும், மாணிக்கவாசகத்தேவரிடம் இலக்கணங்களையும், பிலவணச் சோதிடரிடம் வடமொழியையும் கற்றார். சாயர்புரம் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.**

1] தஞ்சை வேதநாயகம்

2] வீரமாமுனிவர்

3] உமறுப்புலவர்

**4] எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

**31] இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணியக்குறள் - ஆகிய நூல்களின் ஆசிரியர் பெயர் என்ன?**

1] தஞ்சை வேதநாயகம்

2] வீரமாமுனிவர்

3] உமறுப்புலவர்

**4] எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

**32] கிறித்தவக் கம்பர் எனப் புகழ்பெற்ற பெருங்கவிஞர் யார்?**

1] தஞ்சை வேதநாயகம்

2] வீரமாமுனிவர்

3] உமறுப்புலவர்

**4] எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை**

**33] இரட்சணியயாத்திரிகம் என்பதன் பொருள் (-------------------------------------) இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் என்பது. ஆன்ம ஈடேற்றத்தை விரும்புவர் என்பதும் பொருந்தும்.**

1] உடல், தன்னைக் காக்க வேண்டி

2] மனது, தன்னைக் காக்க வேண்டி

3] உலகம், தன்னைக் காக்க வேண்டி

**4] உயிர், தன்னைக் காக்க வேண்டி**

**34] --------------- என்னும் புகழ்பெற்ற ஆங்கில நூலாசிரியர் இயற்றிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்னும் நூலைத்தழுவி, ஹென்றி ஆல்பர்ட்டு கிருட்டினனார் வழிநூலாகத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயரில் இயற்றினார்.**

1] முகமது பைரோசு

2] வில்சன் சைலசு

3] ஜியூ போப்

**4] ஜான் பன்யன்**

**35] எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை - இதில் எச்.ஏ. என்பதன் விளக்கம்?**

1] ஹெலன் ஆல்பிரட்

2] ஹெலன் ஆசுதோசு

**3] ஹென்றி ஆல்பர்ட்டு**

4] இவற்றில் ஏதுமில்லை

**36] மனிதகுலத்தின் உழைப்பின் மேன்மையைப் பயன்வடிவில் மக்களெல்லாம் ஒன்றுகூடித் துய்த்து இன்புறுகின்ற இணையில்லாத் திருநாள்தான் --------------.**

1] தீபாவளி

2] ஹோலி

**3] பொங்கல்**

4] கிறிஸ்துமஸ்

**37] பழமைகளை பக்குவமாய் வழியனுப்பிவிட்டு, வளர்ச்சிக்கு வளமை கூட்டும் புதுவரவுகளுக்கு மலர்ச்சியோடு மக்கள் தம் மனத்தால் வரவேற்பு இசைத்திடும் வண்ணத் திருநாள் தான் ----------------.**

1] தீபாவளி

2] ஹோலி

**3] பொங்கல்**

4] கிறிஸ்துமஸ்

**38] உலகின் உயரிய வாழ்வுக்கு அச்சாணியாய், மூல ஒளியாய்த் திகழ்கின்ற எழுகதிரைப் போற்றி வணங்குகின்ற உயிர்ப்புள்ள திருநாள் தான் ------------.**

1] தீபாவளி

2] ஹோலி

**3] பொங்கல்**

4] கிறிஸ்துமஸ்

**39] பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே - என்னும் பாடல் எந்த திருநாளை குறிப்பிடுகிறது?**

1] தீபாவளி

2] ஹோலி

**3] போ(க்)கித் திருநாள்**

4] கிறிஸ்துமஸ்

**40] காயுடை நெல்லொடு கரும்பு அமைத்துக்; கட்டி அரிசி அவல் அமைத்து; வாயுடை மறையவர் மந்திரத்தால் .. .. .. .. .. .. .. .. .. வணங்குகின்றேன் - இந்த பாடல் வரியின் ஆசிரியர்?**

1] இராமானுஜர்

**2] ஆண்டாள்**

3] சுந்தரர்

4] பாரதியார்

**41] ஆந்திரா, கருநாடகா ஆகிய மாநிலங்களிலும் மகர சங்கராந்தி எனவும் ஜப்பான், ஜாவா முதலிய நாடுகளில் அறுவடைத் திருவிழா எனவும் கொண்டாடப்படும் விழா எது?**

1] தீபாவளி

2] ஹோலி

**3] பொங்கல்**

4] கிறிஸ்துமஸ்

**42] நேர்மை - என்னும் துணைப் பாடக் கதைப்பகுதி எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது?**

1] சேதுராமன் கதைகள்

2] விகடகவி கதைகள்

**3] ஆழி வே. இராமசாமி, நல்லொழுக்கக் கதைகள்**

4] இவற்றில் ஏதுமில்லை

**43] ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது -------------- எனப்படும்.**

1] அணி

2] வழு

3] பொருள்கோள்

**4] ஆகுபெயர்**

**44] ஆகுபெயர் ------------ வகைப்படும்?**

1] 12 2] 14 **3] 16** 4] 18

**45] "யாழ் கேட்டு மகிழ்ந்தாள்" - இது எந்த ஆகுபெயர்?**

**1] கருவியாகு பெயர்**

2] காரியவாகு பெயர்

3] கருத்தாவாகு பெயர்

4] உவமையாகு பெயர்

**விளக்கம் :-** யாழ் கேட்டு மகிழ்ந்தாள். இத்தொடரில், யாழ் என்னும் கருவி இசைக்கு ஆகி வந்ததனால் கருவியாகு பெயர். கருவியாகு பெயர் : கருவிப் பொருளைக் குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்திற்கு ஆகிவரும். (எ.கா.) : வீணை கேட்டு மெய் மறந்தேன்.

**46] நான் சமையல் கற்றேன் - இது எந்த ஆகுபெயர்?**

1] கருவியாகு பெயர்

**2] காரியவாகு பெயர்**

3] கருத்தாவாகு பெயர்

4] உவமையாகு பெயர்

**விளக்கம் :-** நான் சமையல் கற்றேன். இங்குச் சமையல் என்னும் காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்குப் (கருவிக்கு) பெயராகி வருவது காரியவாகு பெயர். காரியவாகு பெயர் : காரியப்பொருள் கருவிப்பொருளுக்கு ஆகிவருவது. (எ.கா.) : நன்னூல் கற்றேன்..

**47] திருவள்ளுவரைப் படித்துப்பார் - இது எந்த ஆகுபெயர்?**

1] கருவியாகு பெயர்

2] காரியவாகு பெயர்

**3] கருத்தாவாகு பெயர்**

4] உவமையாகு பெயர்

**விளக்கம் :-** திருவள்ளுவரைப் படித்துப்பார். இத்தொடரில் திருவள்ளுவர் என்பது, அவரால் இயற்றப் பெற்ற நூலுக்கு ஆகிவந்ததனால், கருத்தாவாகு பெயராயிற்று.

**48] ஒருவரைப் பார்த்து, நாரதர் வருகிறார் எனல் - இது எந்த ஆகுபெயர்?**

1] கருவியாகு பெயர்

2] காரியவாகு பெயர்

3] கருத்தாவாகு பெயர்

**4] உவமையாகு பெயர்**

**விளக்கம் :-** ஒருவரைப் பார்த்து, நாரதர் வருகிறார் எனல். இத்தொடரில் நாரதர் என்னும் பெயர் அவரைக் குறிக்காமல், அவரைபோன்ற (கலகமூட்டுபவர்) வேறொருவர்க்கு ஆகிவந்தது. அதனால், இஃது உவமையாகுபெயராயிற்று.

**49] பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி; கருவி காரியம் கருத்தன் ஆதியுள்; ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்; தொன்முறை உரைப்பன ஆகு பெயரே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] இனியவை நாற்பது

2] பழமொழி நானூறு

**3] நன்னூல்**

4] மதுரைக்காஞ்சி

**50] வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல்போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருத்துவது ------------------- ஆகும்.**

1] ஆற்றுநீர்ப்பொருள்கோள்

2] மொழிமாற்றுப்பொருள்கோள்

3] நிரல்நிறைப்பொருள்கோள்

**4] விற்பூட்டுப்பொருள்கோள்**

**விளக்கம் :-** விற்பூட்டுப்பொருள்கோள் : வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல்போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருத்துவது விற்பூட்டுப் பொருள்கோள். இதனைப் பூட்டுவிற்பொருள்கோள் எனவும் கூறுவர்.

**(எ.கா.) : நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்**

**பெருமை உடைத்திவ் வுலகு**

இக்குறளில், உலகு என்னும் இறுதிச்சொல் முதல்சொல்லான நெருநல் என்பதோடு சேர்த்துப் பொருள் கொள்வதனால் இது பூட்டுவில் பொருள்கோள்.

**51] ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது ------------------ ஆகும்.**

**1] தாப்பிசைப்பொருள்கோள்**

2] அளைமறிபாப்புப்பொருள்கோள்

3] கொண்டுகூட்டுப்பொருள்கோள்

4] அடிமறிமாற்றுப்பொருள்கோள்

**விளக்கம் :-** தாப்பிசை பொருள்கோள் : ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது தாப்பிசைப் பொருள்கோள்.

தாம்பு + இசை – தாப்பிசை – ஊஞ்சல் கயிறு அசைதல்போல.(தாம்பு – ஊஞ்சல் கயிறு).

**(எ.கா.) : இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்**

**துறந்தார் துறந்தார் துணை**

இப்பாடலில் 'சினத்தை' என்னும் நடுநின்ற சொல்லைச், சினத்தை உடையவர் (இறந்தார்) இறந்தார் அனையர் எனவும், சினத்தைத் துறந்தார் (துறந்தார்) ஞானியர் துணை எனவும் அமைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**52] பாம்பு, புற்றில் தலைவைத்து நுழையும்போது, தலை மேலாகவும், உடல் அடுத்தும் செல்வதுபோலச் செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது ----------------- ஆகும்.**

1] தாப்பிசைப்பொருள்கோள்

**2] அளைமறிபாப்புப்பொருள்கோள்**

3] கொண்டுகூட்டுப்பொருள்கோள்

4] அடிமறிமாற்றுப்பொருள்கோள்

**விளக்கம் :-** அளைமறிபாப்புப் பொருள்கோள் :- பாம்பு, புற்றில் தலைவைத்து நுழையும்போது, தலை மேலாகவும், உடல் அடுத்தும் செல்வதுபோலச் செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது, அளைமறிபாப்புப் பொருள்கோள். (அளை – புற்று, பாப்பு – பாம்பு.)

**(எ.கா.) :- தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து**

**தண்டூன்றித் தளர்வார் தாமும்**

**சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து**

**நாற்கதியிற் சுழல்வார் தாமும்**

**மூழ்ந்த பிணிநலிய முன்செய்த**

**வினையென்றே முனிவார் தாமும்**

**வாழ்ந்த பொழுதினே வானெய்து**

**நெறிமுன்னி முயலா தாரே.**

-இப்பாடலில் ‘வாழ்ந்த மொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே’ என்னும் ஈற்றடியைப் பாடலின் முதலில்கொண்டு பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**53] செய்யுளின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள்கொள்வது ---------- ஆகும்.**

1] தாப்பிசைப்பொருள்கோள்

2] அளைமறிபாப்புப்பொருள்கோள்

**3] கொண்டுகூட்டுப்பொருள்கோள்**

4] அடிமறிமாற்றுப்பொருள்கோள்

**விளக்கம் :-** கொண்டுகூட்டுப் பொருள்கோள் :- செய்யுள்களின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

**(எ.கா.) :- கட்டிக் கரும்பு கசக்கும் மிகக்கனிந்த**

**எட்டிக் கனியினிக்கும் என்னூரில் – பட்டியுள**

**காளை படிபால் கறக்குமே நல்லபசு**

**வேளை தவிரா துழும் .**

-இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் விளங்காது. இதில் உள்ள சொற்களைக் கட்டிக் கரும்பு இனிக்கும், மிகக்கனிந்த எட்டிக்கனி கசக்கும், பட்டியிலிருக்கும் காளை மாடு நேரந்தவிராது உழும். நல்ல பசு படி பால் கறக்கும் எனப் பொருள் கொள்வதற்கு ஏற்ப அடிதோறும் மாறிக்கிடக்கின்ற சொற்களைப் பொருத்தமாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**குறிப்பு :** மொழிமாற்றுப் பொருள்கோள் என்பது அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக்கொள்வது. கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பது பல அடிகளிலும் உள்ள சொற்களை மாற்றிப் பொருள்கொள்வது.

**54] செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது -------------- ஆகும்.**

1] தாப்பிசைப்பொருள்கோள்

2] அளைமறிபாப்புப்பொருள்கோள்

3] கொண்டுகூட்டுப்பொருள்கோள்

**4] அடிமறிமாற்றுப்பொருள்கோள்**

**விளக்கம் :-** அடிமறிமாற்றுப் பொருள்கோள் :- செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறிமாற்றுப் பொருள்கோள்.

**(எ.கா.) : மாறாக் காதலர் மலைமறந் தனரே**

**ஆறாக் கட்பனி வரலா னாவே**

**வேறா மென்தோள் வளைநெகி ழும்மே**

**கூறாய் தோழி யான்வாழு மாறே..**

-இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக எப்படி மாற்றிப் பொருள்கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாது.

**55] பொருந்தாதது எது? உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக? கொண்டல்.**

1] வேகம்

2] தாகம்

**3] மேகம்**

4] சோகம்

**56] பொருந்தாதது எது? உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக? ஆகுலம்.**

**1] வருத்தம்**

2] சோர்வு

3] தளர்வு

4] மகிழ்ச்சி

**57] பொருந்தாதது எது? உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக? தாமம்.**

1] காலை

2] மாலை

**3] ஆடை**

4] அணி

**58] பொருந்தாதது எது? உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக? புரிசை.**

**1] மதில்**

2] மாலை

3] ஆடை

4] அணி

**59] பொருந்தாதது எது? உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக? மல்லல்.**

**1] வளம்**

2] மாலை

3] ஆடை

4] அணி

**60] தமிழ் அறிஞர்களே ! தமிழ் நாடெங்கும் தமிழ்ச்சங்கம் நிறுவுங்கள்; தமிழ்ப்பாடம் சொல்லுங்கள்; கலைச்செல்வத்தை வாரி வழங்குங்கள்; தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். இவ்விதம் ஒல்லும் வகையால் நாம் ஒவ்வொருவரும் பணி செய்வோமானால் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ் நாடு புத்துயிர் பெற்றுவிடும். - இந்த கூற்று யாருடையது?**

1] பாரதிதாசன்

2] பாரதியார்

3] திரு.வி.க

**4] ரா.பி.சேதுப்பிள்ளை (தமிழின்பம்)**

**61] அக் காலத்தில் நாடு முற்றும் தமிழுணர்ச்சி பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கும். கல்லூரிகளில் நல்லாசிரியரகள் எல்லோரும் தமிழறிஞராயிருப்பர். பல்கலைக் கழகங்களில் நக்கீரர் போன்ற நற்றமிழ்ப் புலவர் தலைவராக வீற்றிருப்பர்.- இந்த கூற்று யாருடையது?**

1] பாரதிதாசன்

2] பாரதியார்

3] திரு.வி.க

**4] ரா.பி.சேதுப்பிள்ளை (தமிழின்பம்)**

**62] 'எந்த மொழியும் நமது சொந்த மொழிக்கு இணையாகாது' என்று தமிழ் நாட்டு இளைஞர் செம்மாந்து பேசுவர்; 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்' என்று முரசு கொட்டுவர். எட்டுத் திசையிலும் தமிழ் நாடு ஏற்றமுற்று விளங்கும். அந்த நிலையினை இன்று எண்ணிப் பாரீர் ! அதனை எய்தியே தீர்வோம் ; பணிசெய்ய வாரீர் ! - இந்த கூற்று யாருடையது?**

1] பாரதிதாசன்

2] பாரதியார்

3] திரு.வி.க

**4] ரா.பி.சேதுப்பிள்ளை (தமிழின்பம்)**

## ஒன்பதாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 9

**1] தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி; வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்; நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்; கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவருக்கும் - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] புறநானூறு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்**

2] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

4] இவர்களில் யாருமில்லை

**2] உண்பது நாழி உடுப்பவை இரண்டே; பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே; செல்வத்துப் பயனே ஈதல்; துய்ப்பேம் எனினே தப்புந பலவே - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] புறநானூறு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்**

2] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

4] இவர்களில் யாருமில்லை

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நிழற்றிய – நிழல் செய்த

2] நடுநாள் யாமம் – நள்ளிரவு

**3] துஞ்சான் – துயிலான்**

4] மா – மரம்.

**விளக்கம் :-** மா என்பதன் சரியான சொற்பொருள் விலங்கு.

**4] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நாழி – அளவுப்பெயர்

**2] ஈதல் – வாங்குதல்**

3] துய்ப்போம் – நுகர்வோம்

4] தப்புந – இழக்க

**விளக்கம் :-** ஈதல் என்பதன் சரியான சொற்பொருள் கொடுத்தல்.

**5] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] கல்லா ஒருவற்கும் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2] நாழி – ஆகுபெயர்

**3] ஈதல் – பண்புத்தொகை**

4] துய்ப்போம் – தன்மைப் பன்மை வினைமுற்று

**விளக்கம் :-** ஈதல் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு தொழிற்பெயர்.

**6] வெண்குடை - இலக்கணக்குறிப்பு தருக.**

1] ஆகுபெயர்

**2] பண்புத்தொகை**

3] தன்மைப் பன்மை வினைமுற்று

4] தொழிற்பெயர்

**7] ----------- என்னும் இவர், இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர்.**

**1] மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்**

2] விளம்பிநாகனார்

3] முன்றுறை அரையனார்

4] ஔவையார்

**8] பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படையையும் நெடுநல்வாடையையும் இயற்றியவர் ------------.**

**1] மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்**

2] விளம்பிநாகனார்

3] முன்றுறை அரையனார்

4] ஔவையார்

**9] புறநானூற்றில் --------- பாடல்கள் உள்ளன.**

1] 300 **2] 400** 3] 500 4] 600

**10] புறநானூறு ------------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெருங் காப்பியம்

2] ஐஞ்சிறும் காப்பியம்

3] பத்துப்பாட்டு

**4] எட்டுத்தொகை**

**11] புறநானூற்றின் சில பாடல்களை ------------- என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.**

**1] ஜி.யு.போப்**

2] வால்ட் விட்மன்

3] வீரமாமுனிவர்

4] ஜான் பன்யன்

**12] விடுபட்ட இடத்தில் உரிய எழுத்தினைக் கொண்டு நிரப்புக.**

**தெ----கடல் வளாகம் பொதுமை இ---றி; வெண்குடை நிழற்றிய ஒருமை யோ---க்கும்**

1] ன், ந், ர்

2] ந், ன், ற்

3] ண், ந், ர்

**4] ண், ன், ர்**

**13] நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று; நீரினும் ஆரள வின்றே சாரல் - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] புறநானூறு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] குறுந்தொகை, தேவகுலத்தார்**

**14] கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு; பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] புறநானூறு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

2] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] குறுந்தொகை, தேவகுலத்தார்**

**15] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நீர் – கடல்

2] கருங்கோல் – கருமை நிறமுடைய கொம்பு

**3] உயர்ந்தன்று – சிறியது**

4] அளவின்று – அளவினையுடையது

**விளக்கம் :** உயர்ந்தன்று என்பதன் சரியான சொற்பொருள் உயர்ந்தது.

**16] இலக்கணக்குறிப்பு தருக. நிலத்தினும், வானினும், நீரினும்.**

1] உருவகம்

2] எண்ணும்மை

3] முற்றும்மை

**4] உயர்வுச்சிறப்பும்மை**

**17] இலக்கணக்குறிப்பு தருக. கருங்கோல், பெருந்தேன்.**

1] தொழிற்பெயர்

2] வினைத்தொகை

3] அல் ஈற்றுத் தொழிற்பெயர்

**4] பண்புத்தொகை**

**18] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

**1] ஆரளவு = ஆர + ளவு**

2] கருங்கோல் = கருமை + கோல்

3] பெருந்தேன் = பெருமை + தேன்

4] சேவடி = செம்மை + அடி

**குறிப்பு :-** ஆரளவு என்பதன் சரியான பிரித்தறிதல் - அருமை + அளவு.

**19] குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துடன் --------- பாடல்கள் உள்ளன.**

1] 301 **2] 401** 3] 501 4] 601

**20] குறுந்தொகை ------------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெருங் காப்பியம்

2] ஐஞ்சிறும் காப்பியம்

3] பத்துப்பாட்டு

**4] எட்டுத்தொகை**

**21] குறுந்தொகை குறைந்த அளவாக --------- அடிகளையும் அதிக அளவாக ------------- அடிகளையும் கொண்டிருக்கின்றன.**

1] 3, 11 **2] 4, 8** 3] 6, 11 4] 5, 10

**22] குறுந்தொகை நூலைத் தொகுத்தவர் ---------------.**

**1] பூரிக்கோ**

2] மதுரை உப்புரிகுடி கிழான் மகனாவான் உருத்திர சன்மன்

3] புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

4] நல்லந்துவனார்

**23] குறுந்தொகை நூலுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் -------------.**

1] பாண்டியன் உக்கிரப் பெருவழுதி

2] யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையார்

3] பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

**4] பாரதம் பாடிய பெருந்தேவனார்**

**24] உயிர்கள் முதன்முதலில் ----------- இல் தோன்றின.**

1] நிலம் **2] நீர்** 3] காற்று 4] நெருப்பு

**25] -------------- உயிர்க்கோளத்தின் மையம்.**

1] விலங்கு

2] தாவரம்

**3] மனிதன்**

4] உயிரற்ற பொருள்கள்

**26] காற்று மண்டலம் ஒரு கலவை. அதில் உயிர்வளி (ஆக்சிஜன்) 21% உப்புவளி (நைட்டிரசன்) ------% மற்ற வளிகள் 1% கலந்துள்ளன.**

1] 72 2] 75 **3] 78** 4] 81

**27] கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்கள் நிலப்பரப்பைத் தாக்காத வகையில் ---------------- படலம் தடுக்கிறது.**

**விடை :- ஓசோன்**

**28] குளிர்பதனப்பெட்டியில் பயன்படுத்தப்படும் ----------------------, உயிர் வளிப்படலத்தைச் சிதைப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.**

**1] குளோரோ ஃபுளுரோ கார்பன்**

2] ஈத்தேன்

3] கதிரியக்கம்

4] மீத்தேன்

**29] சீர்கள் பல அடுத்து நடப்பது --------- எனப்படும்.**

1] அசை

**2] அடி**

3] தொடை

4] இவற்றில் ஏதுமில்லை

**30] அடி ------------- வகைப்படும்.**

1] 3 2] 4 **3] 5** 4] 5

**விளக்கம் :-** சீர்கள் பல அடுத்து நடப்பது அடி எனப்படும். குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என அடி ஐவகைப்படும்.

**31] அடிதோறும் இருசீர்களைப் பெற்று வருவது --------------- எனப்படும்.**

1] அளவடி

2] நெடிலடி

3] கழிநெடிலடி

**4] குறளடி**

**விளக்கம் :-** அடிதோறும் இருசீர்களைப் பெற்று வருவது குறளடி எனப்படும்.

**(எ.கா.) :** முக்தி வேண்டுமேல்

பக்தி வேண்டுமால்

சத்தி யம்இது

புத்தி நெஞ்சமே.

**32] அடிதோறும் முச்சீர்களைப் பெற்று வருவது --------------- எனப்படும்.**

**1] சிந்தடி**

2] நெடிலடி

3] கழிநெடிலடி

4] குறளடி

**விளக்கம் :-** அடிதோறும் முச்சீர்களைப் பெற்று வருவது சிந்தடி எனப்படும்.

**(எ.கா.) :-**

பழுதி லாத பயிர்த்தொழில்

பழுதி லாது பயிற்றவே

பழுதி லாது பலதொழில்

பழுதி லாது பயிற்றினர்

**33] அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது ---------------- எனப்படும்.**

**1] அளவடி அல்லது நேரடி.**

2] நெடிலடி

3] கழிநெடிலடி

4] குறளடி

**விளக்கம் :-** அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது அளவடி அல்லது நேரடி எனப்படும்.

**(எ.கா.) :**

தாய்மொழி தாயினும் தகவிற் போற்றுவன்

ஆய்மொழி யாளர்தம் அன்புக்கு ஏற்றவன்

காய்மொழி யாவதுங் கடிந்து மாற்றுவன்

வாய்மொழி தப்பிடா வகையில் ஆற்றுவன்.

**34] அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது ------------ எனப்படும்**

1] அளவடி அல்லது நேரடி

2] குறளடி

3] கழிநெடிலடி

**4] நெடிலடி**

**விளக்கம் :-** அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது நெடிலடி எனப்படும்.

**(எ.கா.) :**

ஆடும் கடைமணி நாஅசை யாமல் அகிலமெங்கும்

நீடும் குடையைத் தரித்த பிரானிந்த நீள்நிலத்தில்

பாடும் புலவர் புகழ்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்

சூடும் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே !

**35] அடிதோறும் ஆறு அல்லது அதற்குமேற்பட்ட பல சீர்களைப் பெற்று வருவதனைக் --------- எனக் கூறுவர்.**

1] அளவடி அல்லது நேரடி

2] குறளடி

3] சிந்தடி

**4] கழிநெடிலடி**

**விளக்கம் :-** அடிதோறும் ஆறு அல்லது அதற்குமேற்பட்ட பல சீர்களைப் பெற்று வருவதனைக் கழிநெடிலடி எனக் கூறுவர். **(எ.கா.) :** வாழ்வினில் செம்மை வேண்டும் வாய்மையே பேசல் வேண்டும்; பாழ்செயல் விலக்கல் வேண்டும் ; பண்பினைக் காத்தல் வேண்டும்; தாழ்வினை அகற்ற வேண்டும்

; தருக்கினை விடுதல் வேண்டும்; சூழ்நிலை உணர்தல் வேண்டும் சோம்பலைப் போக்க வேண்டும்.

இப்பாடல் அடிதோறும் ஆறுசீர்கள் பெற்றுள்ளதனால், இதனைக் கழிநெடிலடி என்பர். பாடலிலுள்ள சீர்களை எண்ணி, இதனை அறுசீர்க்கழிநெடிலடி என்பர். இதுபோல் ஏழுசீர்கள் இருந்தால் எழுசீர்க்கழிநெடிலடி என்றும், எட்டுச் சீர்கள் இருந்தால் எண்சீர்க்கழிநெடிலடி என்றும் கூறுவர்.

**36] மலர்களைத் தொடுப்பது போலவே சீர்களிலும் அடிகளிலும் மோனை முதலியன அமையத் தொடுப்பது ---------------- எனப்படும்.**

1] சீர்

2] தலை

3] அடி

**4] தொடை**

**விளக்கம் :-** (தொடை – தொடுக்கப்படுவது, தொடை – மாலை). பாவின் ஓசையின்பத்திற்கும் சிறப்பிற்கும் இத்தொடை வேண்டுவதாகும், தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.

**37] தொடை ---------------- வகைப்படும்.**

1] 5 2] 6 3] 7 **4] 8**

**விளக்கம் :-** தொடை எண்வகைப்படும். அவை :

1.மோனைத்தொடை. 2.எதுகைத்தொடை. 3.முரண்தொடை. 4.இயைபுத்தொடை. 5.அளபெடைத்தொடை. 6.இரட்டைத்தொடை. 7.அந்தாதித்தொடை. 8.செந்தொடை

**38] செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது -------------------- எனப்படும்.**

1] அடிமுரண்தொடை

2] அடிஇயைபுத்தொடை

3] அடிஎதுகைத்தொடை

**4] அடிமோனைத் தொடை**

**விளக்கம் :-** செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும்.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**

**எண்ணுவம் என்ப திழுக்கு** - இக்குறட்பாவில் முதல் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) இரண்டாம் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) ஒன்றி வந்துள்ளதனால், இது மோனைத்தொடை.

**39] அடிதோறும் முதலெழுத்து அளவொத்து (ஓசையில்) நிற்க. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ---------------- எனப்படும்.**

1] அடிமுரண்தொடை

2] அடிஇயைபுத்தொடை

**3] அடிஎதுகைத்தொடை**

4] அடிமோனைத் தொடை

**விளக்கம் :-** அடிதோறும் முதலெழுத்து அளவொத்து (ஓசையில்) நிற்க. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத்தொடை எனப்படும்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**

**பகவன் முதற்றே உலகு** – இக்குறட்பாவில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் க என்னும் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளது. எனவே, இஃது அடியெதுகைத்தொடை எனப்படும்.

**40] அடிதோறும் முதற்சீர் முரண்படத் தொடுப்பது --------------- எனப்படும்.**

**1] அடிமுரண்தொடை**

2] அடிஇயைபுத்தொடை

3] அடிஎதுகைத்தொடை

4] அடிமோனைத் தொடை

**விளக்கம் :-** அடிதோறும் முதற்சீர் முரண்படத் தொடுப்பது அடிமுரண்தொடை எனப்படும். **இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**

**துன்பம் உறுதல் இலன்** – இப்பாடலில் முதலடியில் இன்பம் என்றும், இரண்டாம் அடியில் துன்பம் என்றும் முரண்பட்ட சொற்கள் வந்துள்ளன. எனவே, இஃது அடிமுரண்தொடை எனப்படும்.

**41] அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது ---------------------- எனப்படும்.**

1] அடிமுரண்தொடை

**2] அடிஇயைபுத்தொடை**

3] அடிஎதுகைத்தொடை

4] அடிமோனைத் தொடை

**விளக்கம் :-** அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது அடிஇயைபுத்தொடை எனப்படும்.

**கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்**

**கொடிகள் வானம் படிதர மூடும்**

**கண்ட பேரண்டத் தண்டலை நாடும்**

**கனக முன்றில் அனம்விளை யாடும்** - இப்பாடலில் அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி வந்துள்ளதனால் அடிஇயைபுத் தொடை ஆயிற்று.

**42] அடிதோறும் முதல் சீர் அளபெடுத்து வருவது ---------------- எனப்படும்.**

1] அடிமுரண்தொடை

2] அடிஇயைபுத்தொடை

3] அடிஎதுகைத்தொடை

**4] அடியளபெடைத் தொடை**

**விளக்கம் :-** அடிதோறும் முதல் சீர் அளபெடுத்து வருவது அடியளபெடைத் தொடை எனப்படும். **கெடுப் பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**

**எடுப்ப தூஉம் எல்லாம் மழை** – இப்பாடலில் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என இரண்டடிகளிலும் அளபெடுத்து வந்துள்ளமையால், அடியளபெடைத் தொடை எனப்படும்.

**43] நான்குசீர்களையுடைய ஓரடியில் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனைக்கொண்டு தொடுப்பது -------------- எனப்படும்.**

1] மோனைத்தொடை

2] எதுகைத் தொடை

3] இயைபுத்தொடை

**4] தொடை விகற்பம்**

**44] தொடை விகற்பம் ---------------- வகைப்படும்.**

1] 25 2] 30 **3] 35** 4] 40

**விளக்கம் :-** நான்குசீர்களையுடைய ஓரடியில் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனைக்கொண்டு தொடுப்பது தொடை விகற்பம் எனப்படும். இவ்வேழும் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகிய ஐந்தும் பொருந்தத் தொடை விகற்பம் முப்பந்தைந்து வகைப்படும்.

**45] நாலடி கொண்ட சீருள் முதலிரு சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ------------ எனப்படும்.**

**1] இணை மோனை**

2] பொழிப்பு மோனை

3] ஒரூஉ மோனை

4] கூழை மோனை

**விளக்கம் :-** இணை மோனை (1, 2) :- நாலடி கொண்ட சீருள் முதலிரு சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இனை மோனை எனப்படும்.

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**

**வன்சொல் வழங்கு வது.**

**46] ஓர் அடியுள் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து ஒன்றி வருவது --------------- எனப்படும்.**

1] இணை மோனை

**2] பொழிப்பு மோனை**

3] ஒரூஉ மோனை

4] கூழை மோனை

**விளக்கம் :-** பொழிப்பு மோனை (1, 3) : ஓர் அடியுள் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து ஒன்றி வருவது பொழிப்பு மோனை எனப்படும்.

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்**

**திறந்தாரை எண்ணிக்கொண் டற்று.**

**47] ஓர் அடியுள் முதற்சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ---------------- எனப்படும்.**

1] இணை மோனை

2] பொழிப்பு மோனை

**3] ஒரூஉ மோனை**

4] கூழை மோனை

**விளக்கம் :-** ஒரூஉ மோனை (1, 4) : ஓர் அடியுள் முதற்சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ மோனை எனப்படும்.

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**

**மறைமொழி காட்டி விடும்**

**48] ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ------------- எனப்படும்.**

1] இணை மோனை

2] பொழிப்பு மோனை

3] ஒரூஉ மோனை

**4] கூழை மோனை**

**விளக்கம் :-** கூழை மோனை (1, 2, 3) :- ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை மோனை எனப்படும்.

**தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**

**வானம் வழங்கா தெனின்**

**49] ஓர் அடியுள் முதல், மூன்று, நாலாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது --------------- எனப்படும்.**

**1] மேற்கதுவாய் மோனை**

2] கீழ்க்கதுவாய் மோனை

3] முற்று மோனை

4] ஒரூஉ மோனை

**விளக்கம் :-** மேற்கதுவாய் மோனை (1, 3, 4) :- ஓர் அடியுள் முதல், மூன்று, நாலாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் மோனை எனப்படும்.

**விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**

**துள்நின்று டற்றும் பசி.**

**50] ஓர் அடியுள் முதல், இரண்டு, நாலாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது -------------- எனப்படும்.**

1] மேற்கதுவாய் மோனை

**2] கீழ்க்கதுவாய் மோனை**

3] முற்று மோனை

4] ஒரூஉ மோனை

**விளக்கம் :-** கீழ்க்கதுவாய் மோனை (1, 2, 4) :- ஓர் அடியுள் முதல், இரண்டு, நாலாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் மோனை எனப்படும்.

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**

**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

**51] ஓர் அடியின் நாலு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது -------------- எனப்படும்.**

1] மேற்கதுவாய் மோனை

2] கீழ்க்கதுவாய் மோனை

**3] முற்று மோனை**

4] ஒரூஉ மோனை

**விளக்கம் :-** முற்று மோனை (1, 2, 3, 4) :- ஓர் அடியின் நாலு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்று மோனை எனப்படும்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்கு தக.**

**குறிப்பு :** நாலு சீர்களில் மோனைக்குரிய விகற்பகங்கள் இணை. பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என ஏழிற்கும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது போலவே எதுகையும் வரும்.

**52] முதலிரு சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க (ஓசையளவில்) இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ----------------- எனப்படும்.**

**1] இணை எதுகை**

2] பொழிப்பு எதுகை

3] ஒரூஉ எதுகை

4] கூழை எதுகை

**விளக்கம் :-** முதலிரு சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க (ஓசையளவில்) இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணை எதுகை எனப்படும்.

**ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**

**மாற்றுவார் ஆற்றலின் பின்.**

**53] ஓர் அடியுள் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ------------------- எனப்படும்.**

1] இணை எதுகை

**2] பொழிப்பு எதுகை**

3] ஒரூஉ எதுகை

4] கூழை எதுகை

**விளக்கம் :-** பொழிப்பு எதுகை (1, 3) :ஓர் அடியுள் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு எதுகை எனப்படும்.

**அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்**

**மல்லல்மா ஞாலம் கரி**

**54] ஓர் அடியுள் முதல் சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது தொடுப்பது --------------------- எனப்படும்.**

1] இணை எதுகை

2] பொழிப்பு எதுகை

**3] ஒரூஉ எதுகை**

4] கூழை எதுகை

விளக்கம் :- ஒரூஉ எதுகை (1, 4) :- ஓர் அடியுள் முதல் சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ எதுகை எனப்படும்.

**அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்**

**கிவ்வுலகம் இல்லாகி யாங்கு**

**55] ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ------------- எனப்படும்.**

1] இணை எதுகை

2] பொழிப்பு எதுகை

3] ஒரூஉ எதுகை

**4] கூழை எதுகை**

**விளக்கம் :-** கூழை எதுகை (1, 2, 3) :- ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை எதுகை எனப்படும்.

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**

**பற்றுக பற்று விடற்கு**

**56] ஓர் அடியுள் முதல், மூன்று, நாலாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ---------------- எனப்படும்.**

**1] மேற்கதுவாய் எதுகை**

2] கீழ்க்கதுவாய் எதுகை

3] முற்றெதுகை

4] கூழை எதுகை

**விளக்கம் :-** மேற்கதுவாய் எதுகை (1, 3, 4) :- ஓர் அடியுள் முதல், மூன்று, நாலாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

**அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**

**பிற்பயக்கும் நற்பா லவை**

**57] ஓர் அடியுள் முதல், இரண்டு, நாலாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது -------------- எனப்படும்.**

1] மேற்கதுவாய் எதுகை

**2] கீழ்க்கதுவாய் எதுகை**

3] முற்றெதுகை

4] கூழை எதுகை

**விளக்கம் :-** கீழ்க்கதுவாய் எதுகை (1, 2, 4) :- ஓர் அடியுள் முதல், இரண்டு, நாலாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் எதுகை எனப்படும்.

**இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**

**துன்பம் உறுதல் இலன்.**

**58] ஓர் அடியுள் உள்ள நாற்சீர்களிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ------------- எனப்படும்.**

1] மேற்கதுவாய் எதுகை

2] கீழ்க்கதுவாய் எதுகை

**3] முற்றெதுகை**

4] கூழை எதுகை

**விளக்கம் :-** ஓர் அடியுள் உள்ள நாற்சீர்களிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றெதுகை எனப்படும்.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**

**துப்பாய தூஉம் மழை**

**59] பொருந்தாதது எது?**

1] இணை (சீர்கள்) – 1, 2

2] பொழிப்பு (சீர்கள்) – 1, 3

**3] ஒரூஉ (சீர்கள்) – 1, 3, 4**

4] கூழை (சீர்கள்) – 1, 2, 3

**குறிப்பு :- ஒரூஉ (சீர்கள்) – 1, 4**

**60] பொருந்தாதது எது?**

1] கூழை (சீர்கள்) – 1, 2, 3

2] மேற்கதுவாய் (சீர்கள்) – 1, 3, 4

3] கீழ்க்கதுவாய் (சீர்கள்) – 1, 2, 4

**4] முற்று (சீர்கள்) – 1, 2, 4**

**குறிப்பு :- முற்று (சீர்கள்) – 1, 2, 3, 4.**

**61] கவிஞர், தாம் எடுத்துக்கொண்ட பல பொருள்களை உருவகப்படுத்திக் கூறும்போது, ஒன்றனை மட்டும் உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது, ---------------------- அணி எனப்படும்.**

1] வேற்றுமையணி

2] நிரல்நிறை அணி

**3] ஏகதேச உருவக அணி**

4] வேற்றுப்பொருள் வைப்பணி

**விளக்கம் :-** ஏகதேச உருவக அணி :- கவிஞர், தாம் எடுத்துக்கொண்ட பல பொருள்களை உருவகப்படுத்திக் கூறும்போது, ஒன்றனை மட்டும் உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது, ஏகதேச உருவக அணி எனப்படும்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**

**இறைவன் அடிசேரா தார்.** - இக்குறட்பாவில் பிறவியைக் கடலாக உருவகப்படுத்திவிட்டு, அதனைக் கடக்க உதவும் இறைவனைடியைத் தெப்பமாக உருவகப்படுத்தாமையால், இஃது ஏகதேச உருவாக அணி ஆயிற்று.

**62] சொல்லையும் பொருளையும் வரிசையாக(நிரலாக) நிறுத்தி, நேரே பொருள் கொள்வது ------------------- அணியாகும்.**

1] வேற்றுமையணி

**2] நிரல்நிறை அணி**

3] ஏகதேச உருவக அணி

4] வேற்றுப்பொருள் வைப்பணி

**விளக்கம் :-** நிரல்நிறை அணி :- சொல்லையும் பொருளையும் வரிசையாக(நிரலாக) நிறுத்தி, நேரே பொருள் கொள்வது நிரல்நிறை அணியாகும்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது** – இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள், “இல்வாழ்க்கையின் பண்பு எனப்படுவது அன்பு காட்டுவது. இல்வாழ்க்கையின் பயன் எனப்படுவது அறம்செய்தல் என்பதாகும்.” என்பது இக்குறட்பாவின் கருத்து. இக்குறட்பாவில் அன்பும் அறனும் முதலடியில் அமைந்துள்ளன. அடுத்த அடியில், அச் சொற்களோடு முறையாகப் பொருந்தும் வரிசைப்படி பண்பு, பயன் என்னும் சொற்கள் அமைந்துள்ளன. எனவே, இது நிரல்நிறை அணி.

**63] அறிவன், கணியன், நாழிகைக் கணக்கர் என அழைக்கப்படுபவர் யார்?**

1] கணிதத்தை பற்றி கணித்துக் கூறுபவர்கள்

2] அறிவியலைப் பற்றி கணித்துக் கூறுபவர்கள்

3] கடலைப் பற்றி கணித்துக் கூறுபவர்கள்

**4] வானியலைப் பற்றி கணித்துக் கூறுபவர்கள்**

**64] பண்டைத் தமிழர் சூரியன் முதலான ஒன்பது கோள்களைக் -------------- எனவும், அசுவினி முதலான இருபத்தேழு விண்மீன்களை ------------எனவும் பகுத்துக் கூறினர்.**

1] அண்டம், உலகம்

2] சக்கரம், சாஸ்திரம்

**3] கோள்மீன், நாள்மீன்**

4] இவற்றில் ஏதுமில்லை

**65] அறிவன் - என்று அழைக்கப்படும் கோள் எது?**

1] வியாழன்

2] வெள்ளி

**3] புதன்**

4] செவ்வாய்

**66] வெளித்தோற்றம் கொண்டு ஒருவரை அளவிடுதல் தவறானது. அவரின் உள்ளப் பண்பைக் கொண்டே அளவிடுதல் நலம். பலாப்பழம் முள்ளு முள்ளாகத் தோற்றமளிக்கும். ஆனால், உள்ளுக்குள் சுவைமிகுந்த சுளைகள் காணப்படும். - என்று கூறியவர் யார்?**

1] திரு.வி.க

2] அண்ணா

3] பெரியார்

**4] கிருபானந்த வாரியார்**

**67] வீணை கோணலாக இருப்பினும் இனிய இசை வெளிப்படும். எட்டிப்பழம் மேலே பளபளவென இருந்தாலும் தொட்டாலே கசக்கும். நாவற்பழம் கருமை. ஆனால் இனிக்கும். பாம்புக்குட்டி பளபளவென இருக்கும். ஆனால், கொடிய நஞ்சைக் கக்கும். ஆகவே, உருவு கண்டு எள்ளாமை வேண்டும். - என்று கூறியவர் யார்?**

1] திரு.வி.க

2] அண்ணா

3] பெரியார்

**4] கிருபானந்த வாரியார்**

**68] ----------- என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் ஆகிய பொருள்கள் குறித்து வரும்.**

1] போல

2] ஒப்ப

**3] உம்**

4] ஐ

**69] அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை ; பண்பும் பயனும் அது - இந்த குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] வேற்றுமையணி

**2] நிரல்நிறை அணி**

3] ஏகதேச உருவக அணி

4] வேற்றுப்பொருள் வைப்பணி

**70] பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் ; இறைவன் அடிசேரா தார் - இந்த குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] வேற்றுமையணி

2] நிரல்நிறை அணி

**3] ஏகதேச உருவக அணி**

4] வேற்றுப்பொருள் வைப்பணி

**71] வியா என்றால் ----------- எனப் பொருள்படும். எனவே, வானில் ----------- கோளாக வலம் வருவதனை வியாழன் என அழைத்தனர்.**

1] சிறிய

**2] பெரிய**

3] அகலமான

4] நீளமான

**72] வெண்மை நிறமுடைய கோள் -----------.**

1] செவ்வாய்

2] புதன்

3] வியாழன்

**4] வெள்ளி**

**73] கெடுப் பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**

**எடுப்ப தூஉம் எல்லாம் மழை - இதில் ---------------- அளபெடுத்து வந்துள்ளது.**

1] அடிமுரண்தொடை

2] அடிஇயைபுத்தொடை

3] அடிஎதுகைத்தொடை

**4] அடியளபெடைத் தொடை**

**74] கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்**

**கொடிகள் வானம் படிதர மூடும்**

**கண்ட பேரண்டத் தண்டலை நாடும்**

**கனக முன்றில் அனம்விளை யாடும் - இதில் ---------------- அளபெடுத்து வந்துள்ளது.**

1] அடிமுரண்தொடை

**2] அடிஇயைபுத்தொடை**

3] அடிஎதுகைத்தொடை

4] அடிமோனைத் தொடை

**75] இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**

**துன்பம் உறுதல் இலன் - இதில் ----------------- அளபெடுத்து வந்துள்ளது.**

**1] அடிமுரண்தொடை**

2] அடிஇயைபுத்தொடை

3] அடிஎதுகைத்தொடை

4] அடிமோனைத் தொடை

**76] இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**

**வன்சொல் வழங்கு வது - இந்த குறளில் வருவது?**

**1] இணை மோனை**

2] பொழிப்பு மோனை

3] ஒரூஉ மோனை

4] கூழை மோனை

**77] துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்**

**திறந்தாரை எண்ணிக்கொண் டற்று. - இந்த குறளில் வருவது?**

1] இணை மோனை

**2] பொழிப்பு மோனை**

3] ஒரூஉ மோனை

4] கூழை மோனை

**78] நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**

**மறைமொழி காட்டி விடும் - இந்த குறளில் வருவது?**

1] இணை மோனை

2] பொழிப்பு மோனை

**3] ஒரூஉ மோனை**

4] கூழை மோனை

**79] தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**

**வானம் வழங்கா தெனின் - இந்த குறளில் வருவது?**

1] இணை மோனை

2] பொழிப்பு மோனை

3] ஒரூஉ மோனை

**4] கூழை மோனை**

**80] விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**

**துள்நின்று டற்றும் பசி. - இந்த குறளில் வருவது?**

**1] மேற்கதுவாய் மோனை**

2] கீழ்க்கதுவாய் மோனை

3] முற்று மோனை

4] ஒரூஉ மோனை

**81] இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**

**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. - இந்த குறளில் வருவது?**

1] மேற்கதுவாய் மோனை

**2] கீழ்க்கதுவாய் மோனை**

3] முற்று மோனை

4] ஒரூஉ மோனை

**82] கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்கு தக - இந்த குறளில் வருவது?**

1] மேற்கதுவாய் மோனை

2] கீழ்க்கதுவாய் மோனை

**3] முற்று மோனை**

4] ஒரூஉ மோனை

**83] ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**

**மாற்றுவார் ஆற்றலின் பின் - இந்த குறளில் வருவது?**

**1] இணை எதுகை**

2] பொழிப்பு எதுகை

3] ஒரூஉ எதுகை

4] கூழை எதுகை

**84] அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்**

**மல்லல்மா ஞாலம் கரி - இந்த குறளில் வருவது?**

1] இணை எதுகை

**2] பொழிப்பு எதுகை**

3] ஒரூஉ எதுகை

4] கூழை எதுகை

**85] அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்**

**கிவ்வுலகம் இல்லாகி யாங்கு - இந்த குறளில் வருவது?**

1] இணை எதுகை

2] பொழிப்பு எதுகை

**3] ஒரூஉ எதுகை**

4] கூழை எதுகை

**86] பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**

**பற்றுக பற்று விடற்கு - இந்த குறளில் வருவது?**

1] இணை எதுகை

2] பொழிப்பு எதுகை

3] ஒரூஉ எதுகை

**4] கூழை எதுகை**

**87] அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**

**பிற்பயக்கும் நற்பா லவை - இந்த குறளில் வருவது?**

**1] மேற்கதுவாய் எதுகை**

2] கீழ்க்கதுவாய் எதுகை

3] முற்றெதுகை

4] கூழை எதுகை

**88] இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**

**துன்பம் உறுதல் இலன். - இந்த குறளில் வருவது?**

1] மேற்கதுவாய் எதுகை

**2] கீழ்க்கதுவாய் எதுகை**

3] முற்றெதுகை

4] கூழை எதுகை

**89] துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**

**துப்பாய தூஉம் மழை - இந்த குறளில் வருவது?**

1] மேற்கதுவாய் எதுகை

2] கீழ்க்கதுவாய் எதுகை

**3] முற்றெதுகை**

4] கூழை எதுகை

**90] a wolf in sheep's clothing - என்பதற்கு இணையான தமிழ்ப்பழமொழி எது?**

**1] பசுத்தோல் போர்த்திய புலி**

2] ஒற்றுமையே வலிமை

3] நெருப்பில்லாமல் புகையாது

4] வல்லான் வகுத்ததே வாய்க்கால்

**91] union is strength - என்பதற்கு இணையான தமிழ்ப்பழமொழி எது?**

1] பசுத்தோல் போர்த்திய புலி

**2] ஒற்றுமையே வலிமை**

3] நெருப்பில்லாமல் புகையாது

4] வல்லான் வகுத்ததே வாய்க்கால்

**92] no smoke without fire. - என்பதற்கு இணையான தமிழ்ப்பழமொழி எது?**

1] பசுத்தோல் போர்த்திய புலி

2] ஒற்றுமையே வலிமை

**3] நெருப்பில்லாமல் புகையாது**

4] வல்லான் வகுத்ததே வாய்க்கால்

**93] might is right - என்பதற்கு இணையான தமிழ்ப்பழமொழி எது?**

1] பசுத்தோல் போர்த்திய புலி

2] ஒற்றுமையே வலிமை

3] நெருப்பில்லாமல் புகையாது

**4] வல்லான் வகுத்ததே வாய்க்கால்**

**94] many things fall between the cup and the lip - என்பதற்கு இணையான தமிழ்ப்பழமொழி எது?**

1] பசுத்தோல் போர்த்திய புலி.

2] ஒற்றுமையே வலிமை

3] நெருப்பில்லாமல் புகையாது

**4] கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை**

**95] கீழ்க்காணும் தொடரில் சரியான விடையை தேர்வு செய்க.**

1] யானையின் கண் சிறியது

2] யானையின் கண்கள் சிறியது

**3] யானையின் கண்கள் சிறியன**

4] யானையின் கண் சிறியன

**96] Refrigerator - என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

1] குளிர் பதனப் பெட்டி

**2] குளிரூட்டும் பெட்டி**

3] குளிர்சாதனப் பெட்டி

4] குளிர் காக்கும் பெட்டி

**97] பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள்?**

1] பகுதி, சந்தி

2] இடைநிலை, சாரியை

**3] பகுதி, விகுதி**

4] விகுதி, சாரியை

**98] மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

1] குணநலம் நலனே சான்றோர் பிறநலம்

2] சான்றோர் நலனே குணநலம் பிறநலம்

**3] குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**

4] சான்றோர் குணநலம் நலனே பிறநலம்

**99] மரக்கலத்தை குறிக்கும் நான்கு சொற்களை தேர்ந்தெடுக்க.**

1] கலம், தோணி, புணரி, மிதவை

2] கலம், பரிசில், ஓடம், பரவை

**3] கலம், வங்கம், புணை, அம்பி**

4] கலம், பரிசில், ஆழி, பஃறி

**100] மதுரையில் உலகத்தமிழ் மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது?**

**1] 1981**

2] 1982

3] 1983

4] 1984

winmeen.com